1777

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## படகோட்டி

அவளுடைய புத்ர வாத்ஸல்யத்தின் வேகம் பிறருடைய பணமென்றும், கள்ளப் பொருள் என்றும் அறியும் சக்தியையே அடித்துக்கொண்டு போய்விட்டது...

தன்னைப் பெற்ற தந்தை என்றே நம்பினாள்...ஆனால் நம்பிக்கையில்?...

பிறருடைய வியாதியைக் கண்டு அசங்கியப்பட்டுப் பயப்படும்போது தன்னுடைய மர்மம் எப்படி தெரிய முடியும்?....

இவை போன்ற அருமையான விஷயங்களை இதனுள் படியுங்கள்...

---

**உள்ளே இருக்கும் அறிவிப்பை
தயவுசெய்து
கவனியுங்கள்.**

நவம்பர் 1939

படகோட்டி [ஆரம்பம்]

அணா 2

நவம்பர் மாதம் முதல் வாரத்தில்
வெளிவருகிறான்

# பிரகலாதா

*

ஒவ்வொரு நடிகரும் ஒவ்வொரு மணி
என்பதை நேரில் இப் படத்தை
பார்க்குங்கால் நீங்களே அறிவீர்கள்

மாஸ்டர் டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர். சந்தானலக்ஷ்மி,
ஆர். பாலசுப்ரமணியம், கே. மகாதேவ அய்யர்,
பேபி சேதுராமன், என். எஸ். கிருஷ்ணன்,
டி. ஏ. மதுரம், டி. எஸ். துரைராஜ்,
பி. எஸ். ஞானம்

ஆகியோர் நடித்தது

டைரக்டர் :
பி. என். ராவ்.

தயாரிப்பு :
கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸ்.

---

கைவசமுள்ளவை :

எம். கே. தியாகராஜபாகவதர் நடித்த அம்பிகாபதி

கக்கையா நடித்த மார்க்கண்டேயா
(தெலுங்கு)

---

ஒரு விசேஷச் செய்தி

அம்பிகாபதியில் நடித்த அதே அசல் நடிகர்கள் பாடும்
அம்பிகாபதி பாடல்களை ஓடியன் ரிகார்டுகளில் கேளுங்கள்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.


| மலர் 16 | பிரமாதி ஸ்ரீ ஐப்பசி மீ நவம்பர் 1939 | இதழ் 11 |
|---|---|---|


OFFICE OF THE REGISTRAR 30 MAR 1940 MADRAS

## திருமால் துதி

ஐயனே நின்னை மறந்தேன் அநுதினமும்
பையவே போற்றிப் பணியேனுல்—செய்ய
சுடராழிக் கையனே ! தொல்வினை யேற்கிந்த
இடராழி நீக்க விரங்கு. 1

கைவிட்டாற் காவேன் கருதரிய கார்முகிலே
மெய்விட் டொளிரும் மிகுநிதியே !—பொய்விடாப்
பேதையேன் செய்யும் பிழையைப் பொறுத்தருளின்
வாதையெனக் குண்டோ வழுத்து ? 2

செந்தாமரைக் கழலென் சென்னிமிசை வீற்றிருக்க
வந்தா தரிக்கின் வருந்துவனே ?—பைந்தார்
துளவங் கமழ்மேனித் தோன்றலே ! வெண்ணெய்
களவிற் கவர்கள்வா ! காண். 3

முன்னை வினையின் முழுகிக் கிடப்பேனை
இன்னும் அதனுள் இருத்துவையோ ?—பொன்னின்
மணிசேர் திருமார்பா ! வல்வினையேற் குன்றன்
பணிசேர் பதமருளப் பார். 4

பார்க்கும் இடமெல்லாம் பைந்துழாய் நீண்முடியாய்
பேர்க்கரிதாய் நிற்கும் பெருமானே !—நீர்க்குள்
குளிரென்ன நிற்பாய் கொடும்பிறவி நீங்க
மிளிரருளால் நோக்காய் விரைந்து. 5

—திரு. ராகவாசாரியர்.

# காங்கிரஸ் கோரிக்கையும் பிரிட்டனும்

## ஸர். ராதாகிருஷ்ணன் அபிப்பிராயம்

காங்கிரஸ் மந்திரிகள் ராஜீனமாச் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பது மிகவும் துர்பாக்யமான விஷயமே.

ஜனநாயகத்தில் தான் இந்தியாவுக்கு அனுதாபம். ஆனல் பிரிட்டிஷ் சர்க்கார் தனது கொள்கையில் உண்மை உணர்ச்சியை காட்டவேண்டும். சுதந்தரத்தில் பற்றுள்ளதாகச் சொல்லிக்கொள்ளும் பிரிட்டன், அநேக தேசங்களை அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருப்பது எவ்விதம் நியாயமாகும். இதை உலகத்தார் கண்டித்தே தீருவார்கள். பிரிட்டன் தனது பிற்போக்குக் கொள்கையை விட்டு விட வேண்டும்.

காந்திஜீயின் கோரிக்கை மிகவும் மிதமானதும் நியாயமானதுமாகும். இதில் மைனரிட்டி பிரச்னையை சாக்காகக் கூறி, காங்கிரசின் விரோதத்தை சம்பாதித்துக்கொள்வது புத்திசாலித்தனமல்ல.

காங்கிரஸ் மந்திரிகள் மைனரிட்டிகளின் நலனை பாதுகாப்பதற்காக பெரு முயற்சி செய்திருக்கிறார்கள். ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தினல், மைனரிட்டிகள் சம்பந்தமாக காங்கிரஸ் மீது சாட்டப்படும் குற்றம் ஆதாரமற்றது என்பது நன்கு நிரூபணமாய் விடு மென்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது. இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் கோரிக்கையை நிராகரித்து விட்டால், பிரிட்டனின் உண்மை உணர்ச்சியில் ஜனங்களுக்கு சந்தேகமேற்பட்டு விடும். அது தேசத்தின் நம்பிக்கையை இழக்க நேரிடும். காங்கிரசின் மதிப்பும், ஜனங்கள் மீதுள்ள பிடியும் பலப்படும். ஆகவே, காந்திஜீயின் தலைமையில் காங்கிரசின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதே புத்திசாலித்தனமாகும்.

18338

# உள்நாட்டுச் செய்திகள்

## தமிழ் நாட்டில் காங்கிரஸ் மெம்பர்கள்

த. நா. கா. கமிட்டித் தலைவர் ஸ்ரீ ஒ. பி. ராமசாமி ரெட்டியார் பின்வருமாறு அறிவிக்கிறார் :—

இந்த வருஷத்தில் தமிழ் நாட்டில் மொத்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்ந்த விபரம் ஜில்லாவாரியாக கீழே தரப்பட்டிருக்கிறது :—

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 6,700 | மதுரை | 9,409 |
| செங்கல்பட்டு | 9,266 | ராமநாதபுரம் | 7,314 |
| தெ. ஆற்காடு | 9,509 | காரைக்குடி | 17,696 |
| வடக்கு தஞ்சை | 13,408 | திருநெல்வேலி | [illegible]1,748 |
| தென் தஞ்சை | 22,306 | கோயம்புத்தூர் | 6,531 |
| திருச்சி | 14,033 | சேலம் | 9,711 |
| திண்டுக்கல் | 12,106 | வட ஆர்காடு | 12,528 |
| | | மொத்தம் | 1,72,345 |

### வங்கத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள்

வங்காளத்திலும் ஸுர்மா பள்ளத்தாக்கிலும் இந்த வருஷம் சேர்ந்திருக்கும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சுமார் 4,64, 167. சென்ற வருஷம் 4, 86, 968.

## ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி

### 309 ஸ்தானங்களில் 269 காங்கிரசுக்கு

சென்ற மாதம் நடைபெற்ற 6 ஜில்லா போர்டுகளில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. ஒவ்வொரு போர்டுக்கும் 52 ஸ்தானங்கள். மொத்தம் 309 ஸ்தானங்களில் காங்கிரஸ் 269 ஸ்தானங்களைக் கைப்பற்றி யிருக்கிறது. கோதாவரியில் ஒரு ஸ்தானத்திற்கும், கோயம்புத்தூரில் 2 ஸ்தானங்களுக்கும் இன்னும் முடிவு தெரியவேண்டியிருக்கிறது:—

| ஜில்லாக்கள். | காங்கிரஸ். | காங்கிரஸ் அல்லாதார். | | | |
|---|---|---|---|---|---|
| நெல்லூர் | 49 | 3 | கோயம்புத்தூர் | 42 | 8 |
| தஞ்சாவூர் | 49 | 3 | சேலம் | 38 | 14 |
| ராமநாதபுரம் | 49 | 3 | கி. கோதாவரி | 42 | 9 |

## தேசிய தொழில் திட்டக் கமிட்டிக்கு

### பரோடா சர்க்கார் ரூ. 2500 அளித்தது

தேசிய தொழில் திட்டக் கமிட்டிக்கு பரோடா சர்க்கார் ரூ. 2500 அளித்திருக்கிறது. பூரணமாக ஒத்துழைப்பதாகவும் தெரிவித்திருக்கிறது. பரோடா கைத்தொழில் டைரக்டர் ஸ்ரீ. வி. ஏ. மேத்தா கமிட்டியில் சமஸ்தானத்தின் பிரதிநிதியாக யிருக்கிறார். அவர் குடிசைத் தொழில் ஸப் கமிட்டியின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்:

## கராச்சியில் அவசர வேலைகளுக்காக

### தொண்டர் படை அமைக்கப்பட்டது

அவசர காலங்களில் போலீஸை அதன் வழக்கமான வேலைகளைச் செய்யவிட்டு மற்றவேலைகளை செய்வதற்காக ஒரு தொண்டர் படை அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த படைக்கு போலீஸ் பயிற்சி, ரோந்து போக்கு வரத்தை கவனிப்பது முதலிய பயிற்சிகள் அளிக்கப்படும். இதில் சுமார் 200 நகரவாசிகள் தாங்களாகவே சேர்ந்திருக்கிறார்கள்.

## டெலிகேட்கள் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது

### அ. இ. கா. கமிட்டிக் காரியதரிசி அறிக்கை

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி மாகாண கமிட்டிகளுக்கு விடுத்திருக்கும் ஒரு சுற்றறிக்கையில், காங்கிரஸ் வருஷாந்திரக் கூட்டம் மார்ச் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதால், டெலிகேட்கள் தேர்தலும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது எனக் கூறியிருக்கிறார். டெலிகேட்கள் தேர்தல் சம்பந்தமாக, வாக்காளர் ஜாபிதாவை முடிப்பது, அது சம்பந்தமான தகராறுகளைத் தீர்ப்பது முதலிய ஆரம்ப வேலைகளைப் பற்றி, அ. இ. கா. கமிட்டி அனுப்பிய டைம்டேபிளை மாகாணக் கமிட்டிகள் தங்கள் சௌகரியத்துக்குத் தக்கப்படி மாற்றிக் கொள்ளலாம். ஆனால் முதலில் மாற்றப்பட்ட டைம்டேபிள்கள், விவரங்கள் ஆலோசனைகள் இவைகளுக்காக அ. இ. கா. கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்றுகுறிப்பிட்டிருக்கிறார்.

### மற்றொரு அறிக்கை.

"திருத்தப்பட்ட சட்ட திட்டத்தின்படி ஒரு லக்ஷம் ஜனத்தொகையிருக்கும் ஜில்லாவுக்கு ஒரு டெலிகேட் என்ற முறையிலிருக்கும்" என்று அ. இ. கா. கமிட்டி காரியதரிசி மாகாண கமிட்டிகளுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். ஆகையால் 1931 ஸென்சஸ்படி காங்கிரஸ் மாகாணங்களிலுள்ள ஜில்லாக்களின் ஜனத்தொகையின்படி ஜாக்கிரதையாகத் தயாரிக்கப்பட்ட லிஸ்ட்டையும் மாகாணங்களிலுள்ள சமஸ்தானங்களின் ஜனத்தொகை லிஸ்டையும் அனுப்பும்படி அறிக்கை கூறுகிறது.

## காங்கிரஸ் ப்ரதிநிதித்வம் வாய்ந்ததா?

'தேசத்தின் சார்பாக காங்கிரஸாவது பேசவாவது' என்றும் இன்னம் பலவித புரளிகளும் யார் யாரோ கட்டிவிடும் இக் காலத்தில் காங்கிரஸின் பலம் என்ன வென்பதை கவனிப்பது நலம். புள்ளி விவரங்கள் வருமாறு:—

மேல் சபையில்

| | | | |
|---|---|---|---|
| மொத்த ஸ்தானங்கள் | 55 | அசெம்பிளியில் | 215 |
| காங்கிரஸுக்கு | 28 | காங்கிரஸுக்கு | 162 |

## ஜில்லா போர்டுகள்

| | | | |
|---|---|---|---|
| நீலகிரி, கிருஷ்ணா, மலையாளம் ஜில்லா போர்டுகள் தவிர ஸ்தாபனங்கள் | 1067 | ஜில்லா போர்டுகள் மொத்தம் | 24 |
| | | காங்கிரஸ் ஆதிக்கத்தில் | 22 |
| | | நகர சபைகள் மொத்தம் | 81 |
| இவைகளில் காங்கிரஸுக்கு | 929 | காங்கிரஸ் ஆதிக்கத்தில் | 62 |

# வெளிநாட்டுச் செய்திகள்

## பிரிட்டிஷ், பிரெஞ்சு, துருக்கி ஒப்பந்தம்

பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட அங்காரா உடன்படிக்கையில் ஒன்பது ஷரத்துக்கள் இருக்கின்றன. அவை பின்வருமாறு :—

1. துருக்கி ஆக்கிரமிக்கப்பட்டால், பிரிட்டனும் பிரான்ஸும் அதற்கு உதவியளிக்கும்.

2. ஆக்கிரமிப்பின் விளைவாக மத்தியதரைக்கடலில் துருக்கியோ அல்லது பிரிட்டனும் பிரான்சுமோ போரில் இறங்க வேண்டி நேரிட்டால், மூன்று தேசங்களும் பரஸ்பர உதவி அளித்துக் கொள்ளும்.

3. கிரீஸுக்கும் ருமேனியாவுக்கும் பிரிட்டனும் பிரான்சும் அளித்துள்ள உத்தரவாதங்களின் விளைவாக அவை யுத்தத்தில் ஈடுபட்டால், துருக்கி அவற்றிற்கு உதவியளிக்கும்.

4. 2, 3 ஷரத்துக்களில் குறிப்பிட்டுள்ளவாறு இல்லாமல் வேறு ஆக்கிரமிப்புகளின் விளைவாக பிரிட்டனும் பிரான்சும் போரில் ஈடுபடவேண்டி நேரிட்டால், மூன்று ஒப்பந்த நாடுகளும் உடனே கலந்தாலோசிக்கும். துருக்கி, குறைந்தபக்ஷம், பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் அனுசரணையாயுள்ள நடு நிலைமையை வகிக்கும்.

5. உடன்படிக்கை நாடுகளில் எதுவேனும் உதவியளிப்பதாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் எந்த ஐரோப்பிய நாடாவது தாக்கப்பட்டால், அல்லது உடன்படிக்கை நாடுகளில் எதன் பந்தோபஸ்தையேனும் பயமுறுத்தும் மறைமுக ஆக்ரமிப்பு நேரிட்டால், அதே மாதிரி கலந்தாலோசிக்கப்படும்.

6. இந்த உடன்படிக்கை எந்த தேசத்துக்கும் எதிரிடையாக செய்து கொள்ளப்பட்டதல்ல என்ற உறுதியளிக்கப்படுகிறது.

7. இந்த உடன்படிக்கை ஷரத்துக்கள், மூன்று நாடுகளையும் இரண்டிரண்டாகக் கூடக் கட்டுப்படுத்தும்.

8. இந்த உடன்படிக்கையை அமுலுக்குக் கொண்டு வருவதன் விளைவாக உடன்படிக்கை நாடுகள் போரில் ஈடுபட வேண்டி நேரிட்டால், அவை தனித்தனியாக சமாதானம் செய்துகொள்ள மாட்டா.

9. உடன்படிக்கை 15 வருஷ காலத்துக்கு அமுலிலிருக்கும். 15 வருஷங்களுக்குப் பின் ரத்தாகாவிடில் இன்னம் 5 வருஷ காலத்துக்கு அமுலிலிருக்கும்.

ரஷ்யாவுடன் யுத்தத்தில் ஈடுபட்டாக வேண்டியவாறு எந்த நிர்ப்பந்தப் பொறுப்பும் துருக்கிக்கு இராதென்ற விலக்கு உடன்படிக்கையில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

### தென் ஆப்ரிகாவின் யுத்த கால திட்டம்

1. தேசத்தின் வர்த்தக, சுரங்க செல்வத்தை அபிவிருத்தி செய்ய திட்டங்களை வகுப்பது. 2. நேச தேசங்களுக்கு வேண்டிய சப்ளைகளைத் தயாரிப்பது. 3. எதிர் காலத்தை யுத்தேசித்து ராணுவ ஏற்பாடுகளைச் செய்வது.

—ஜெனரல் ஸ்மட்ஸ்.

### ஸ்லவேகியாவுக்கு போலீஷ் பிரதேச தானம்

ஸ்லவேகியாவுக்கு போலந்தில் சில பிரதேசங்கள் அளிக்கப்படுமென்று ஸ்லவேகியஸ்தானீகரிடம் ஹிட்லர் அறிவித்தார்.

## ரஷ்ய போலந்தில் சோஷலிஸம்

### நிலமில்லாதவர்களுக்கு நிலமும் கால் நடைகளும்

### பெரிய ஜமீன்கள் குடிகளுக்கு விநியோகம்

போலந்தில் ரஷ்யா வசமான மேற்கு உக்ரேனில் முன்னிருந்த பெரிய ஜமீன் எஸ்டேட்டுகளை யெல்லாம், பிரித்து கிருஷிகர்களுக்கு விநியோகிக்கும் வேலை முடிந்துவிட்டதாக மாஸ்கோவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. 1,78,000 கிருஷிக குடும்பங்களுக்கு 17,90,000 ஏகர் நிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

நிலமில்லாமல் கூலிக்காரர்களா யிருந்த 3,000 குடும்பத்தினர், இம் மாதிரி சொத்துரிமை பெற்றனர். மிகச் சிறிய புலன்களை வைத்துக்கொண்டிருந்த 1,75,000 ஏழைக் குடியானவர்களுக்கு அதிக நிலம் கிடைத்திருக்கிறது. ஆயிரக்கணக்கான கால்நடைகள், குதிரைகள், வெள்ளாடுகள், பன்றிகள் முதலியன கிருஷிகர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன.

### லுவாவில் அரசியல் நிர்ணய சபை

சமீபத்தில் மேற்கு உக்ரேன் வாசிகள் இரகசிய வோட்டின் மூலம் தேர்ந்தெடுத்த தேசிய அரசியல் நிர்ணய சபை லுவாவில் கூடியது. பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:—

1. மேற்கு உக்ரேனில் ஸோவியத் ஆட்சி முறையை ஏற்படுத்துவது. 2. மேற்கு உக்ரேனை ஸோவியத் உக்ரேனுடன் சேர்த்துவிடுவது. 3. நிலச்சுவான்கள் அனுபவித்து வந்த எஸ்டேட்டுகள் பறிமுதல். 4. பெரிய தொழில்களும், பாங்குகளும் சர்க்கார் வசமாவது.

## அமெரிக்க நடுநிலைமை சட்டம் நிறைவேறியது

### செனேட் அங்கிகாரம்

### யுத்த தளவாட ஏற்றுமதித் தடை ரத்து செய்யப்பட்டது

அமெரிக்க நடுநிலைமை மசோதா செனேட் சபையில் நிறைவேறியது. அதற்குச் சாதகமாக 63 வோட்டுகளும், எதிராக 30 வோட்டுகளும் பதிவாயின.

மசோதா இனி பிரதிநிதி சபைக்குப் போகிறது. அங்கு மசோதா சிறிய மெஜாரிடியுடன் நிறைவேறும். செவ்வாய்க்கிழமையன்று பிரதிநிதி சபையில் விவாதம் ஆரம்பமாகும். இரண்டு சபைகளும் சேர்ந்து ஆலோசித்த பின் அடுத்த வெள்ளிக்கிழமை அது இறுதியாக நிறைவேறும் என்று கருதப்படுகிறது.

யுத்த தளவாடங்களை போர் செய்யும் நாடுகளுக்கு அனுப்பக்கூடாதென்ற தடை ஷரத்து செனேட்டில் ரத்து செய்யப்பட்டது. (வோட் 67: 22.)

# புஸ்தக விமர்சனம்

ஸ்ரீமதி V. K. லக்ஷ்மிசௌரிராஜன்.

## மங்கையர்க்கரசியின் காதல்

முதலிய கதைகள் 2-ம் பதிப்பு

மகரிஷி. வ. வே. சு. ஐயர் எழுதியது

அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை.

விலை. சாதா பைண்டு அணு. 12. கலிகோ. ரூ. 1.

இப் புத்தகம் பல சிறுகதைகள் அடங்கியது. மொத்தம் 8 கதைகள் உள்ளன. இவைகளை ஒரு முறையாகப் பிரிக்கலாம். தமிழ் நாடு 3, பாரசீகம் 1, கிரீஸ் (Greece) 1, முகலாய்க் கதை 1, உலகயுத்தக் கதை 2. கனம். ராஜாஜி இப்புத்தகத்துக்கு முகவுரை எழுதியிருக்கிறார். அவர் சொல்கிற படி இப்புத்தகத்தைப் படித்தால் வாசகர் மனத்தில் பரிசுத்தமான உணர்ச்சிகளும் உன்னதமான எண்ணங்களும் தோன்றும்.

இக்கதைகள் கவிதை நிரம்பியவைகளாய் ரஸபாவோபேதமாய் இருக்கின்றன. முக்கியமாக அழேன் ழக்கே என்னும் உலகயுத்தக் கதை படிப்பதற்கு மேல் மேல் ஆவலை உண்டு பண்ணுகிறது. லைலி மஜனூன் என்பது பாரசீக கவி நிஜாமியால் வரையப் பெற்றது. லைலாவின் காதல் கைகூடாமல் போவதும் கடைசியில் அவள் காதலன் காயிஸ் (மஜனூன்) அவள் மடியிலேயே இறப்பதும் மனதை உருக்குவனவாய் இருக்கின்றன. இதேமாதிரி மங்கையர்க்கரசியின் காதலும் முடிவடைகிறது.

இப்புத்தகத்திற்காக தமிழ் மக்கள், பதிப்பாளர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டு மென்பதே என் கருத்து.

## தேவி சௌதுராணி

ஸ்ரீ. பங்கிம்சந்திரர் எழுதியது

ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன் பி. ஏ., மொழி பெயர்ப்பு:

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் சென்னை. விலை. ரூ. 1-4.

பெயர்பெற்ற வங்க ஆசிரியர் ஸ்ரீபங்கிம்சந்திரரின் இந்த நவீனத்தைப் படித்தோம். இப்புத்தகம் மிகவும் நன்றாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. கதைப்போக்கு ஒரு நூதன வசீகரத்தை உள்ளதாக அமைந்துள்ளது; மிகவும் அழகாக சித்தரிக்கப்பட்ட வர்ணனைகளும், கம்பீரமான கற்பனைகளும் மிகவும் அழகாக வரையப் பட்டுள்ளன. தேவி சௌதுராணியின் வீரமும், அவளுடைய காதலும், பெண்மையும் ஒவ்வொரு இந்தியப் பெண்மணியும் பெருமையாக சொல்லிக் கொள்ளக் கூடியவையே. தேவி சௌது ராணி ஒரு புராதன சக்தி; ஒரு வாக்யத்தின் பொருள். உயிரை எழுப்பக் கூடிய நவீனம். யாவரும் படிக்கத்தக்கது.

## உயிரின் உண்மை — நாம் உயிரா? உடலா?

திரு. டி. எஸ். இராஜுப்பிள்ளை இயற்றியது:
விலை அணு 8. அருளாலயம், 43, அரமனைக்கார வீதி,
ஜி. டி. மதராஸ்.

83 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில் ஆசிரியர் உயிருக்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி விளக்குகிறார். குரு சீட சம்பாஷணை முறையில் எழுதப்பட்டுள்ளது. இதில் ஸ்ரீ சங்காருடைய அத்வைதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு "உலகம் பொய், உடல் நாமல்ல; உயிரே உண்மை" என்பதை பாமரர்களுக்கு நன்றாகப் புரியும்படியான நடையில் எழுதியிருக்கிறார். ஆங்காங்கே ஆங்கில விளக்கமும் அடங்கியுள்ளது.

## சுவாமி சிவானந்தர் உபதேசமாலை

திரு. பரலி. சு. நெல்லையப்பர் மொழி பெயர்ப்பு. விலை அணு. 4. லோகோபகாரி ஆபீஸ், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை. (அணு 5 ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.)

இந்த உபதேசமாலையில் 313 மணிகள் அடங்கியுள்ளன. தென்னாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் தோன்றி வடக்கே ரிஷிகேசத்தில் தவம்புரியும் பெரியாரான ஸ்வாமி, இப்புத்தகத்தில் பாரத தேசத்தின் அரிய வேதாந்த ஞானத்தை மிகவும் அழகான எளிய நடையில் எழுதியுள்ளார். இதில் முக்கியமாக கீதையில் இருக்கும் அரிய பெரிய உபதேசங்களைப் புகுத்தி யிருக்கிறார். ஒருவர் ஞான மார்க்கத்தில் செல்ல வேண்டுமானல் த்யான மார்க்கத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பது முக்கிய கருத்து. இது தமிழ் மக்கள் யாவரும் படிக்கவேண்டிய புத்தகம்.

## அரசகுல யூதன்

அல்லது **அடிமையை மணந்த சீமான்**

திரு. வி. மரிய இருதயம் பிள்ளை எழுதி

மதுரை ஸ்ரீமதி மரியஇருதய ரஞ்சிதம் அம்மாளால் பிரசுரிக்கப்பட்டது
விலை உள்நாடு ரூ. 0 12 0 வெளிநாடு ரூ. 1

லியூ வாலஸ் என்னும் பெயர் பெற்ற அமெரிக்க ஆசிரியர் எழுதிய பென்-ஹூர் என்னும் கதையைத் தழுவி எழுதியது.

ஹிட்லர் ஜெர்மனியில் யூதர்களை பகிஷ்கரிக்கும் இக்காலத்தில் ஒரு யூத அரசகுல சீமானைப்பற்றி படிப்பதற்கு ஒருவித ஆவல் ஏற்படுகிறது. யூதா என்னும் அரசகுல யூதன் தன் விரோதியான மேஸலா என்பவனுடைய சூழ்ச்சியினுல் ஒரு அடிமையாகிறான். அவன் தாயாரும் ஸகோதரியும் ஒரு இருட்டறையில் அடைக்கப்பட்டு வியாதிக்காளாகிறார்கள். யூதா பிறகு ஒரு ரோமானிய மானுமியால் விடுவிக்கப்பட்டு எஸ்தர் என்னும் மாதின் மீது காதல் கொள்கிறான். பிறகு தன் விடா முயற்சியால் தாயையும் ஸகோதரியையும் விடுவித்து எஸ்தரையும் மணம் புரிகிறான். இயேசுகிருஸ்து அப்போது அந்த ஊருக்கு வந்து அவர்களுடைய வியாதியைப் போக்குகிறார். இவர்கள் கிருஸ்தவர்கள் ஆகிறார்கள். யூதாவின் மாத்ரு பக்தியையும், ஸகோதர வாஞ்சையையும் நன்றாக முன்னுக்குக் காட்டுகிறார். நற்குணத்துக்காக ஏழை அடிமையான எஸ்தரை யூதா மணப்பது அவனுடைய நற்குணத்தைக் காட்டுகிறது. இப் புத்தகத்தின் பாடமும் அதுவே.

# மகாத்மாவின் மணிவாக்கு

## காங்கிரஸ்காரருக்கு எச்சரிக்கை

சில காங்கிரஸ்காரர்கள் பொறுமையின்மையால் பீடிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். ஏகாதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்கென்ற, அவர்கள் நினைக்கும், ஒரு யுத்தத்துக்கு தங்கள் எதிர்ப்பைக் காட்ட ஏதாவது செய்துகொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒரே ஜனநாயக ஸ்தாபனத்துக்குள்ள ஒரே வழியின் மூலம் காங்கிரஸ் தெரிவித்திருக்கும் கருத்துக்கு விரோதமாக காங்கிரஸ்காரர்கள் நடந்து கொள்வது காங்கிரஸ் நோக்கத்தையே தோற்கடித்து விடும். அவர்கள் அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் தங்கள் அபிப்ராயத்தைச் சொல்லி விட்டார்கள். ஆகவே, காரியக் கமிட்டியோ, அ. இ. கா. கமிட்டியோ வேறு விதமாக முடிவு செய்யும் வரையில் நேர்முகமான நடவடிக்கைகள் எதுவும் எடுத்துக்கொள்ளாமல் பொறுத்துக்கொண்டிருக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். தன்னுடைய மெம்பர்களை திறமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத ஒரு ஸ்தாபனத்தினிடம் எதுவும் நம்பிக்கை வைக்கமுடியாது. ஒரு சைன்னியத்திலுள்ள சோல்ஜர்கள், பொது லக்ஷியத்திற்கு உதவி செய்கிறோம் என்ற தவறான எண்ணத்துடன், தலைமை ஸ்தலத்தால் தீர்மானிக்கப்பட்டதற்கு விரோதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதாக கற்பனை செய்து பாருங்கள். இதனால் தோல்வியல்லவோ ஏற்பட்டுவிடும். ஆகையால், நெருக்கடியான இந்த சமயத்தில், கட்டுப்பாட்டை மீறியது என்று தோன்றக்கூடிய எதையும் செய்ய வேண்டாமென்று காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரி காரியங்கள், காங்கிரஸின் அந்தஸ்தையும், செல்வாக்கையும் குறைத்துவிடுமென்பது அவர்களுக்குத் தெரியாமலா போய்விடும்.

## சுய நிர்ணய உரிமை

சுதந்தரம் வேண்டுமா, வேண்டாமா என்று சொல்ல ஜனங்களை அழைப்பது நியாயமா? உனக்கு சுதந்தரம் வேண்டுமாவென்று ஒரு அடிமையிடம் கேட்டுத்தான் ஆகவேண்டுமா? எப்படி சுதந்தரம் கொடுப்பது என்ற முறையைப்பற்றி அடிமையிடம் கேட்கலாம். அரசியல் நிர்ணய சபை இந்த வேலையைச் செய்யமுடியும். எங்களுக்கு டொமினியன் நாட்டு அந்தஸ்து வேண்டுமா, அல்லது வேறென்ன வேண்டும் என்று முடிவு செய்யவேண்டியது இந்த அரசியல் நிர்ணய சபைதான். அதன் முடிவு அதற்கு அதிகமாகவும் இருக்கலாம்; குறைவாகவுமிருக்கலாம். தங்களுடைய சுதந்தரம் எத்தன்மை வாய்ந்ததாய் இருக்க வேண்டுமென்று முடிவு செய்ய ஜனப் பிரதிநிதிகளுக்குப் பூர்ண சுதந்திரம் இருக்கவேண்டும்.

மைனாரிடிகள் காங்கிரஸுக்கு விரோதமாக ஏவி விடப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது. இவர்கள் யாருடனும் காங்கிரஸுக்கு ஒரு சண்டையுமில்லை. இந்தியாவின் சுதந்தரத்துக்கு முரணானதாயில்லாத வரையில் ஒவ்வொரு மைனாரிடியின் ஒவ்வொரு உரிமையையும் காங்கிரஸ் காப்பாற்றும்.

அரசியல் நிர்ணய சபையில், ஷெட்யூல் வகுப்பினர், முஸ்லீம்கள் மற்றும் எல்லா வகுப்பினருக்கும் பூர்ண பிரதிநிதித்வம் இருக்கும். தங்களுடைய விசேஷ உரிமைகளைப் பற்றி அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். விவசாயிகளின் பிரதிநிதிகளாக வந்தால், சமஸ்தானாதிபதிகளும், ஜமீன்தார்களும்கூட ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. முஸ்லீம்கள், ஷெட்யூல் வகுப்பினர், கிறிஸ்துவர்கள், பார்ஸிகள், யூதர்கள், சீக்கியர்கள், பிராம்மணர்கள், பிராம்மணரல்லாதார்கள் மற்றும் யாவருடைய உரிமைகளாயிருந்தாலும் பாமர மக்களின் உண்மை நலன்களுக்கு முரணுள்ள எந்த நலனையும் சுதந்தர இந்தியா அனுமதிக்காது.

## "என் நம்பிக்கை சிதறுண்டது"

ஆனால் வைஸ்ராயையோ பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையையோ நான் குற்றம் சொல்லவில்லை. சுதந்தரம் என்பது பிரிட்டிஷார் தயவையோ அல்லது வேறு யார் தயவையோ நம்பியிருக்கும் விஷயமல்ல.

ஜனங்கள் தயாராயிருக்கும்போது அது வரும். இந்திய மக்கள் அதற்குத் தயாராயில்லையென்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நினைக்கிறார்கள் போலும். அதற்கு இந்திய மக்களுக்குப் பிரதிநிதித்வம் வகிக்க முயற்சிக்கும் காங்கிரஸோ, அல்லது இதர ஸ்தாபனங்களோ, தமது பலத்தையும் வசதிகளையும் ஒருங்கு சேர்த்து திரட்டிக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய குழப்பத்தின் கடுமையான அனுபவத்திலிருந்து பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் புதிய ஆட்களாக மாறி இருப்பார்களென்று நம்பினேன், இப்போதைக்கு அந்த நம்பிக்கை தூள் தூளாக சிதறடிக்கப்பட்டு விட்டது.

## அஹிம்ஸா போரா பிரயோஜனமற்றது?

பிரிட்டிஷ் சர்க்கார் இப்போது அனுஷ்டிக்கும் கொள்கையை நான் கூறியபடி ஒழுக்க அளவுகோலால் கவனிக்க வேண்டுமென்று சர். சாமுவேல் ஹோர் அறிவித்ததைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். ஹோரின் பிரசங்கமே பிரிட்டிஷ் சர்க்காரின் கடைசி வார்த்தையென்றால், பிரிட்டனுக்கு ராஜீய ஒழுக்கமில்லை யென்று துணிச்சலாக கூறுகிறேன். ஒத்துழையாமை பலன் பெற முடியாத ஒரு தத்துவமென ஹோர் பரிகசித்திருக்கிறார். அவர் நினைப்பதைப்போல் அதற்கு பலன் கிடைக்காமல் போய்விடாதென்று நிச்சயமாக நம்புகிறேன். அது, தன்னால் நல்லது ஏற்படுமென்பதை கோடிக் கணக்கான இந்தியர்களுக்கு நிரூபித்திருக்கிறது. நான் நம்புவதைப்போல் காங்கிரஸ் அஹிம்ஸையே கடைப்பிடித்தால் மீண்டும் நிரூபிக்கும்.

காங்கிரஸின் முடிவு தவிர்க்கமுடியாத கடமையின் அழைப்பாகும். அது காங்கிரஸை பெரும்பாலும், பிரிட்டிஷ் சர்க்காரையும் சோதனைக்குள்ளாக்குகிறது. இருவரும் அவரவர்கள் பலத்தை காட்டினால் அதனால் (காங்கிரஸ் முடிவு) நன்மைதான் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை.

## அஹிம்சையே சிறந்த மார்க்கம்

இந்தியா, தன் பிரதிநிதியான காங்கிரஸ் மூலமாக தன் உரிமையை நிலைநிறுத்த போராடி வருகிறது. சுத்தி மூலமாக வல்ல; அஹிம்சா முறையில் இவ்விதம் செய்து உலகத்தில் ஒரு ஸ்தானமும், அந்தஸ்தும் இந்தியா பெற்றுவிட்டது, ஆயினும் இந்தியா தன் கனவான ஸ்வதந்திரத்தை யடையாது, இன்னம்—வெகுதூரத்திலல்ல—தூரத்திலிருக்கிறது. இந்தியாவின் முறை உலகத்தினர் கவனத்தை கவர்ந்து விட்டது. இந்த மாதிரியான

இந்தியா இந்த யுத்தத்தில் தன் பங்கை செய்யவேண்டும். இப்போது ஏற்படும் சமாதானம் வெறும் கேலியாக இருக்கக் கூடாதென்றும், ஜெயித்தவர்கள் பங்கு போட்டுக்கொண்டு தோற்றவரை அவமானப்படுத்தக் கூடாதென்றும் வற்புறுத்தவேண்டும், காங்கிரஸ் சார்பாக பேச உரிமையுள்ள ஜவாஹர்லால் நேரு இந்த யுத்தத்தில் சமாதான மென்றால் அது ஜாதி பத்யப்பிடியிலுள்ளவர்களுக்கு விடுதலையாக இருக்க வேண்டுமென கூறியுள்ளார். ஒரு உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள ஆயுதம் அளிக்கும் சக்தியானது அஹிம்சை அளிக்கும் சக்திக்கு முன் நிற்க முடியாது. அஹிம்சை மார்க்கம் நியாயம் காட்டி பாதுகாக்கும். ஆனல் ஆயுதம் நியாயம் அல்லது காரணம் காட்டமுடியாது. காரணம் காட்டுவதாகப் பாசாங்குதான் செய்யும்.''

## சுதந்திர இந்தியாவுக்கு விரோதி இல்லை

எப்படியாகிலும் இந்தியா உண்மையான அஹிம்சா தர்மத்தை ஒத்துக்கொள்ளு மென்ற நம்பிக்கையால் நான் எனது சகாக்களை ராணுவப்பயிற்சி பெறும்படி வற்புறுத்த வில்லை. கத்திச் சண்டை, சிலம்பம் இவைகளையும் நான் வேண்டா மென்றேன். முன்பு அவ்விதம் நடந்து கொண்டதற்காக நான் இன்னும் கூட வருந்த வில்லை.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளைவிட இந்தியாவே அஹிம்சை முறையை அறிந்து கொள்ளு மென்ற நம்பிக்கையே எனக்கு இன்னம் உண்டு. தங்களை வதைப்பவர்கள் மீது துவேஷமின்றி அடிபட்டு மாள விரும்பும் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்களும் இந்நாட்டிலிருக்கிறார்கள். சுடப்பட்டு மாளவேண்டுமென்று நான் பெருங் கூட்டங்களில் கூறியதுண்டு. உப்பு சத்யாக்ரகத்தின்போது ஆயிக்கணக்கான வீரப்பெண்களும் ஆடவர்களும், போரில் சோல்ஜர்கள் படும் கஷ்டம் படவில்லையா? இந்தியா படை யெடுக்கப்படுமானல் உப்பு சத்தியாக்கரகத்தில் பட்டதற்குமேல் அதிக கஷ்டங்களே படவேண்டும். வேறில்லை.

ஒரு விஷயத்தை மறந்து விடக்கூடாது. இந்தியா நிராயுதபாணியாக விருந்தால் பீரங்கிக் குண்டுகளாலும் விஷவாயுவாலும் நாசமாக வேண்டியதில்லை. மாகினட் அரண் ஏற்பட்டதாலேயே ஸீக்பிரட் அரண் தோன்றியது. இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருப்பதாலேயே இந்தியாவை ஆயுத பலத்தால் தற்காக்க வேண்டுவது அவசியமாகிறது. சுதந்திர இந்தியாவுக்கு விரோதியே கிடையாது.

'இந்தியாவில் பல ராணுவ ஜாதியார்கள் இருக்கிறார்கள். இந்தியா அவர்களுக்கும் தேசமே. அவர்கள் விரோதியை எதிர்த்து போராட விரும்புவார்கள்' என்று சில காங்கிரஸ்வாதிகள் கூறுவார்கள். இது உண்மையே. நான் இப்பொழுது காங்கிரஸ்வாதிகளைப் பற்றி மட்டுமே பேசுகிறேன். படையெடுப்பின்போது அவர்கள் எப்படி நடப்பார்கள்? நாம் நமது கொள்கைக்காக சாகத் தயாராக விருந்தால்தான் நாம் இந்தியா முழுவதையும் நமது கொள்கைக்கு மாற்ற முடியும்.

### உலகம் எதிர்பார்க்கிறது

இந்தியாவிடமிருந்து புதியதும் அற்புதமானதுமான ஒன்றை உலகம் எதிர்பார்க்கிறது. காங்கிரஸ், பலாத்கார முறையையே மேற்கொண்டால் பெருமை கிடையாது. காங்கிரஸின் கீர்த்திக்கு காரணம் அது அஹிம்சா முறையை அரசியல் ஆயுதமாகக் கொண்டிருப்பதே. காங்கிரஸ் அஹிம்சா முறையில் பிரதிநிதி யென்ற தோரணையில் நேச நாடுகளுக்கு உதவி செய்

தாலும் நேச நாடுகளின் நோக்கத்திற்கு மதிப்பு ஏற்படும். பரிபூரண அஹிம்சா தர்மத்தை காரிய கமிட்டி மெம்பர்கள் வீரத்துடனும் உண்மையாகவும் ஏற்க மறுத்து விட்டார்கள்.

ஆகவே எனது நிலைமை என்னையே பொறுத்ததாக விருக்கிறது. நான் ஒருவனே பரிபூர்ண அஹிம்சையை அநுசரிப்பதாக விருந்தாலும் நான் ஒரு நம்பர் அடங்கிய மைனுரிட்டியாக யிருப்பதுபற்றிக் கவலை யில்லை. எனது கொள்கையைப் பிரசாரம் செய்தே தீருவேன். அஹிம்சா முறையை இந்தியா திரஸ்கரித்தால், உலகத்தின் கடைசி நம்பிக்கையும் பாழாகி விடும்.

## போராட்ட தளபதி

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காக காங்கிரஸ் ஆவலைக் காட்டுவதென்றால், அந்த தீர்மானம் காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பாடு, அஹிம்சை தர்மம் ஆகியவற்றை பரீக்ஷிப்பதைப் போன்றதுமாகும்.

தீர்மானத்தில், வார்த்தைகளில் எதுவும் சொல்லாவிடினும், சட்ட மறுப்புப் போராட்டம் ஆரம்பித்து நடத்துவது, நிர்வகிப்பது, ஆதிக்கம் வகிப்பது ஆகியவைகள் கமிட்டியின் இஷ்டத்தின்பேரில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனக்கு எந்த அதிகாரமும் என்றும் இருந்தது கிடையாது. பதிவு செய்துகொண்டுள்ள, கொள்ளாத ஏராளமான காங்கிரஸ்காரர்கள் நான் சொல்லுவதை பூர்ணமாக உணர்ந்தும் தங்கள் இஷ்டத்துடனும் கமிட்டி மூலமாகவோ அல்லது "யங்-இந்தியா" "நவஜீவன்" அல்லது இப்போது "ஹரிஜன்" பத்திரிகைகள் மூலமோ நான் இடும் கட்டளைகளை நிறைவேற்றி வந்தனர்.

### தளபதி கட்டளைகள்

இதைத் தவிர எனக்கு வேறு அதிகாரம் எதுவுமில்லை ஆகையால் எப்போது என்னுடைய கட்டளைகள் செய்கையில் பரிமளிக்காது வற்றிவிட்டதாக நான் உணர்கின்றேனோ அப்போது நானே பேச்சுமூச்சின்றி ஒதுங்கி விடுவேன்.

நான் போராட்டத்தை ஆதிக்கம் வகித்து நடத்தவேண்டியிருந்தால் ரொம்ப கண்டிப்பாக கட்டுப்பாட்டை அனுஷ்டிக்க வேண்டுமென்பதை நான் கோருவேன். இப்பொழுது நான் காணும்வரையில், காங்கிரஸ்காரர்கள் நேர்த்தியான கட்டுப்பாட்டுடனும், சத்யம், அஹிம்சை ஆகிய தத்துவங்களை இதுவரைப் போற்றி கடைப்பிடித்து வந்ததைவிட இன்னம் அதிகமாக கடைப்பிடிக்காத வரையிலும் பெருவாரியான சட்டமறுப்பு இயக்கம் சாத்தியமில்லை. அதிகாரிகள் குத்திவிட்டு நம்மை இந்த நடவடிக்கையை மேற்கொள்ளச் செய்தாலொழிய இது நடக்கவேண்டியதுமில்லை.

வாழ்வா ? சாவா ? என்ற போராட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். நம்மைச் சுற்றி பலாத்காரம் இருக்கிறது. தேசத்திற்கு இது ஒரு மகத்தான சோதனை காலம். எதை மறைத்து வைப்பதாலும் நமது நோக்கம் பூர்த்தியடையாது.

எந்த காங்கிரஸ்காரரிடமாவது அஹிம்சை பக்தி இல்லை யென்றால் ஆங்கிலேய அதிகாரிகளிடமோ, அல்லது நமது இயக்கத்திற்குக் குறுக்கே நிற்கும் நம் தேசத்தவர்களிடமோ உள்ள மானக்கசப்பை உதறித்தள்ள முடியவில்லை யென்றால், அவர்கள் அதனை பகிரங்கமாகக் கூறிவிடவேண்டும்.

அப்படிக் கூறிவிட்டு தற்சமயமுள்ள காரியக் கமிட்டியைப் போக்கிவிட்டு, அஹிம்சா தர்மத்தையும் விட்டுவிடவேண்டும். இந்தமாதிரி தள்ளிவிடுவது பெரிய துக்ககரமான விஷயமுமாகாது. ஆனால் கமிட்டியின்பேரிலும் அதன் கட்டளைகளிலும் பூர்ண நம்பிக்கை யில்லாது அதனை வைத்துக்கொண்டிருப்பது ஒரு முதல்தரமான பாதகமாகும்.

எனக்குத் தெரிந்த வரையிலும் சத்யம், அஹிம்சை ஆகியவற்றை கடமையாக கடைப்பிடித்தாலொழிய இந்தியா சுதந்திரமடைவது சாத்யமில்லை. என்னுடைய சேனாதிபதித்துவத்தின்கீழ் உள்ள சைன்யம் நான் அளிக்கும் ஆயுதத்தின் திறமையைப்பற்றி சந்தேகிக்கத் தலைப்பட்டால், என்னுடைய தலைமைப் பதவியால் பயனேற்படாது. என்னுடைய தேசம் சரண்டைப்படுவதை மற்றவர்கள் எவ்வளவு தீர்மானமாக எதிர்க்கிறார்களோ அவ்வளவு தீர்மானமாக நானும் எதிர்ப்பவன். அன்னிய ஆட்சியிலிருந்து தேசம் விடுதலை பெற வேண்டுமென மகா தீவிரவாதியான ஒரு காங்கிரஸ்வாதி எவ்வளவு துடிக்கிறானோ அவ்வளவு துடிப்பு எனக்கும் இருக்கிறது.

ஆனால், ஒரு ஆங்கிலேயரிடம்கூட எனக்கு வெறுப்பு கிடையாது. இதற்காக உலகத்தில் எனக்கு யாரிடமும் வெறுப்பு கிடையாது. நான் நேச தேசத்தினருக்கு உதவாமலிருக்கலாம். ஆனால், அவர்கள் நாசமடைய வேண்டுமென்று நான் விரும்பவில்லை. காங்கிரஸின் நம்பிக்கை, என்னுடைய நம்பிக்கை ஆகிய எல்லோர் நம்பிக்கையையும் புண்படுத்தும் விதத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடமாற்றிவிட்டதாயினும், அவர்கள் திகைத்துக்கொண்டிருப்பதின் விளைவாக எவ்வித லாபமும் பெற நான் விரும்பவில்லை.

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் யுத்த நாடுகள் இடையே சமரச மேற்படவேண்டுமென்பதுதான் என்னுடைய முயற்சியும், பிரார்த்தனையுமாக இருக்கும். இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் ஒரு கௌரவமான ஒப்பந்தம் ஏற்படுமென்றும், இந்தியா சம அந்தஸ்தில் இருக்குமென்றும், பிறகு இன்று மனுஷ்ய சமூகத்தை அவமதிக்கும் வாழ்வை ஒரு சுமையாகக் கருதச் செய்யும் இந்த கோரமான சம்பவத்தை நிறுத்த வழி கண்டு பிடிப்பதில் என்னுடைய எளிய பங்கையும் செய்யலாமென்றும் ஒரு ஆசையை என் மனதில் வளர்த்துவந்தேன். ஆனால் பகவான் வேறு விதமாக நினைத்துவிட்டார்.

---

## வார்தா கல்வி திட்டத்தின் நோக்கம்

"வார்தா கல்வித் திட்டத்தில் உங்களுக்கு நம்பிக்கை யிருக்குமானால், அதை நடத்திச் செல்லுங்கள். காங்கிரஸ் பதவியிலிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அது தனது நிர்மாணவேலையை விடாமல் நடத்திக் கொண்டேதான் செல்லும்"...காங்கிரஸ் சத்திய பாதையில் சென்று கொண்டிருப்பதால் அதிலிருந்து ஒருக்காலும் பின்வாங்கப் போவதில்லை. உண்மை தேச ஊழியர்களைத் தயார் செய்வதே வார்தா கல்வியின் நோக்கம். இதில் பயிற்சி பெறும் மாணவர்களுக்குச்சகல கல்வியும் ஒரு தொழிலை அடிப்படையாகக் கொண்டே அளிக்கப்பட்டுவரும். 'தக்ளி' அதிக மலிவாகவும், சுலபமாக கிடைக்கூடியதாக இருப்பதாலும், அதையே ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். சிவகிராமத்தில் இம்மாதிரி பயிற்சி பெறும் 40 மாணவர்கள் 70 நாட்களில் ரூ. 10 தாங்கள் தக்ளி

மூலம் நூற்ற நூலைக் கொண்டு சம்பாதித்திருக்கிறார்கள். இம்மாதிரியாக 5 கோடி மாணவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் நூல் நூற்கத் தொடங்கிவிட்டால், லக்ஷக் கணக்கான கஜ நூல்கள் தயாராய்விடும். இந்த நூலால் தயாரிக்கப்படும் கதர் ஆடையை ஜனங்கள் வாங்குவது என்று ஏற்பட்டு விட்டால், இந்தியாவின் பணம் அனுவசியமாக அயல் நாடுகளுக்குச் செல்வதும் நின்று விடும்.

---

# "மெஜாரிடி கட்டுக் கதை"

"பொது நன்மையை முன்னிட்டு, காங்கிரஸ் கேட்ட யுத்த நோக்கங்களை அறிவிப்பதற்கு மைனாரிடிகள் பிரச்னை தடையா யிருக்கிறதென்று பிரிட்டிஷ்காரர்களும், பிரிட்டிஷ் பத்திரிகைகளும் சொல்லுவது துக்க மளிப்பதா யிருக்கிறது. காங்கிரஸ் கேட்டது மிகவும் சரிதான் என்பது உணரப்பட்டாலொழிய, அம்மாதிரி அறிக்கை வராது. அப்படி வராவிட்டால், காங்கிரஸ்காரர்கள் அதனால் கலங்கவேண்டிய அவசியமில்லை. நாம் தகுதி பெற்றவுடன் சுதந்திரம் பெறுவோம். ஆனால் எதையும் நம்பும் ஒரு உலகத்தின்மீது, மைனாரிடி பிரச்னை வாதத்தை எறியாமலிருந்தால், பிரிட்டிஷ் சர்க்காருக்கும், நேச நாடுகளின் லக்ஷியத்திற்கும் நல்லது.

### ஆசை இயற்கையே!

'இன்னும் கொஞ்சகாலம் நாங்கள் இந்தியாவை வைத்துக்கொண்டிருக்க விரும்புகிறோம்' என்று பிரிட்டிஷார் சொன்னால், அது யோக்கியப் பொறுப்பானதாயிருக்கும். அப்படி ஆசைப்படுவதில் தவறு ஒன்றுமிராது. இந்தியாவை அவர்கள் ஜெயித்துப் பிடித்துக்கொண்டார்கள்.

ஜெயிக்கப்பட்டவர்கள் வெற்றிகரமாக கலகம் செய்தால் அல்லது ஜெயித்தவர்களின் மனச்சாக்ஷி உறுத்தி அவர்கள் பச்சாத்தாபப்பட்டால், அல்லது ஜெயிக்கப்பட்ட பிரதேசத்தில் இனி ஒன்றும் லாபம் இல்லை என்று ஏற்பட்டாலொழிய ஜெயிக்கப்பட்ட நாடுகளைத் திருப்பிக்கொடுத்து விடுவதில்லை.

பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் அலுப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த யுத்தத்தில் ஏற்படப்போகும் பைத்தியக்காரத்தனமான வதை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால், எல்லா விஷயங்களிலும் பரிசுத்தமான மனச்சாக்ஷியுடன், சீக்கிரத்தில் யுத்தத்தை முடித்துவிடுவார்களென்று நினைத்தேன். பரிசுத்தமா யிருப்பது என்றால் இந்தியா விஷயத்தில் அப்படி இருப்பார்களென்று நினைத்தேன். ஆனால், இந்தியாவை அவர்கள் அடிமை நாடாக வைத்துக்கொண்டிருக்கும் வரையில், அவர்கள் ஒருநாளும் அப்படி இருக்கமுடியாது.

### காங்கிரஸின் உரிமை

இந்தியா பூராவுக்குமாகப் பேசுவதற்குக் காங்கிரஸ் ஒன்றுக்குத்தான் பிரத்தியேக உரிமையுண்டென்று நான் சொன்னதில் பலருக்கு என்மீது கோபம் என்று எனக்குத் தெரியும். காங்கிரஸுக்குத்தான் உரிமை யுண்டென்பது வரட்டு ஜம்பமல்ல. காங்கிரஸ் அமைப்பின் முதல் ஷரத்திலேயே அது வெளிப்படையா யிருக்கிறது. இந்தியா பூராவுக்கும் காங்கிரஸ் சுதந்தரம் பெற விரும்புகிறது; அதற்காகவும் வேலை செய்கிறது. மெஜாரிடிக்காகவோ, மைனாரிடிக்காகவோ காங்கிரஸ் பேசவில்லை. ஒரு வித்தியாசமு

மில்லாமல் எல்லா இந்தியர்களுக்கும் அது பிரதிநிதித்துவம் வகிக்க முயற்சிக்கிறது. ஆகையால், சுதந்திர உரிமை கோரிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டால், காங்கிரஸை எதிர்ப்பவர்களைப்பற்றிக் கவலையே படக்கூடாது. அதை ஆதரிப்பவர்கள் காங்கிரஸின் கோரிக்கைக்கு இன்னும் அதிக பலம் கொடுக்கிறார்கள்.

பிரிட்டன்தான் இந்தியாவை ஆளவேண்டும். பல்வேறு உரிமைகளையும் வற்புறுத்துபவர்களிடையே மத்யஸ்தம் செய்து வைப்பதற்காக பிரிட்டன் இருக்கவேண்டும் என்று சொல்லும் இந்தியர்களை உலகத்தினருக்குக் காட்டி இதுவரையில் பிரிட்டன் இந்தியாவைக் கட்டி யாண்டுவந்திருக்கிறது. இப்படிச் சொல்லுபவர்கள் எந்தக் காலத்திலும் இருப்பார்கள்.

## யாரெல்லாம் மைனாரிட்டி ?

இந்தியாவை அடிமையாகவே வைத்துக்கொண்டிருப்பதற்கு இதையெல்லாம் பிரிட்டன் காரணமாகச் சொல்லுவது நியாயமா என்பதுதான் கேள்வி. அல்லது பிரிட்டன் தன் தவறை உணர்ந்து தன் சர்க்கார் எப்படியிருக்க வேண்டுமென்பதைப் பற்றி இந்தியா தானாக முடிவு செய்துகொள்ளட்டும் என்று முடிவு செய்துவிடவேண்டும். இந்த மைனாரிடிகள் யார்? இவர்களெல்லோரும், மதம் அரசியல், சமூகம், ஆகிய துறைகளிலுள்ள மைனாரிடிகள் தானே. உதாரணமாகப் பாருங்கள் :

| | |
|---|---|
| முஸ்லீம்கள்—மதம். | சமஸ்தானாதிபதிகள்—அரசியல். |
| பிராம்மணர்கள்—சமூகம். | பிராம்மணரல்லாதார்—சமூகம். |
| லிங்காயத்துக்கள்—சமூகம். | சீக்கியர்கள்—சமூகம். |
| ஜெயினர்கள்—சமூகம். | பிராடெஸ்டன்ட், ரோமன் கதோலிக்க |
| ஜமீன்தார்கள்—அரசியல். | கிறிஸ்துவர்கள்—மதம். |

தங்கள் சமூகம் வேறு என்று அகில இந்திய ஷியா மகாநாட்டுக் காரியதரிசியிட மிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. இந்த களேபரத்தில் யார் மெஜாரிட்டி ? துர்ப்பாக்கியம் பிடித்த இந்தியாவில், துரதிர்ஷ்ட வசமாக முஸ்லீம்கள், கிறிஸ்துவர்களிடையேயும் கூட பிளவு இருக்கிறது. யார் யார் அதிகமாகக் கூச்சல் போட்டு உபத்ரவம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் அங்கீகாரம் கொடுப்பது பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை. மைனாரிடிகளைப்பற்றி நான் கற்பனைச் சித்திரம் எதுவும் எழுதிக்காட்டவில்லை. அதெல்லாம் ப்ரத்தியக்ஷமாக நடப்பவை. காங்கிரஸ்கூட இந்தக் கோஷ்டிகளை யெல்லாம் கவனிக்கவேண்டி யிருந்திருக்கிறது. நான் மேலே சொன்ன ஜாப்தாவுடன் இந்தக் கோஷ்டி முடிந்து விடவில்லை. உதாரணம் தான் சொன்னேன். இன்னும் இப்படி சேர்த்துக்கொண்டே போகலாம்.

## ஹிந்துக்கள் மெஜாரிட்டியா ?

ஹிந்துக்கள் மெஜாரிடி வகுப்பினராயிருக்கிறார்கள் என்று பேசுவது தான் 'மோஸ்தர்' என்பது எனக்குத் தெரியும். ஆனால், ஹிந்து மதம் என்பது நிஷ்கர்ஷையான ஒரு வியாக்யானத்திற்குள் அடங்காத நெகிழக்கூடியதொன்று. முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் போல் ஹிந்துக்கள் ஒருமித்த ஒரே சமூகமல்ல. ஒரு மாகாண சட்டசபையிலுள்ள மெஜாரிடியை அலசிப் பார்த்தால், மைனாரிடிகள் என்று சொல்லப்படுவோரையும் சேர்த்துத்தான் அது மெஜாரிடியா யிருக்கிறது என்பது புலப்படும். அதாவது, உண்மையென்ன வென்றால், இந்தியா சம்பந்தப்பட்டவரையில், இங்கு அரசியல் கக்ஷிகள்தான் இருக்க முடியும். 'மெஜாரிடி மைனாரிடி' வகுப்புகள் என்று

இருக்கமுடியாது. மெஜாரிட்டியின் கொடுமை என்ற கூச்சல் உண்மையற்ற போலிக் கூச்சல்.

காங்கிரஸ் சர்க்கார்களைப் பற்றி முஸ்லிம் லீக் சொல்லும் புகார்களை ஒரு மத்யஸ்த சபையிடம் விடத் தயாரா யிருப்பதாக ராஜன் பாபு எழுதிய கடிதத்துக்கு ஜனுப் ஜின்னு சாஹிப் எழுதியுள்ள பதிலில், இதைத் தான் வைஸ்ராய்முன் சமர்ப்பித்திருப்பதாகவும், மைனுரிடிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு வைஸ்ராயிடமும், மாகாண கவர்னர்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் காலதாமதமில்லாமல் இதைக் கவனிக்கும்படி வைஸ்ராயைக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் சொல்லி யிருக்கிறுர்.

ராஜன் பாபுவின் நியாயமான யோசனையை அவர் நிராகரித்தது துரதிஷ்ட வசமானது. சிநேக பாவத்தில் நீட்டிய கையை மறுத்துவிட்டதாக அர்த்தமா? எது எப்படியும் இருக்கட்டும். காங்கிரஸ் மந்திரி சபைகள் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகளை வைஸ்ராய் பரிசீலனை செய்து தீர்ப்பளிப்பதை வேண்டாமென்று யாரும் சொல்லப்போவதில்லை. வைஸ்ராய் சீக்கிரத்தில் இந்தப் பரிசீலனையை ஆரம்பிப்பாரென்று நம்புவோமாக.

## சுதந்தரத்தில் நல்ல பாதுகாப்பு

முஸ்லீம்கள் மைனுரிடிகளாகப் பாவிக்கப்பட்டாலும், வேறுவிதமாகப் பாவிக்கப்பட்டாலும், அவர்களுடையவும், இதர சமூக வகுப்பினருடையவுமான மத, சமூக, கலாசார, அரசியல் உரிமைகளெல்லாம் புனிதமான டிரஸ்டாகக் கருதப்பட்டு, ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப் படவேண்டும். இந்தியா சுதந்தரம் பெற்றுவிட்டால், அதனுல் இவ்வுரிமைகள் பாதுகாக்கப் படுவது பாதிக்கப்படமாட்டாது. பார்க்கப்போனுல், அவைகளுக்குச் சகல விதத்திலும் இன்னும் நல்ல பாதுகாப்புகள் இருக்கும். ஏனெனில், தேசத்தின் பிரதிநிதிகள் சுதந்திர சாஸனத்தைத் தயாரிக்கும்போது, முஸ்லீம்களுக்கும் அல்லது அப்படி சொல்லப்படுகிற நிஜமான மைனுரிடிகளுக்கும் அதில் செல்வாக்கான ஸ்தானம் இருக்கும்.

திடீரென்று இங்கிலீஷ்காரர்கள் எல்லோரும் போய்விடுகிறுர்கள். ஆட்சி புரிவதற்கு அந்நியன் யாரும் இல்லை. அப்படியானுல் என்ன நடக்கக் கூடும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். பஞ்சாபிகள்—அவர்கள் முஸ்லீம்களா யிருந்தாலும், சீக்கியர்களா யிருந்தாலும், வேறு யாராயிருந்தாலும்,—இந்தியா பூராவையும் பிடித்துக்கொண்டு விடுவார்களென்று சொல்லக்கூடும். கூர்க்கர்களும் பஞ்சாபிகளோடு சேர்ந்துவிடக்கூடும். பெரிதும் ஹிந்துக்களாகவேயுள்ள காங்கிரஸ்காரர்களின் நிலைமை என்ன? அப்பொழுதும், அவர்கள் உண்மையிலேயே அஹிம்ஸா வாதிகளாயிருந்தால், வீரர்கள் அவர்களை ஒன்றும் தொந்தரவு செய்யாமல் விட்டுவிடுவார்கள். இந்த வீரர்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்வதைக் காங்கிரஸ்காரர்கள் விரும்பமாட்டார்கள். ஆனுல், நிராயுதபாணிகளான தம் நாட்டினரை அவர்கள் சுரண்டுவதற்கு அனுமதிக்க மறுத்துவிடுவார்கள். ஆகவே, பலசாலிகளிடமிருந்து காப்பாற்றப்படுவதற்காக, பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் இருக்க வேண்டுமென்று விரும்புவதற்கு யாருக்காவது காரணமிருந்தால், அது காங்கிரஸ்காரர்களுக்கும், காங்கிரஸால் பிரதிநிதித்வம் வகிக்கப்படும் ஹிந்துக்களுக்கும், மற்றவர்களுக்கும் தான்.

## வீண் கூச்சல்

மைனுரிடிக்கு ஆபத்து என்ற கூச்சலைக் கிளப்புவதற்கு, மெஜாரிடியிடமிருந்து ஒரு ஆபத்தும் இல்லை. இந்த மெஜாரிடி வெறும் காகித மெஜா

ரிடி தான். அது பிரயோஜனமற்றது. ஏனெனில், ராணுவ திருஷ்டியுடன் பார்க்கும்போது அது பலஹீனமானது. பலஹீனமான இந்த மெஜாரிடி ஜனநாயகத்தோடு விளையாடுவதற்குப் பக்க பலமாக பிரிட்டிஷ் துப்பாக்கிகள் இருக்கும் வரையில்தான், மைனரிடி என்று சொல்லப்படுவோரின் பயத்துக்குக் கொஞ்சம் ஆதாரம் உண்டு. இது புதிர்மாதிரி இருக்கலாம். ஆனால், இதுதான் உண்மை. ஆனல், பிரிட்டிஷார், தங்களுக்கு இஷ்டமிருக்கும் வரையில், வெற்றிகரமாக ஒருவர்மீது மற்றொருவரை ஏவி விட்டுக்கொண்டிருக்க முடியும். இந்த முறை யோக்கியப் பொறுப்பற்றதா யிருக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை.

"ஜனநாயக மல்ல"

போட்டா போட்டி உரிமைகள் வற்புறுத்தப்படும் வரையில், அவர்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லாமல் நியாயம் வழங்குவதற்கு, தாங்கள் இந்தியாவில் இருக்க வேண்டியது கடவுளின் ஆக்ஞை என்று அவர்கள் மனப் பூர்வமாக நினைப்பதா யிருக்கலாம். ஆனல், அது ஜனநாயக முறையல்ல. பாஸிஸம், நாஜிஸம், போல்ஷிவிஸம் (ரஷ்ய பொதுவுடமை) ஏகாதிபத்யம், மற்றும் வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற தத்துவங்களின் முறை. இந்த யுத்தம் நாம் கொண்டிருக்கும் மதிப்புகளின் தன்மையை மாற்றுமென்று சந்தோஷத்துடன் நம்பத் தயாராயிருக்கிறேன். இந்தியா சுயேச்சை நாடாக அங்கிகரிக்கப்பட்டால்தான், அரசியல் துறையில் அந்த இந்தியாவில் கலப்பற்ற அஹிம்ஸை இருந்தால் தான், அப்படி முடியும்."

---

# மைனரிட்டி பிரச்னை

## பண்டித நேரு

இந்தியாவில் வகுப்புவாத பிரச்னை முக்கியமென்பதை ஒவ்வொருவரும் அங்கீகரிக்கிறார். ஆனல், அப்பிரச்னை இதர முக்கிய பிரச்னைகளைத் தவிர்க்க ஒரு திரையாக உபயோகிக்கப்படுகிறது. வகுப்புவாத பிரச்னையை எல்லா அம்சங்களிலும் நிர்வகிக்க காங்கிரஸ் பூரணமாக தயாராக இருக்கிறது. ஆனல் பிரிட்டிஷ் சர்க்கார் அரசியல் முன்னேற்றத்தைத் தடுக்க வகுப்புவாத பிரச்னையை ஒரு சாக்காக உபயோகிக்கிறது.

காங்கிரஸ் இந்தியா முழுவதற்கும் பிரதிநிதி அல்லவென்று கூறப்படுகிறது. காங்கிரஸை எதிர்ப்பவர்களுக்கு காங்கிரஸ் பிரதிநிதி அல்லவென்பது உண்மையே. காங்கிரஸானது இந்தியா முழுவதற்கும் பேச முயலுகிறது:—அந்த உரிமை பாராட்டுகிறது. இதன் தாத்பரியம் என்னவென்றால், காங்கிரஸ் கோருவது எந்தத் தனிப்பட்ட கட்சியின் நன்மைக்கோ வகுப்பின் நன்மைக்கோ அல்ல; தேச முழுவதன் நன்மையை காங்கிரஸ் கோருகிறது. இந்த கோரிக்கையை எந்த இந்தியரும் ஏன் ஆட்சேபிக்க வேண்டுமென்பது தெரியவில்லை. இந்திய தேசிய கோரிக்கைக்குள் மைனரிட்டிகளின் நன்மைபோன்ற விசேஷ நன்மைகளை வற்புறுத்தலாம். அதில் தவறில்லை.

இந்தியாவில் ஜனநாயக சர்க்காரை ஏற்படுத்த காங்கிரஸ் முயலுவதால் காங்கிரஸின் கோரிக்கை ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஜனநாயகம் மைனரிட்டிகளின் உரிமைகளுக்கும் நன்மைகளுக்கும்

பூரண பாதுகாப்பு அளிக்காமல் போகாது. மைனாரிட்டி உரிமைகள் என்ற சாக்கின்பேரில் ஜனநாயகத்தையே கைவிடுவது அர்த்தமற்றதாகும்.

முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் 7 கோடி பேர்களை ஒரு மைனாரிட்டியாக கருதவே முடியாது. முஸ்லிம்கள் பல மாகாணங்களிலும் பரவியிருக்கிறார்கள். சில மாகாணங்களில் அவர்களே பெரும்பான்மையோர். அத்தகைய மாகாணங்களில் மைனாரிட்டி பிரச்னை இந்தியாவின் இதர பாகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

இவ்வித சந்தர்ப்பங்களில் ஹிந்துக்கள் முஸ்லிம்களையோ, முஸ்லிம்கள் ஹிந்துக்களையோ கொடுமை செய்யமுடியாது. ஹிந்து-முஸ்லிம்கள் சேர்ந்து மற்றெந்த மதத்தினரையும் கொடுமைபடுத்தக் கூடும். சீக்கியர் ஒரு மைனாரிட்டியே அவர்களை யாரும் கொடுமைபடுத்திவிட முடியாது.

வகுப்புவாத பிரச்னையானது இந்தியாவின் சுதந்திரத்திற்கு தடையாக உபயோகிக்கப்படுவது துரதிஷ்டமே. கடந்த இரண்டு வருஷகாலமாக காங்கிரஸ்மீதும் காங்கிரஸ் சர்க்கார்கள்மீதும் முஸ்லிம்கள் நசுக்கப்படுவதாகவும் கொடுமைபடுத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் கூறப்படுவது ஆச்சரியமாக விருக்கிறது. உண்மை என்னவென்றால் காங்கிரஸ் சர்க்கார்கள் மைனாரிட்டிகள் விஷயத்தில் மிக்க உதாரமாக நடந்து வந்திருக்கிறார்கள். எந்த மைனாரிட்டியின் உரிமைகளும் தடை செய்யவில்லை. அற்பமான ஆதாரத்துடன் மைனாரிட்டிகள் புகார் செய்தாலும் விசாரணை நடத்தியிருக்கிறோம். இதர புகார்களையும் விசாரிக்க காங்கிரஸ் தயாராக விருக்கிறது. இவ் விஷயத்தில் நமது அழைப்பு ஏற்றுக் கொள்ளப்படாமல், முற்றிலும் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகள் மீண்டும் கூறப்பட்டே வருகின்றன. காங்கிரஸ், மைனாரிட்டி பிரச்னையையும் வகுப்புவாத பிரச்னையையும் கவனித்து சமரசம் செய்ய தயாராய் இருக்கிறது. ஆனால் இந்தியாவின் ஒற்றுமை, சுதந்திரம் இவைகளுக்கும் ஜனநாயக லட்சியங்களுக்கும் விரோதமான எந்த யோசனையையும் கவனிக்கமுடியாது.

## எட்டாக்கனி......புளிக்கும்

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் வைசிராய் அறிக்கையை ஆதரித்தும், கட்சித் தலைவர்கள் விடுத்துள்ள விஞ்ஞாபனத்தை ஆதரித்து அரசியல் மாறுதல் ஏதாவது செய்தால் அதில் கண்டுள்ளவைகளை வைசிராய் ஆலோசித்துமேற்கொண்டு செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தனர். காங்கிரஸ் மெம்பர்கள் ராஜிநாமா செய்தால் தற்சமய நிலைமையில் எந்த மெம்பரும் பிரதமமந்திரிப் பதவியையோ அல்லது ஆலோசனையாளர் பதவியையோ ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 117 வயதுள்ள இந்திய ஸ்திரீ

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த தர்பான் என்ற நகரத்தில் 117 வயதுள்ள ஒரு இந்தியஸ்திரீ வசித்து வருகிறாள். இன்னமும் அவள் திடகாத்திரமாகவே இருந்து வருகிறாள். 46 வருஷங்களுக்கு முன் அவளது புருஷன் இரண்டாவது மனைவியை மணந்து கொண்டான். இந்த இரு மனைவியர்களும் தங்கள் புருஷனுடன் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருந்து வருகிறார்கள்.

## முஸ்லிம் லீகின் ப்ரதிநிதி யார்?

இந்தியாவின் சுதந்திரத்தைப்பற்றிக் காங்கிரஸின் கோரிக்கைகளை முஸ்லிம் லீகும் ஒப்புக்கொள்கிறது. காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கும் உள்ள வித்யாஸங்களை அவை தாமே பேசித் தீர்த்துக்கொள்ளும். ராஜீய முறைப்படி ராஜீயக் கக்ஷிகள் நிர்ப்பந்தமின்றி வளரும்படி விடுவது இந்தியாவுக்கு ரொம்பவும் நல்லது.

—ஹஸரத் மோஹானி.

தெலுங்கு

**பாண்டுரங்க விட்டலில்**


**சந்திரகலாவாக நடிக்கும் ?...**

---

**"மாத்ருபூமி"யில்**



**பாருங்கள்**



---

### தீபாவளிக்குக்
### கதரை உடுத்தி ஏழைகளுக்குக்
### கஞ்சி வாருங்கள்.

# மாத்ருபூமி

[கதைச் சுருக்கம்]

இன்றைக்கு சுமார் 2,000 வருஷங்களுக்குமுன், கிரேக்க நாட்டைச் சேர்ந்தவனான அலெக்ஸாந்தர் என்னும் வீரன், நம் இந்தியாமீது படையெடுத்துவந்து, போரில் அநேக சிற்றரசர்களை முறியடித்து வெற்றி கொண்டு தன் நாடு சென்றான். செல்லும் வழியில், துரதிர்ஷ்டவசமாய் இறந்துவிட்டான். இவனிடமிருந்த நான்கைந்து தளகர்த்தர், இவனின் ராஜ்யத்தை தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டனர். இந்திய ராஜ்யத்தை மினந்தர் வசப்படுத்திக்கொண்டான். நாட்டை விட்டு ஒழிந்தான் என்றிருந்த சமயம், மறுபடியும் ஓர் அந்நியன் வந்து தம்மையடக்கியாளப் பொறாத சிலர் கிளர்ச்சி செய்தனர். இத்தகைய சந்தர்ப்பத்திற்தான், நமது கதை ஆரம்பமாகிறது.

உதயகிரியில் அரசாண்டுவந்த, உக்ரசேனமகாபத்மநந்தன், தன்னையும் தன்னையொத்த சிலரையும் அடக்கி தன்னாணைக்குட்படுத்த முயலும் மினந்தருடன் எதிர்த்துப் போரிட்டு, சாமர்த்தியமாக அவனுடைய படையைச் சிதறியோடச் செய்து, வெற்றிமாலை சூடி தன் நகருக்குத் திரும்புகிறான்.

மினந்தர், ஏனைய இந்திய அரசர்கள் தன் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்கையில், இவ்வுக்ரசேனன் மட்டும் கீழ்ப்படியாமையைக்கண்டு ஆத்திரமடைந்து, எவ்வகையிலும் இவனையடக்கியே தீரவேண்டுமென்று உறுதி பூணுகிறான். இவன் ஆணைக்குட்பட்ட ஓர் இந்திய சிற்றரசனின் யோசனையைக் கேட்டு, தன் சபைக்கு உக்ரசேனனை வரவழைத்து, சமாதான முறையில் அவனை வசப்படுத்த முயலுகிறான். உக்ரசேனன் ஒரே பிடிவாதமாய், 'எங்கள் நாடு எங்களுக்கேதான் உரியது' என்று சொல்வதைக்காண, அவர்கள் வெகுண்டு, உக்ரசேனனைத் தாக்கினார்கள். தைரியமாகவும், சாமர்த்தியமாகவும் தப்பிச் செல்கிறான் உக்ரசேனன். இத்துணிகரச் செயல் கிரேக்கர் இளவரசியான ஹெலனை உக்ரசேனன் மீது காதல் கொள்ளச் செய்கிறது.

உக்ரசேனனுக்கு உளவு கூறும் சில ஒற்றர்கள் அகஸ்மாத்தாக ஹெலன் தனியே யிருப்பதைக்கண்டு, திடீரெனத் தாக்கி அவளைச் சிறை செய்து, தம் அரசன்முன் கொண்டுபோய் நிறுத்துகின்றனர். இவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, உக்ரசேனன் இவர்களையே கடிந்து, ஹெலனின் விலங்குகளை நீக்கி, அவளை அன்புடனும், பரிவுடனும் நடத்துகிறான். ஹெலன் தன் காதற் கணைகளை உக்ரசேனன்மீது வீசுகிறாள். தேசத்தை அன்னிய ஆட்சியினின்றும் விடுவிக்கவேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் உக்ரசேனனை ஹெலனின் காதற்கணைகளுக்கு இலக்காகாமற் தடுக்கிறது. நல்ல வார்த்தைகளால், அவளின் காதலை மறுக்கிறான். தன் காதல் மறுதளிக்கப்பட்டதை ஹெலனால் சகிக்கக்கூடவில்லை. அரசிக்கு ஆப்த தோழியாயிருந்த குமுதினி தான், ஹெலனின் மனப்புண்ணை ஆற்றிக்கொண்டிருந்தாள்.

தன் அருமை மகள் ஹெலன், உக்ரசேனனால் சிறையெடுத்துச் செல்லப்பட்டாள் என்பதைக் கேட்ட மினந்தர், மேலும் அதிக ஆத்திரமடைந்தான். அஸ்வகர் என்னும் ஓர் இந்திய சிற்றரசன், உக்ரசேனனது ஆட்களைக்கொண்டே அவனைக் காட்டிக்கொடுக்கச் செய்யலாம் என்று கூறியயோசனையை ஏற்று, அதன்படியே, வஞ்சகத்தால், உக்ரசேனனை வீழ்த்த முற்படுகிறான்.

அஸ்வகர், அனங்கபாலரின் படைத்தலைவனான ஜயபாலனை நாடுகிறான். அனங்கபாலரோ, மினந்தருக்கு எதிரியாக, உக்ரசேனனுடன்சேர்ந்திருப்

பவர். ராஜ்யத்திற்கும் ஏராளமான ஐஸ்வரியத்திற்கும் ஆசைப்பட்டு, ஜய பாலன், உக்ரசேனனை மிளுந்தரிடம் காட்டிக்கொடுக்க உடன்படுகிறுன்.

அமரநாதர் உக்ரசேனனின் படைத்தலைவர். சாமர்த்தியமும் அநுபவமும் வாய்ந்தவர் என்று உக்ரசேனனுல், கொண்டாடப்படுபவர். சத்ருக்களின் பலத்தையும், இன்னும் இதர விஷயங்களையும் வேவுபார்த்துவருமாறு தனக்கு நம்பிக்கையாயுள்ள பிரதாபனை, மிளுந்தரின் தலைநகராயுள்ள தக்ஷசீலத்திற்கு அனுப்பிவைக்கிறுர். பிரதாபன் வேஷம் மாறிச் சென்றும், துரதிர்ஷ்டவசமாக, கிரேக்கரிடம் அகப்பட்டுக்கொள்ள, அவர்கள் அவனை மிளுந்தர்முன்கொண்டு போய் நிறுத்துகின்றனர். அங்கு ஜயபாலனைக் காண்கிறுன். தன் சகோதரியின் கணவன் துரோகியென்பதைக்காண பிரதாபன் மனம் சொல்லொணு வேதனையும் ஆத்திரமுமடைகிறது. ஜயபாலன், மிளுந்தரிடம், பிரதாபன் தன் மைத்துனன் என்பதைச் சொல்லாமல், அவனைக் கொன்றுவிடாமல் காவலில் வைக்கச் சொல்லி, தான் உதயகிரிக்குத் திரும்புகிறுன்.

ஜயபாலன், தந்திரமாக அமரநாதரின் மனதைக் கலைத்து, பிரதாபனைத் துரோகி என்று நம்பவைத்ததுடன் நிற்காமல் அவரிடமிருந்து, தக்ஷசீலத்தில் மிளுந்தரின் சபையிலிருந்துகொண்டே உக்ரசேனனுக்கு உளவு கூறுபவன் பெயரையும் தந்திரமாக கிரகித்து மிளுந்தருக்குத் தெரிவிக்கிறுன். உடனே இதுகாறும் உக்ரசேனனுக்கு உளவு கூறிவந்த சிற்றரசன் உதயசிம்மன் மிளுந்தரால் கழுவிலேற்றப்படுகிறுன்.

வீரவனிதை குமுதினி, மகாராணியின் அந்தரங்க தோழியாயிருப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவள் தன் கணவன் ஜயபாலனிடம் அத்யந்த ப்ரேமை கொண்டவள். தன் கணவனைத் தெய்வம் எனவே எண்ணி வந்தவள். தேசபக்தியில் தன் கணவனை விடச் சிறந்தவரிருப்பதாக அவள் கருதவில்லை. ஜயபாலன் தன் மனைவியின் நிஷ்கபடத்தை யறிந்தவனுகையால், தந்திரமாக, அவள் மூலம் அரண்மனையில் நடக்கும் ரகஸியங்களையும் ராஜ்ய விவகாரங்களையும், அவ்வப்பொழுது அறிந்து மிளுந்தருக்கு அறிவித்து வந்தான். தன் மனைவியின் பெயரால் ஒரு கடிதம் எழுதி, அதை ஹெலனிடம் சேர்த்து, உக்ரசேனனின் காவலிலிருந்து, தப்பிச்செல்லும்படியாகத் தூண்டி தானும் அவளுக்கு உதவி செய்து, அவளை மிளுந்தரிடம் அனுப்பிவைக்கிறுன்.

ஹெலன் பொணையாகத் தங்களிடம் இருந்ததால், மிளுந்தர் தங்களைத் தாக்கத் துணியவில்லை என்பதை யறிந்து, சற்று மெத்தனமாயிருந்தனர் ஹெலன் தப்பிச்சென்றுவிட்டதை யறிந்ததே அனைவரும் கலந்து ஆலோசித்தனர். உதயகிரிக் கோட்டையைவிட ராஜகிரிக்கோட்டை எந்தவிதமுற்றுகையும் சமாளிக்கும் என்பதைக் கண்டு அங்கு செல்லத் தீர்மானித்தனர். ஜயபாலன் இச்சங்கதியை உடன் மிளுந்தருக்குத் தெரியப்படுத்தி உக்ரசேனன் கோட்டையைவிட்டு வெளிப்பட்டு பரந்த வெளிகளிற் செல்லுகையில் சுற்றி வளைந்து பிடித்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் கூறுகிறுன்.

இவன் அபாலோவிடம் இந்த உளவை கூறுகையில், ஏதோ வேலையாக அப்பக்கம் வந்த குமுதினியின் காதுகளில் விழுகிறது. அந்த க்ஷணம்தான், தன் கணவன் கொடியத்ரோகி என்பதை யறிகிறுள். உடன் அரசனுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்க ஓடுகிறுள். ஜயபாலன் தொடர்ந்து, பிடித்துக்கொள்கிறுன். தன் துரோகச் செயலுக்கு உடன்படுமாறு, எவ்வளவோ வாதாடியும் குமுதினி உடன்படவில்லை. பிறகு, அவள் தன் மனைவி என்றும்,

தனக்கு எவ்விதத்திலும் அடங்கி நடக்க கட்டுப்பட்டவள் என்றும் சொல்ல அவள், ஓர் துரோகியின் மனைவியாயிருப்பதைவிட, விதவையாயிருப்பது மேல் என்று தன் மாங்கல்யத்தைப் பறித்து அவன்மீது எறிந்துவிட்டு ஓடுகிறாள். ஜயபாலன், வெகுண்டு தன் கத்தியை வீச, குமுதினியின் முதுகிற் போய்த் தைத்துக்கொள்ளுகிறது. குமுதினி தரையில் விழுந்து விட்டாள். இனி, உக்ரசேனன் எப்படியும் அகப்பட்டுக் கொள்வானுகையால், தான் மினுந்தரிடம் அடையவேண்டிய வெகுமதியைப் பெறும் ஒரே எண்ணம், அவனைத் தன் மனைவியையும், குழந்தையையும் கவனிக்கச்செய்யாது, மினுந்தரை நாடி ஓடச் செய்தது.

தக்ஷசீலத்தில், மினுந்தரால் சிறையிலிடப்பட்டிருக்கும் பிரதாபன், அந்த காவலரின் மூலம் தன் அரசனுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைக்கேட்டு துடித்து, தந்திரமாகச்சிறையினின்று தப்பிக்கொள்கிறுன். நேராக குறுக்கு வழியிற் சென்று, தம்சேனையைச் சந்தித்து கிரேக்கர்படை நெருங்கிவருவதை யறிவித்து, தைரியமாகவும் சாமர்த்தியமாகவும், கிரேக்கர் சேனைமீது பெரிய பாறைகளை உருட்டித்தள்ளி, நசுக்கி யழித்துவிடுகிறுன். அபாலோ ஒருவனே உயிருடன் தப்புகிறுன் இச்செய்தியை மினுந்தருக்கறிவிக்க.

தன் கணவனுல் படுகாயமடைந்த குமுதினி, களைதெளிந்தெழுந்து, தன் காயங்களுக்கு ப்ரதம சிகிச்சையைச் செய்துகொண்டு, அரசனை எச்சரிக்க கோட்டையை நோக்கி, தள்ளாடித் தள்ளாடி விரைந்து செல்கிறுள். இவள் கோட்டைவாயிலை யடையவும், அரசன் முதலியோர் ராஜகிரியை நோக்கி, குதிரைகள்மீது புறப்பட்டு வரவும் சரியாயிருந்தது. குமுதினி சுருக்கமாக தன் கணவனின் துரோகச்செயலைக் கூறி, அரசனை முன்செல்லவொட்டாமற் தடுத்துவிடுகிறுள்.

தக்ஷசீலத்தில், ஜயபாலன் மினுந்தருக்கு 'உக்ரசேனன், இதோ பிடிபட்டு விடுவான், அதோ பிடிபட்டுவிடுவான்' என்று உற்சாகமூட்டிக்கொண்டிருக்குஞ் சமயம் 'சேனை யழிந்துவிட்டது! காட்டிக்கொடுக்கப்பட்டோம்!!' என்று கூவிக்கொண்டே அபாலோ ஓடிவருகிறுன். அருகிலிருந்த ஜயபாலனைக் கண்டதும், 'இவன்தான் காட்டிக்கொடுத்தது' என்று குற்றஞ் சாட்டுகிறுன். போதாக்குறைக்கு ஜயபாலனின் கையாள் நந்தபாலன் வேறு அங்கு வந்து, 'உம் மனைவி அரசனை எச்சரித்துவிட்டாள்' என்று கூறினுன். மினுந்தர், ஜயபாலன் தனக்குங்கூட த்ரோகஞ் செய்துவிட்டானென்று எண்ணி அவனை மறுநாள் காலையிற் தூக்கிலிட ஆக்ஞாபிக்கிறுன்.

தன் யஜமானுக்கு நேர்ந்த எதிர்பாரா ஆபத்தைக்கண்ட நந்தபாலன், உதயகிரிக்குச் சென்று, குமுதினியிடம் ஜயபாலனின் நிலைமையைத் தெரிவிக்கிறுன். தன் சகோதரன் பிரதாபனிடம் மன்றாடி, இருவருமாக, சில வீரர்களை யழைத்துக்கொண்டு, ரகஸியமாக தக்ஷசீலத்தையடைந்து பதுங்கியிருந்து, ஜயபாலனைத் தூக்கிலிடுஞ்சமயம், பெருங்குழப்பத்தை யுண்டாக்கிவிட, ஜயபாலன் தப்பிச்செல்கிறுன்.

உக்ரசேனனைத் தன்வசமாக்க, வேறுவகையறியாது, மினுந்தர் திடீரெனச் சென்று உதயகிரியை வளைத்து முற்றுகையிடுகிறுன். இரு கக்ஷியினரும் மும்முரமாகப்போராடுகின்றனர். உக்ரசேனனின் கோட்டை மினுந்தரின் படையின் தாக்குதலினுல், கலகலக்க வாரம்பித்தது. உக்ரசேனன், வேறுவகையின்றி, நிலைமையைச் சமாளிக்க சமாதானங் கோருகிறுன். சமாதானம் பேச, மறுநாள் உக்ரசேனனை தன்னந்தனியே தன் பாசறைக்கு வரவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், மினுந்தர் போரை நிறுத்துகிறுன்.

அரண்மனையில், ஒருவரும் உக்ரசேனன் சத்ருக்களின் பாசறைக்குத் தன்னந்தனியே செல்வதை ஒப்புக்கொள்ளவில்லை: வேறு இன்னது செய்வதென்றுந் தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் குமுதினிக்கு தன் கணவன், சகல சாயல்களிலும் அரசனை ஒத்திருப்பது நினைவிற்கு வருகிறது. அரசனது உடைகளைத் தன் கணவனுக்கு அணிவித்து, அவர்கள் எல்லோரையுஞ் சம்மதிக்கச் செய்து, ஜயபாலனை எதிரிகளின் பாசறைக்கு அனுப்பிவைக்கிறாள்.

கோட்டைவாயிலில், கிரேக்கர் காவலர், உக்ரசேனன் தம் பாசறையிலிருப்பதால், காவலில் சற்றே மெத்தனமாயிருந்தனர். இந்தச் சமயம் பார்த்து, அரசர் இன்னுஞ் சிலருடன், திடீரென கோட்டைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிவிடுகின்றனர். உண்மையை யறிந்த மினுந்தர், உக்ரசேனனைப் பிடிக்க துரத்திச் செல்கிறான். இருவர் படைகளும், காற்றினும் கடிதாகப் பறந்து சென்றுகொண்டிருக்கின்றன. நல்ல வேளையாக உக்ரசேனனது படை ராஜகிரிக்குச்செல்லுங் கணவாயை அடைந்து விடுகிறது. உக்ரசேனனின் படைத்தலைவர் அமரநாதர் முதலியோர், உக்ரசேனனையும், மகாராணியையும் செல்லவிடுத்து, கணவாயின்வாயிலில் நின்று கிரேக்கரை முன்னேறவொட்டாமற் தடுக்கின்றனர். போர் கடுமையாக நடக்கிறது. குமுதினிகூட வீரத்தில் ஆண் மகனை மிஞ்சுகிறாள். ஜயபாலன், தான் செய்த துரோகத்திற்கீடு செய்ய பாய்ந்து பாய்ந்து சத்துருக்களை வெட்டி வீழ்த்துகிறான். ஒரு சிலர் எத்தனை நேரமாகத்தான் மினுந்தாது பெரும்படையை ஸ்தம்பிக்கச் செய்யமுடியும்? ஒவ்வொருவராக சத்ருக்களின் வாளுக்கிரையாயினர். கடைசியில் குமுதினி, ஜயபாலன், பிரதாபன், அமரநாதர், முதலியோர் உயிரைப் பிடித்துக்கொண்டு போரிட்டுக்கொண்டிருக்கின்றனர். அரசர் கோட்டை போய்ச்சேர்ந்ததற்கடையாளமாக ஐந்து 'அதிர்வேட்டுகள்' கேட்கின்றன. அரசன் தப்பியதற்காக சந்தோஷமெய்தினர். அதேசமயம் எதிரியின் வாள் தமதுடலிற்பாய, அரசனுக்காகவும், தம் தேசத்திற்காகவும், ஆனந்தத்துடன் தம்முயிரை அர்ப்பணஞ் செய்து, வீர சுவர்க்க மெய்தினர்.

மினுந்தர் இந்திய வீரரை முன்சென்று ராஜகிரியைத் தாக்குமாறு ஆக்ஞாபிக்கிறான். தம் சகோதரர்கள், தம் தேசத்தினிடங் காட்டிய பக்தியையும், அவர்கள் வீரத்தையுங் கண்ட வீரர்கள், தாம் இதுகாறும், அன்னியருக்குதவியாயிருந்ததற்குப்பெரிதும் அவமானமும், பச்சாத்தாபமுமடைந்து, முன்செல்ல மறுத்து, தம் ஆயுதங்களை எறிந்துவிட்டனர். மினுந்தர், அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களை ஏதுஞ்செய்ய எண்ணுவது கூடாதென்று கண்டு கொஞ்சங்கடிந்து, தன்கிரேக்கவீரரை முன்செல்லுமாறு கட்டளையிட்டான்.

தன் ஒரே மகள், ஹெலன், இதுவரை பாரதமக்களுக்காக வாதாடி வந்ததைப்போல, இச்சமயமும், அவர்களுக்காகப் பரிந்து பேசினாள். கல்லும் கரையும்படியாக இருந்தது அவளது வேண்டுகோள். மினுந்தர் தன் மகள் உக்ரசேனனைக் காதலிப்பதை நன்கறிவானுகையால், அவளது இனிய வாழ்க்கையைக் கெடுக்க விரும்பவில்லை. மேலும் எத்தனை நாட்களுக்குத் தான், விழிப்புடன் கத்தியின் முனையில், சுதந்திர எழுச்சிகொண்ட தேசத்தை யடக்கியாள்வது என்று சலிப்புத்தட்டியது. தன் மகளின் வேண்டுகோளுக்கிணங்கி தன் படைகளைத் திரும்புமாறு ஆக்ஞாபித்தான்.

இரு தேசங்களுக்கும் பகை ஒழிந்து மனமொத்த நண்பரானதற்கடையாளமாக, தன் மகளை உக்ரசேனனுக்கு மணமுடித்தான். எல்லாம் இனிது முடிந்தது; மாத்ருபூமி கிரேக்க ஆட்சியினின்றும் விடுதலை யடைந்தது.

## அச்சுத் தொழில் அன்பரின் மறைவு

சென்னையிலுள்ள பிரபலமான நெல்ஸன் டைப்பௌண்டிரியின் சொந்தக்காரரான ஸ்ரீமான். ஏ. கே. மாணிக்க முதலியார், திடீரெனக் காலமாய்விட்டது பற்றி மிகவும் வருந்துகிறோம்.

அவர் புதுமாதிரியான எழுத்துக்களைத் தமிழில் உண்டாக்கி, தமிழ் வெளியீடுகள் கவர்ச்சிதரும் முறையில் வருவதற்குக் காரணமாயிருந்தவர். தாமே டைப் கட்டராக வாழ்க்கையை ஆரம்பித்து முன்னுக்கு வந்தவராதலால், அந்த தொழிலிலுள்ள கஷ்டங்களை அநுபவ பூர்வமாக அறிந்து, தொழிலாளிகளை, சாதாரண முதலாளிகளைப்போலல்லாமல், கண்ணியமாக நடத்திவந்தார்.

நாம் புதிதாக அச்சாபீஸ் ஆரம்பித்தபோது அதில் கவனிக்கவேண்டிய நுணுக்கமான விஷயங்களை வெளிப்படையாகத் தெரிவித்து அவ்வப்போது யோசனைகூறி உதவிபுரிந்து வந்தார். அவரது உதவி புரியும் குணமும், தர்மசிந்தனையும், ஆஸ்திக புத்தியும் அவருடன் பழகிய எல்லோருக்கும் அவரிடம் ஒரு தனிமதிப்பை உண்டாக்கின.

அவரது குடும்பத்தாருக்கு எமது மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நீதிப்பனுவல்

அணியெனப் படுவது அறத்தொடு கல்வி.
ஆரியர்க் கழகு அருமறை யோதுதல்.
இசையைக் கெடுப்பதில் சிறந்தது இரப்பே.
ஈதலிற் சிறந்த அறம் பிறிதில்லை.
உடம்பிற் சிறந்தது புகழுடம் பாகும்.
ஊக்கம் ஒருவர்க்கு உயர்நிலை அளிக்கும்.
என்றும் இறைவனை இறைஞ்சுதல் நன்று.
ஏக்க முடையோன் திண்மை எய்தான்.
ஐய முடையான் அறிவிற் குறைவான்.
ஒழுக்கம் வேண்டுவோன் இழுக்கம் எய்தான்.
ஓதல் வேண்டுவோன் உறுசுவை விரும்பான்.
ஔவிய முடையோன் செவ்வியன் ஆகான்.

—திரு. ராகவாசாரியர்.

ஸ்ரீ

# படகோட்டி

## 1

"உலகமெல்லாம் தங்கமயமாக்கிவிட்டு ஆதித்தன் மறையக் கிளம்பிவிட்டான்; நேரமாக வில்லையா? நளினீ! நான் சென்று வரட்டுமா? எனக்கு விடைகொடுக்கமாட்டாயா? இன்று புரட்டாசி சனிக் கிழமை. பஜனைகோஷ்டி காத்திருக்கும்" என்று பசுபதி மிகுந்த கொஞ்சலுடன் தன்னெதிரில் நிற்கும் அழகு தெய்வமென்று கொண்டாடத்தக்க அணங்கைக் கேட்டான்.

அன்புமுற்றும் உருண்டு திரண்டு கண்களில் பிரகாசிக்க ஜொலிக்கும் ஜோதியுடன் நிற்கும் நளினி, "ஆமாம், சூரியனும் உலகைவிட்டு மறையப்போகிறான்; நீங்களும் மறைந்துவிடுங்கள். அந்தகாரத்தில் மூழ்கி நான் மட்டும் தவித்துச் சாகிறேன்...இன்னும் கொஞ்சநேரம் இருந்துவிட்டுப் போகக்கூடாதா! இதற்குள் நேர மாகிவிட்டதா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

பசுபதி:—நளினீ! எனக்குமட்டும் உன்னைவிட்டுப் பிரிந் திருக்கும் கஷ்டமில்லை என்று நினைக்கிறாயா? நளினீ! உன்னைப் பார்க்காதிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக வன்றோ எனக்குத்தோன்றுகிறது. இருப்பினும் எனது கடமை களுக்கு நான் அடங்கிக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவனல்லவா! தன் உதரத்தினாலேயே என்னை உருவாக்கி வளர்த்து தன்னுயிரி னும் பெரிய இனிய பொருளாக மதிக்கும் எனது அன்னையின் தவிப்பைவிட நம்முடைய தவிப்பு ஒரு பெரிதல்ல.

நளினீ! அதோ ஆகாயத்தைப்பாரு. மேகங்கள் இருண்டு கொண்டுவருகின்றன. இதைப்பார்த்து என் தாயார் மனமும் இதே போல் இருண்டு கலங்கித்தவிக்கும். நான் வருவதற்குச் சற்று நேர

மாகிவிட்டால் ஆற்றங்கரையைவிட்டு அகலவேமாட்டாள். கரை மீதே நின்று என்னை வழிபார்ப்பாள். ஆகையால் நான் போய் வரட்டுமா ?

நளி :—ஆம் ! தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. அன்னை யின் தவிப்புக்கு அருகில் வரவும் நான் அருகதையற்றவள்தான். அன்னையின் அன்பை யறிந்தவர்களுக்கன்றே அந்தச் சுவை தெரியும். நான் அந்தப்பாக்யம் செய்யாத அபாக்யவதியன்றோ ?

பசுபதி :—என்ன ! நளினீ ! உனக்குத்தாயாரில்லையா ? இந்த விஷயத்தை ஏன் எனக்கு இதுகாறும் சொல்லவில்லை ? உன் தாயார் எப்போது இறந்தாள் ?

நளி :—அவளிருவிழிகளும் இருகுளங்களாகிவிட்டன....என் தாயார்...என்னைச் சுமந்துவந்து இம்மண்ணில் தள்ளும் வரையில் தான் அவள் கடன் பட்டிருந்தாற்போல் அக்கணமே மறைந்து விட்டாள். அன்னையின் அழகிய குரலைக்கூடக் கேட்காத மகா பாவத்தைச் செய்த எனக்கு அந்த உயரிய பொருளின் மதிப்பு எங்ஙனம் தெரியும் ?

பசுபதி :—நளினீ ! இந்தத் துக்கத்தை யறிந்த என்னுள்ளம் தவிக்கிறது. என் தகப்பனார் நான் சிறு குழந்தையாயிருக்கும் போதே என்னையும் என் தாயாரையும் விட்டு விட்டு துராத்மாக் களின் துர்ப்போதனையால் பினங்கு, சிங்கப்பூர் முதலிய ஊருக்கு ஓடிப்போய் விட்டாராம். அதுவே எனக்குத் தெரிந்த பிறகு தகப் பனில்லாத பிள்ளையாய் வாழும் விதியமைந்ததே என்று நான் பலகாலும் எண்ணிக் கண்ணீர் விட்டுக்கதறுகிறேன். உனது மூலப் பொருளே உன்னை விட்டு மறைந்த விசனம் மிகவும் கொடியது தான். நளினீ ! கண்ணீர் விடாதே ! கலங்காதே ! எல்லாம் நாம் செய்த வினையின் விளையாட்டு. அடாடா ! வானம் இடிக்கின்றதே ! நளினீ ! நான் சென்று வருகிறேன்...அழாது விடைகொடு,

நளி :—மறுபடியும் எப்போது இப்பக்கம் வருவீர்கள் ? இப்போது ஒரு வாரத்துக்கு மேலாகிறது. அடுத்த முறை இரண்டு வாரமாகுமா ?

பசுபதி :—நளினீ ! அதை என்னால் கூறமுடியுமா ? இந்தப் பக் கத்துக்கு எப்போது ப்ரயாணிகள் கிடைக்கின்றார்களோ அப்போது தானே வரமுடியும். என் படகுக்கு வேலை இல்லை யென்றால் எனக் கும் வேலை இல்லையல்லவா ? கடவுள் கிருபை எப்படியோ அப்படி நடக்கிறது. நான் வருகிறேன்.—என்று கூறிக்கொண்டே பட கில் வந்து உட்கார்ந்து துடுப்பை எடுத்துத்தள்ளவாரம்பித்தான். அவன் கண்கள் மட்டும் நளினியின் மீதிருந்து அகலவே இல்லை.

நளினியும் மரத்தைச் சுற்றித்தழுவி நிற்கும் கொடியைப்போல் ஓர் மரத்தைக்கட்டிக்கொண்டு படகு செல்லும் திக்கில் மனமலைத்த வளாய் நின்றாள். அவள் கண்களிலிருந்து உருளும் நீர்த்தாரைகள் தாமாக உடைந்து அவ்வாற்றுடன் கலந்ததுபோலாயிற்று.

வழக்கம்போல் பசுபதி ஆனந்தமாகத் துடுப்பால் தள்ளிக் கொண்டே ஓடம் பாடவாரம்பித்தான்.

ஏலேலோ ! ஏலேலோ ! கோவிந்தா ! ஏலேலோ ! ஏலேலோ !

1. மன்னு மிமய மலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே !
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே ?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே !
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (ஏலே)

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (ஏலே)

3. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கில்லை யீடே. (ஏலே)

இந்த அற்புதமான தேவகானம் போன்ற பாட்டைக்கேட் டுக்கொண்டே நளினி மெய்ம்மறந்த ஆனந்தத்தில் தோய்ந்து போய் நின்றுவிட்டாள். படகும் சிறுகச் சிறுக வெகுதூரம் போய்விட்டது. அவ்வாற்றில், வெகுதூரத்திலிருந்து சுமைகள் ஏற்றிவரும் படகுகளும், ப்ரயாணிகளை ஏற்றிவரும் படகுகளும் நிறைய போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தன.

நம் படகோட்டியின் இனிமையான சாரீரத்தின் அழகிலும் அவன் பொறுக்கி எடுத்துப் பாடும் பாரதிப்பாடல்களின் சுவையி

லும் மயங்காதவர்களே இல்லை எனலாம். படகோட்டிகளில் சிலர் பொழுதுபோக்கிற்காக ஏதோ ஒரு பாட்டை இழுப்பதும் அல்லது பழைய ஓடப்பாட்டுக்களைப்பாடுவதும் வழக்கம்.

பசுபதியின் பாடல்கள் வெறும் பொழுது போக்கிற்காகமட்டு மில்லாது அதன் உள்பொருளையும், அறிவு வளர்ச்சிக்கான சாரத்தை யும் நன்ருக ஸ்பஷ்டமாய் எடுத்துச்சொல்லி இசையுடன் பாடு வதைக்கேட்கக் கேட்க மற்றவர்களுக்கும் அதில் அபாரமான ருசியுண்டாகி இவன் பாடுவதை ஆனந்தமாய்க்கேட்டுக்கொண்டி ருப்பார்கள்.

படகு வெகுதூரம் சென்றுவிட்டது. நளினியின் உருவமும் மறைந்து போயிற்று. வானத்தில் நக்ஷத்திரங்களும் மினுக்கு மினுக்கு என்று தோன்ற வாரம்பித்தன. இருள் தன் சர்வாதிகாரத் துடன் உலகை முற்றுகைப்போட்டுக்கொண்டது. இனிய கானத் திற்கு ச்ருதி இசைப்பதுபோல் ஜலத்தில் படகு செல்லும் ஓசை அமைந்ததானது அழகுக்கு அழகு செய்தது போன்று ரமணீயமாக இருந்தது.

ஒரு படகோட்டி இவனை நோக்கி "இன்ன பசுபதி! போவச்சே கிராக்கி ரொம்ப பலமோ! சவாரி இல்லாமேவெறும் படகு ஓட்டி கினுபோறே! இன்னிக்கி பெரட்டாசி சனிக்கிழமேயாச்சே. நீ இண்ணு இன்னும் இங்கே இருக்கரே. ஒங்கபஜனே கிஜனே ஒன் னும் இல்லையா?" என்று கேட்டான்.

பசுபதி:—பலமென்ன, நலமென்னப்பா! ஆண்டவன் எப்படி படியளக்கிருனே அப்படி நடக்கிறது. எத்தே மறந்தாலும் என் னப்பனின் பஜனையை மறப்பேனு? அதற்காகத்தான் வேகமாக ஓடுகிறேன். பக்த கோஷ்டிகள் காத்துக்கொண்டிருப்பார்கள். என்னைக்கேட்டாயே! நீ என் சும்மாவெறும் படகு தள்ளிக் கொண்டு வருகிருய்?

அவன்:—ஒன்னும் ஆம்பிடலே. இன்னுபண்றது? ஊட்டுக் குப் போயிடலாமுண்ணு வந்துட்டேன்—என்ருன்.

இதோடு அவரவர்கள் பிரிய வேண்டிய திக்கில் பிரிந்து விட்ட தால் சம்பாஷணையும் நின்றது. படகும் பாட்டும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டபடி சென்று கொண்டே இருக்கின்றன. பட கோட்டியின் மனம் அதைவிட வேகமாய் பஜனை கோஷ்டியின்மீது தாவிப் பறந்துகொண்டே இருக்கிறது.

# 2

"இன்னு மினுசாமி! பொழுது போயிடுத்து. நல்லா இருட்டிப்போச்சு. வந்தவங்கல்லாம் அவசரப்பட்ராங்க. உண்ணும் நம்ப படகோட்டி பசுபதி வல்லியெ! இன்னிக்கி பெரட்டாசி சனிக்கிழமெ பஜனைக்கு ரொம்ப முக்கியமல்ல. அவன் எங்கே போயிருப்பான்?" என்று வயது சென்ற ஒருவர், ஒரு இளங்காளையைக் கண்டு கேட்டார்.

முனுசாமி :—அவன் சொம்மா கிம்மா குந்திங்கினு கடக்கமாட்டான். இண்ணிக்கு பவனு ஒரு பெரிய கூட்டத்தெ ஏத்திக்கினு மங்களம்பட்டிக்குப் போனான். போவச்செல கந்தங்கிட்ட இன்னமோ சொல்லிட்டுப்போனான். அவனெ கூட்டு கேட்டா தெரியும்.

கிழவன் :—அடெய் கந்தா! கந்தா! இங்கே வாடா!...வாடா இப்பிடின்னு!

கந்தன் :—என் தாதா! இன்னு சமாச்சாரம்?

கிழவன் :—நம்ப படகோட்டி போவச்சலெ ஒங்கிட்ட இன்னமோ சொல்லிட்டுப் போனானுமே! அது என்னடா சமாச்சாரம்?

கந்தன்:—அதுவா! அவரு வரத்துக்கு ரவெ நேரமானாலும் ஆவுமாம். அதுக்குள்ளாற பஜனெ கோவில்லெ கோலம் போட்டு வெளக்கு கொளுத்தி பூஜைக்கு அல்லாம் ஜுாத்தமா வெக்கச்சொன்னாரு. அவரு வந்த ஒடனெ ஆரம்பிக்கலாண்ணு சொன்னாரு. நான் போறேன் தாதா!

கிழவன் :—ஆமாம். அதெல்லாம் நீ சேஞ்சுட்டேயாடா!

கந்தன் :—ஒ! அல்லாம் கினீனு சேஞ்சுபுட்டேனெ! வந்து பாருங்க. என்ன ஜோக்காகீது. சாம்பிராணிவத்திகூட கொளுத்தி வச்சுப்புட்டேன். நான் வரேன் தாதா!

கிழவன் :—அடெடெடெ! என்ன அவசரம்? மினுசாமி! பாத்தியா கந்தப்பய்யனெ. கொஞ்சகாலத்துக்கு முன்னெ இந்தப் பயல் சோமாறிக்கயிதெயா திருஞ்சிக்கிட்டிருந்தான். கோலியாடுவான். பலிசப்ளாம் ஆடுவான். பீடி குடிப்பான். கள்ளுகூட குடிக்க ஆரம்பிச்சுட்டான்னு அப்றம் பாத்துக்கோயென்.

முனுசாமி :—ஆ!...அப்பிடியா சமாச்சாரம்! அந்தமாதிரி பையன் இம்பிட்டு நல்லவனா எப்பிடி ஆயிட்டான்?

கிழவன் :—அதானெ சொல்லவந்தேன். இவன் மட்டுமல்ல. இன்னும் இத்தினியோ பேர் இந்த கிராமத்துலே இப்பிடிதான் இருந்தாங்க. நான் நாட்டாமைக்காரனா இருந்தும் இன்னா சொல்லியும் நடக்கல்லெ. அந்தப் படகோட்டி பசுபதிகிரானே, அவன் இந்த ஊருக்கு வந்தாலும் வந்தான், இம்பிட்டுப்பேரும் நல்லாபூட்டாங்க.

முனுசாமி :—ஆமாம். என் தாதா! நானும் ஊர்லேந்து வந்து ஒரு வாரமாச்சு கேக்கணும், கேக்கணும்னு இருந்தேன். மறந்துட்டேன். இந்தப் படகோட்டிகிரானே ஆளே எத்திகினு போறான். சாமானெ எத்திகினு போறான். இதெ ரெண்டு தவிர வலைபோட்டு மீனெ பிடிக்கிறதில்லியே! அது இன்னாங்கரேன். அவனும் மீன் பிடிக்கும் சாதிக்காரந்தானே? என் சொம்மாகிரான்?

கிழவன் :—அட பயித்தியக்காரா! படவு வச்சிகினு ஓட்டிறாலே அவங்கல்லாம் மீன் பிடிக்கிற சாதின்னு வச்சுப்புட்றதா? அவங்கவங்க பொயப்புக்கு இந்த காலத்துலே யாருவானாலும் எந்த வெலெயானாலும் செய்யராங்க. இத்தினியோ ஒஸ்தி ஜாதிக்காரங்க தலெமயிரு வெட்ற கடெவச்சிக்கிறாங்க. அப்பிடின்னா அவங்கல்லாம் பரியாரின்னு அர்த்தமா! இத்தினையோபேர் துணி தைக்கிற தையல்கடெவெக்கராங்க. அவங்கல்லாம் ஒரு தையக்கார சாதின்னு அர்த்தமான்னா? எத்தனையோ பேருங்க பலவிதமான கடெ வெக்கிறாங்க. அவுங்கல்லாம் வாணிபம் செய்யும் சாதின்னு சொல்லிப்புட்றதா?

இண்ணொன்னு பாரு. இத்தினியோ ஒஸ்தி ஜாதிக்காரங்கள்ளாம் பொயப்புக்காவ கள்ளுக்கடெ எலம் எடுத்து, கள்ளுக்கடெ வெக்கராங்க. அவங்கல்லாம் மரமேறிசாதின்னு பேரா? இப்பிடி பாத்திகினுபோனா இத்தினியோ அந்தமாதிரிகீது. தொழிலுக்கும் சாதிக்கும் இன்ன சம்பந்தம்? ஆதி காலத்துலே வயித்யக்காரண்னா பண்டிதன், பரியாரின்னு ஒரு சாதிதான் இருந்தாங்களாம். இந்த காலத்துலே பாரேன். இத்தினி சாதி ஒலகத்துலே உண்டோ அத்தினி சாதிலேயும் பெரிய டாக்குட்டருங்க கௌம்பிப்புட்டாங்க. நாட்டு மருத்துவன் பேரே மறைஞ்சி போச்சு. மருத்துவச்சிங்க கெதியும் அப்பிடித்தான். இத்தினி ஜாதி பொம்பளெங்க படிச்சிப்புட்டு நரஸுன்னும், லேடி டாக்டருண்ணும் வந்துட்டாங்க. அவங்கல்லாம் பழய மருத்துவசாதின்னு சொல்லிபுடலாமா! அல்லாத்தியும் நல்லா ரோஜனை பண்ணி பாரு.

இன்னொன்னு மறந்துட்டேனெ! செருப்பு தைக்கரவங்க விக்கரவங்க அல்லாம் சக்கிலி சாதின்னு சொல்வாங்க. இத்தனியோ

ஒஸ்தி ஜாதிக்காரங்கல்லாம் செருப்புக்கடெ பெரிய பெரிய ஷாப்பு வெச்சிருக்கிருங்களாம். அவுங்கல்லாம் சக்கிலிங்களா ?...

முனு :—யப்பா! எம்பிட்டு விசயம் தெரிஞ்சுவச்சிகினு கீரே தாதா! ஒனக்கு இதெல்லாம் முன்னெ தெரியாதே! இப்ப எப்படி வந்திடுச்சு? நீ சொல்ற அம்புட்டும் நாயமாத்தான் கீது.

கிழவன் :—அல்லாம் அந்தப் படகோட்டியாலேதானப்பா தெரிஞ்சுச்சு. அவன் நல்ல நல்ல கதெங்க அருமையான விசயங் கல்லாம் சொல்லுவான். இந்தத் தொழில் சமாச்சாரமல்லாம் அவன் தான் சொன்னுன்....அதோ ஓடப்பாட்டு கேக்கராப்பலெ கீதே...

முனு :—இம்பிட்டு கெட்டிக்காரனு அவன் ? இன்னும் இன்னு செஞ்சிகீரான் ?

கிழவ :—இந்த கிராமம் முன்னெ எப்பிடி இருந்துச்சுன்னு ஒனக்குத் தெரியாதா! நீ மத்திலே சிங்கப்பூருக்கு ஓடிப்புட்டே இந்த ஊரெயே பாக்கலெ. அப்போ பாத்ததுக்கும் இப்ப பாக்ரத் துக்கும் எப்படிகீது நீதான் சொல்லேன் ?

முனு :—ஆமாமாம். நொம்ப நல்லாதாங்கீது. தெருலே ஒரு குப்பெ கிப்பெ இல்லெ. மனுசாளுகூட நல்லா ஜுத்தமா அழுக்கில் லாமெ குளிச்சி கந்தெயெ கசக்கி கட்டி தலெயெ ஆத்தி சீவி முடிஞ் சிக்கினு ஒயுங்காத்தான் கீராங்க. ஊட்டுக்குள்ளாறவும் துப்புர ஜுத்தமாத்தான்கீது. கொயந்தெங்கல்லாம் மூக்கு வயிஞ்சிகினு கண்ணு ஒட்டிகினு, தல்லெ பேணுமேஞ்சிகினு கெடக்குமே. அல் லாம் இல்லாமெ கிளீனுகீரத்தெப்பர்த்தா எனக்கெ ஆசூரமாத்தான் இருந்துச்சு. ஒருவேளெ காந்திக்காரங்க ஏதோ க்ராமவேலெ செய்யராங்கன்னு சொன்னுங்களெ அப்பிடி யாராச்சும் வந்து ஏதாச்சும் செஞ்சாங்களாங்காட்டியுமுண்ணு பாத்தேன்.

இந்த பையனெ பாத்தா சின்னவனுத்தாங்கீரான். எத்தினி கெட்டிக்காரன் பாத்தியா! படிச்சுக்கீருனு? ஏன் உத்யோகம் பண்ணுமே இப்பிடி படகு ஓட்ருன் ?

கிழவ:—படிச்சுட்டாக்கா வேலெ தூக்கிக்குடுத்துடராங்களா ? அவனுக்கு இஷ்டமான வேலெ எதுவோ அதெ செய்யிரான் இதுலெ இன்னு தப்பு ?

முனு :—தப்புன்னு சொல்லலெயெ. நம்படவங்களுக்குப் போட்டியா பூட்டுதின்னு....

கிழவ :—சீச்சீ ! அப்பிடி நெனெக்காதே. முன்னெ கன்னியப் பன் கன்னியப்பன்னு ஒத்தரு இருந்தாரெ அவரு தெரியுமா! அவரு

படவெத்தான் இந்த புள்ளாண்டானுக்குக் குடுத்துட்டு செத்துட்டாரு.

முனு :—ஆ...அது இன்னு ஆக்ஷீரம் ? அவருக்கும் இந்தப் புள்ளாண்டானுக்கும் இன்ன சம்பந்தம் ?

கிழவ :—ஏதோ போன ஜென்மாந்தர ரொணம் பாக்கி இருக்கும். அதான் சம்பந்தம், கன்னியப்பனுக்கும் இந்தப் புள்ளாண்டான் பாட்டனுக்கும் ரொம்ப சினேகிதமாம். கன்னியப்பன் ஒரு காலத்துலெ நொம்ப கயிஷ்டப்பட்டபோது அவரு அந்த மனுஷனுக்கு ஏதோ உபகாரஞ் சேஞ்சு அவனுக்கு படகு வாங்க ரூபாயும் குடுத்தாராம். அந்த நன்னியை மறக்காமெ அவன் தன் கால முடுவுலே இந்தப் படகு அந்தப் பையனுக்குக் குடுத்தான்...அதோ பசுபதி வந்துட்டான். வா பஜனெ கோயிலுக்குப் போகலாம்—என்று பேசிக்கொண்டே நடந்தார்கள்.

ஆத்தங்கரையிலேயே பசுபதியின் வரவை எதிர்பார்த்து நிற்கும் கோஷ்டிகள் படகோட்டியின் அற்புதமான கானத்தைக்கேட்டுச் சந்தோஷித்தவாறே 'அடேடே! நம்ப இந்தியா தேசத்தே நேத்திக்கு என்னென்னமோ பெருமையா சொன்னுனே. அந்தப் பாட்டையே இப்ப ஓடமாட்டமா பாடிகினுவராண்டா ! இன்னு அழவ்வா பாட்ரான் பாருடா !' என்று ஆச்சரிய மிகுதியால் கூறிக்கொண்டே கரைமீது நின்ருர்கள்.

பசுபதியும் படகை ஓட்டிக்கொண்டு கரைக்குவந்து இறங்கிஞன். சந்தோஷத்துடன் அவனை வரவேற்கும் ஜனங்களை நோக்கி புன்னகை புரிந்துகொண்டே, "கொஞ்ச நேரமாகிவிட்டது. மன்னிக்கணும். எல்லாம் தயாராயிருக்கிறதா ? இதோ ஒரு நிமிஷத்துலே ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டே படகை இழுத்துக்கட்டிவிட்டு, ஆத்தில் ஸ்நானம் செய்துவிட்டு நேரே தன் சிறு வீட்டை நோக்கி ஓடிஞன்.

அவன் வீடு வெறும்குடிசை வீடாக விருப்பினும் சுத்தமாயும் அளவுக்குத் தேவையான விசாலமாயும் ஒழுங்காயுமிருந்தது. பசுபதியின் தாயாரும் நீராடி, திருநீறும், குங்குமமும் அணிந்து பஜனைக்குத் தயாராக மகனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். இன்னும் தன் மகன் வரவில்லையே என்று சற்று உள்ளுக்குள் பயந்தபடியேதான் இருந்தாள்.

பார்வதிக்கு இவ்வுலகத்தில் தன்னுயிரினும் சிறந்த பொருள் பசுபதி ஒருவன்தான். அவனுக்குப் பிறகுதான் கடவுள் கூட என்று புத்திரவாஞ்சையின் மிகுதியால் அவள் எண்ணி வந்தாள். மகனைக் கண்டவுடனே அவள் உள்ளம் எப்படிப் பூரித்தது என்

பதைக் கூறவேண்டுமா! மனமாகிய மலர் ஆனந்த சூரியனைக் கண்டதும் உணர்ச்சி மணத்துடன் மலர்ந்து விரிந்தது...அந்த இன்பச் சுவையை அவளைப்போல் அனுபவிப்பவர்களுக்குக் கூறவேண்டுமா!

முகமே விகசிதம் அடைந்தது. கண்களில் வாத்ஸல்யத்தின் ஜோதி நிறைந்தது. "பசுபதி! ஏம்பா இத்தனை நேரமாகி விட்டது? ஆகாயம் கருத்தால் என் மனம் கருக்கிறது. அது இடித்தால் என் இதயத்தில் அதைவிட அதிகம் இடிக்கிறது. அது பெய்தால் என் கண்களும், தேகமும் (வெயர்வையால்) பெய்கின்றன. என்ன செய்வேன் சொல்லு. உன்னைப் பார்த்தபிறகுதான் உயிர் வருகிறது. பஜனைக்கு எல்லாரும் காத்திருக்கிறார்கள். மா விளக்கு ஏத்த எத்தனையோ பேர்கள் தயாராயிருக்கிறார்கள். சீக்கிரம் புறப்படு" என்று தேனினும் இனிக்கும் தீங்கனி போன்று கூறினாள்.

பசுபதிக்குத் தன் தாயின் உள்ளத்தின் வேகம் வெகு நன்றாகத் தெரியும். ஆதலால், தன்னைக் காணாத நிமிடமெல்லாம் தவித்துருகுவாள் என்பதை அறிந்துதான் அவன் இராக்காலத்தில் படகே ஓட்டுவதில்லை. "அம்மா! தினம் ஒரேமாதிரி வரமுடியுமா! சற்று ஏறத்தாழத்தான் ஆகும். இப்படி கவலைப்படாதேம்மா! கடவுள் கிருபையினால் ஒரு கெடுதலும் செய்யமாட்டார்; வா போகலாம்" என்றான். புரட்டாசி சனிக்கிழமையாதலால், நாமத்தை இட்டுக் கொண்டு தாயாருடன், விளக்கேற்ற மாவு, நெய், பழம், தேங்காய், புஷ்பம், கற்பூரம் சகிதம் கிளம்பி இருவரும் கோயிலுக்குச் சென்றார்கள். அவர்களின் பரிசுத்தமான இதயத்தில் சந்தோஷமும், பக்தியும், ஒன்றுகூடி அலைபோல் கொந்தளித்தது.

## 3

கோவிலின் மணியோசை பக்த கோடிகளின் இதயத்தைத் துளாவியது. புஷ்பம், சாம்பிராணி தூபம், வத்தி முதலியவற்றின் பரிமளம் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. வெகு பக்தி சிரத்தையுடன் ஆண்களும் பெண்களும் "கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!" என்கிற நாமஸ்மரணத்தைச் செய்து கொண்டே மாவு திருவிளக்கேற்றி தேங்காய் உடைத்து நைவேத்யம் செய்து அந்தந்த தட்டின் பக்கத்தில் கற்பூரக் கட்டிகளைக் கொளுத்திவைத்துக் கன்னத்தில் அறைந்துகொண்டு எல்லோரும் கோவிந்தா சப்தத்தை வானளாவப் பஜித்தார்கள்.

இந்தச் சம்பவத்தை எழுதும்போதே மயிர்க்கூச்செரிகிறதென்றால் நேரில் கண்டனுபவிக்கும்போது எத்தகைய ஆனந்தம்தான் உண்டாகாது. ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கியபடியே ஒவ்வொருவரும் சுமார் ஐந்து நிமிட காலம் பலவிதமான இசையுடன் 'கோவிந்தா ! கோவிந்தா' வென்று கோஷித்தார்கள்.

பிறகு பசுபதி வழக்கம்போல் எல்லா பக்தர்களையும் உட்காரவைத்துவிட்டுத் தானும் உட்கார்ந்துகொண்டு, நாமாவளியைப்பாட அவன் முதல் பாடுவதும் மற்றவர்கள் தாளம்தட்டிக்கொண்டு சந்தைபாடுவதுமாக வாரம்பித்தார்கள்.

(காக்கவேணும் கடவுளே ! என்ற மெட்டு)

1. ஏழுமலைவாசா ! ஸ்ரீவெங்கடேசா !
2. ஆழி சூழ் உலகினில் அழியாயுன்னுமமோதி,
பாழ்வினை நீங்கிட பக்திப்பெருக்களிப்பாய் (ஏ)
3. வேதமுதல்வனே ! வேங்கடமாமலையில்
ஆதி அந்த மிலாத ஜோதிச்சுடர் மணியே ! (ஏ)

நாமாவளி

1. கோவிந்த தாமோதரா ! நாராயணா ! (கோ)
2. வேதவிநோதா ! சாதுப்ரஸாதா !
மாதவமதுசூதனா ! நாராயணா ! (கோ)
3. ஸ்ரீமான்நாயகா ! ஸாதுப்ரதாயகா !
ப்ரேமனுசந்தாயகா ! நாராயணா ! (கோ)
4. தத்யாதி சோரா ! தீனதயாளா !
இத்தநிகாத்தருள்வாய் நாராயணா ! (கோ)

இன்னும் பல பாடல்களை அருமையாகப் பாடி பஜனை செய்தார்கள். பிறகு கற்பூரஹாரத்தி செய்து நைவேத்யம் பண்ணி எல்லா ப்ரஸாதங்களையும் பக்த கோடிகளுக்கு விநியோகம் செய்தார்கள். "கோவிந்தநாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா !" என்ற ஆனந்த கோஷத்துடன் கூட்டம் கலைந்தது.

நமது படகோட்டியும் அவன் தாயாரும் திருவிளக்கு மாவுடன் வீடுவந்து சேர்ந்தார்கள். அன்புமயமான உணர்ச்சியுடன் மகனுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டே, "பசுபதி ! நாளைய தினம் உனது பிறந்த நாள் தெரியுமா ! இன்றோடு உனக்கு 24 வயது முடிந்து, 25 வது வயது ஆரம்பமாகப் போகிறது" என்றாள்.

பசு :—என்னம்மா ! என்னை இன்னும் குழந்தையாகவே நீ எண்ணிக் குலாவுகிறாயே ! இதற்குள்ளாகவா 24 வயதாகிவிட்டது.

அடாடா! முன்னோர்களின் முறைப்படிக்குக் கால்வயதாகி விட்டது; ஆனால், இக்காலத்துச் சராசரி கணக்குப்படிக்கு.......

பார்வதி :—சீச்சீ! துஷ்டப் பையா! உன்னை யாரும் இந்தக் கணக்கைப் போடச்சொல்லவில்லை. உனக்கு நூறு வயசு ஆகும் வரையில் நான் உயிருடனிருந்தால் அப்போதும் நீ எனக்குக் குழந்தையைப்போலத்தான் தோன்றுவாய். என் மாதிரி குழந்தையின் அருமை தெரியுங்காலம் உனக்கும் சீக்கிரம் வந்து விட்டால், அப்போது என்னைப் பரிகஸிக்கமாட்டாயல்லவா!

பசு :—சரி! சரி! என் பிறந்த நாளில் ஆரம்பித்து எனக்குக் குழந்தையில் கொண்டு முடித்தாயா! எம்மா! பிறந்த நாளானால் என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

பார்வதி :—ஒன்றும் செய்யவேண்டு மென்று சொல்லவில்லை. உனக்குப் புதிய வேஷ்டி உத்தரியம் வாங்கி வைத்திருக்கிறேன். அதற்காகப் பணம் வேணும். இன்று எவ்வளவு காசு கிடைத்தது?

பசு :—எம்மா! போனவருஷமே இது விஷயமாக உனக்கும் எனக்கும் தர்க்கம் உண்டாயிற்றே. அதை இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்? எத்தனை ரூபாய்க்கு வாங்கியிருக்கிறாய்?

பார் :—வேஷ்டியும், உத்தரியமும் சேர்ந்து 12 ரூபாய். நிறைய சரிகை இருக்கிறது. வீதியில் ஒருவன் மிகவும் நயமாக விற்றான். நான் அதில் ஒன்று எடுத்தேன்.

பசு :—பாத்தியாம்மா! நான் சொன்னா உனக்குக் கோபம் வருகிறது. ஒரு படகோட்டிக்குப்போய் 12 ரூபாய்க்கு ஜரிகை வேஷ்டி என்றால் பார்ப்பவர்கள் சிரிக்கமாட்டார்களா! அத்தனை ரூபாயிக்கு நான் எங்கே போவது? உனக்கு என்மீது ஆசை நிறைய இருப்பதுபோல் காசு என் கையில் நிறைய இல்லையே! அதோடு அத்தனை ரூபாயைக் கொட்டி நான் துணி உடுத்தி விடுவதில் என்ன நன்மை இருக்கிறது?

அம்மா! நீயே யோசனை செய்து பாரு. என் பிறந்த நாளைக் கொண்டாடுவது என்பதன் கருத்தென்ன? நான் நெடு நாள் தீர்க்காயுசுடன் சுகித்திருக்கவேண்டு மென்பதுதானே உன் கருத்து? சொல்லு.

பார் :—ஆமாம் தம்பீ! அதைவிட வேறு என்ன இருக்கிறது?

பசுபதி :—அப்படியாயின் என் க்ஷேமத்தைக் கோருவதற்கு நானே ஆடம்பரமாய் உடுத்திக்கொண்டுவிட்டால் போதுமா? அந்தப் பணத்தைச் செலவிட்டுப் பல ஏழைகளுக்கு—நாம் மட்டும்

பணக்காரர் என்று நினைக்கிறாயோ! அப்படி இல்லை; கேவலம் ஒரு வேளைக் கஞ்சிக்குக்கூட இல்லாது எத்தனையோ ஏழைகள் இல்லையா? அவர்களுக்கு—வயிறாரக் கஞ்சி வார்த்தால் அவர்களுடைய வயிறு நிரம்பி சந்தோஷப்படுவதுபோல் என் ஆயுளும் வளருமல்லவா? அம்மா! அந்த வேஷ்டி எனக்கு வேண்டாம்.

பார்:—தம்பீ! நீ சொல்வதும் வாஸ்தவந்தான். நாளைக்கே கல்யாணம் காக்ஷி இருக்கிறதே! உன்னை யாராவது பார்க்கவேண்டுமென்று வந்தால் அப்போது கட்டிக்கொள்ள நல்ல உடை ஒன்று வேண்டாமா? அதை உத்தேசித்து இதை வாங்கினேன்.

பசுபதி:—அம்மா! ஒன்றிலிருந்து ஒன்று தாவுகிறாய்! கல்யாணத்திற்கும் வேஷ்டிக்கும் என்ன சம்பந்தம்? அப்போது அதைப் பார்த்துக்கொள்ளலாம். ஆகையால், நீ முதலில் அதைக் கொடுத்துவிட்டு ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கும் விஷயத்தில் உன் கவனத்தைச் செலுத்தம்மா! நான் சொல்வதைக் கேளு.

பார்:—தம்பீ! நீ சொல்வதை நான் தடுக்கப் போகிறேனா! ஒருபோதுமில்லை. நீ சரிகை வேஷ்டி உடுத்திப் பார்க்கவேண்டுமென்கிற பேராவலால் நான் பெருதனமாக வாங்கி வைத்துவிட்டேன். தம்பீ! அதையும் திருப்பவேண்டாம். உன் விருப்பத்தையுங் கெடுக்கவேண்டாம். இரண்டையும் செய்துவிடலாம். நாளைக்காலையில் கடைக்குச்சென்று சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்துவிடு. அப்படியே கஞ்சிகாய்ச்சி வார்க்கிறேன்.

பசு:—எம்மா! வேஷ்டிக்குப் பணம் கொடுத்து விட்டாயா?

பார்:—தம்பீ! என்னைக் கோபித்துக் கொள்ளாதே. உன் மீதுள்ள வாஞ்சையினால் நான் உனக்கு விரோதமாகவே ஒரு காரியம் செய்துவிட்டேன். அதாவது, நம்ப பழனியம்மா 10 ரூபாய் பத்திரமா வெச்சிக் காப்பாத்திக் கொடுக்கச் சொன்னாளே அதை எடுத்துக் கொடுத்துவிட்டேன். அதோடு எதிர்வீட்டில் ரெண்டு ரூபாய் கடன் வாங்கிக்கொடுத்து விட்டேன். பழனியம்மா வருவதற்குள் எப்படியும் கொடுத்து விடலாம். கோபித்துக்கொள்ளாதே!....

பசு:—ஐயையோ! இத்தகைய காரியமா செய்து விட்டாய்! ஐயோ பாவம்! அவள் தன் வயித்தையும் வாயையும் கட்டி, குருவி மூக்கினால் சேர்ப்பதுபோல் சேர்த்து உன்னை நம்பிக் கொடுத்ததை நீ இம்மாதிரி செய்யலாமா? அவள் திடீரென்று கேட்டால் நாம் எங்கே போவது? எங்கே அந்த வேட்டியைக் கொண்டு வா; பார்க்கலாம்—என்றான்.

உடனே பார்வதி அதைக்கொண்டு வந்து காட்டினுள். வேட்டியைப் பார்த்ததும் பசுபதிக்கு ஆச்சரியமாயிருந்தது. சரிகையின் பளபளப்பும் வேலைப்பாடுகளும் கண்களைக் கவரச்செய்ததோடு அது சாதாரண துணிவேஷ்டியாயில்லாமல் வெண்பட்டாக விருந்ததானது அவனது வியப்பைப் பின்னும் கிளறிவிட்டது. அதை மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருக்கையில், தெருக்கோடியில் ஏதோ கூச்சல் கேட்டது.

வரவர அந்தக் கூச்சல் நெருங்கி வந்தது. "இதோ! இந்த ஊட்டிலே தான் வித்துகினுபோனுன். நானுதான் பாத்தேனுங்க" என்று ஒருவன் உரத்துச்சொல்லிக்கொண்டே வந்தான். பூட்ஸ்காலின் நடை ஓசையிலிருந்து போலீஸ்காரன் கூட வருகிருன் என்றதை அறிவிப்பதுபோலிருந்தது.

இதைப்பார்க்கும்போதே பசுபதிக்கும் பார்வதிக்கும் ஒன்றும் புரியவில்லை. இவர்களுடைய வீட்டுவாசலில் வந்து கூட்டம் நின்ற உடனே முதலில் பேசிய ஆசாமி போலீஸ்காரனை நோக்கி, "சாமி! சாமி! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அதோ வேட்டி இருக்குது பாருங்க. இந்த வேட்டிதானுங்க" என்று கூறினுன்.

போலீஸ்காரனும் தனது அட்டகாஸங்களில் சிறிதும் குறையாமல் பேசத்தொடங்கி, "ஐயா! திருட்டுப்பொருளை வாங்கிய குற்றத்திற்காக உம்மீது வழக்கு வந்திருக்கிறது. வேட்டியை எடுத்துக்கொண்டு என்னேடு வாரும்" என்று அதட்டினுன்.

இதைக்கேட்ட பார்வதியின் குலை நடுக்க மெடுத்துக்கொண்டது. தன் உயிருக்கும் மேலாக மதிக்கும் மகனைப் பார்த்துக் கூறிய வார்த்தை அவள் இதயத்தைத் துளாவி வருத்தியது. ஆத்திரத்துடன் போலீஸ்காரனை நோக்கி, "ஐயா! என் மகன் ஒரு பாவமும் அறியமாட்டானே! நீங்க அவன்மீது என் குத்தம் சுமத்தவேண்டும்? இந்த வேட்டியை விலைக்கு வாங்கினது நான் தான். அவனுக்கு ஒன்றுமே தெரியாது" என்ருள்.

போலீஸ் :—ஓஹோ! அப்படியென்ருல் அந்தக் குத்தம் உன் மீதுதான் சாரும். இதை எப்போது வாங்கினுய்?

பசு :—ஐயா! இந்த வீண் கேள்விகளெல்லாம் எதற்கு? இந்த வேட்டியை இப்போதுதான் நான் பார்க்கிறேன். நான் பார்த்த உடனே ப்ரமித்தேன். 'இத்தனை உயர்ந்த வேலைப்பாடுகளுள்ள பட்டு வேட்டியை, 12 ரூபாய்க்கு எவன் கொடுத்திருப்பான்? ஒருகால் திருட்டுப்பொருளா யிருக்குமோ!' என்று நான் சந்தேகித்த சமயமே நீங்களும் வந்தீர்கள். என் தாயாருக்கு என்மீதிருந்த அளவு

கடந்த ஆசை யொன்றுதான் ப்ரதானமாயிருந்ததே யன்றி, வேறு விவகாரங்கள் ஒன்றும் அவளுக்குத் தெரியாது. ஏதோ நயமாக வந்து விட்டதே, மகனுக்குக் கொடுத்து மகிழ்ச்சி யடையலாமே என்று வாங்கிவிட்டாள். நாங்கள் இல்லை என்று மறுக்கவில்லை. இதோ வேட்டியை எடுத்துக்கொண்டு போங்கள். என் தாயாரை எதிலும் இழுக்கவேண்டாம்.

பார் :—தம்பீ ! பணத்தை வாங்கிக்கொள்ளாமல் திருப்பிக் கொடுத்து விட்டால் எப்படி ?

பசு :—அம்மா ! நீ பேசாமலிரு. விவகாரம் தெரியாமல் இம் மாதிரி சொத்துக்களை வாங்கி விடுவது எத்தனை பிசகு என்பது உனக்குத் தெரியாது, முன் பின் யோசிக்காமல் செய்துவிட்டாய். திருடுவது ஒருவிதமான குற்றம். திருட்டுச் சொத்துக்களை வாங்கு வது ஒரு விதமான குற்றம். இவைகளெல்லாம் தெரியாமல் செய்து விட்டு, பிறகு அகப்பட்டுக்கொண்டு விழிப்பது, பெண்டுகள் வேலை என்று சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது. முன்பொரு தரம் நாட்டாண்மைக்காரர் வீட்டில் பெண்கள் சீட்டுகட்டி விட்டு பட்ட அவஸ்தையை நீ மறந்துபோய் விட்டாயா ? வீணாகப்பேசா மல் உள்ளே போய்விடம்மா !......ஐயா ! இதை எடுத்துக்கொண்டு இம்மட்டும் எங்களை விட்டு விடுங்கள். என் தாயார் தெரியாது செய்துவிட்டாள்—என்று போலீஸ்காரனை வேண்டிக்கொண்டான்.

போலீஸ்காரன் முடுக்கான தொனியில் “இந்தப் பேரமெல்லாம் இங்கு வேண்டாம். உம்முடைய வாதத்தை அதிகாரிகளிடம் வந்து கூறி, மன்னிப்புப் பெற்றுக்கொள்ளும். நான் இதில் ஒன்றும் செய்ய முடியாது. 50 ரூபாய் பட்டு 12 ரூபாய்க்குக் கொடுக்கும் போதே சந்தேகம் தோன்றியிருக்கவேண்டாமா ? அதோடு இந்த வேட்டி கடைமடிப்பு இல்லாமல் பிரித்து இஸ்திரி மடிப்பு இருக் கிறதே அதையாவது பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டாமா ? இது யார் வீட்டுச் சொத்து தெரியுமா ? போலீஸ் கமிஷனர் வீட்டுச் சொத்தாக்கும். ஆகையால், இதில் ஒன்றும் செய்ய முடியாது. உம். தாயாரை அழைத்துக்கொண்டு வாரும் ” என்றான்.

பசு :—ஐயா ! உம்முடைய உத்தரவுப்படிக்கு நான் உம்மோடு கூடவருகிறேன். ஒரு விதமான லோகவிவகாரமும் தெரியாது, என் மீதுள்ள ஆசையினால் செய்துவிட்ட என் தாயாரை எப்படியா வது மன்னித்து விடுங்கள். நான் அங்கு வந்து, நானே வாங்கிய தாக சொல்கிறேன். தயவு செய்து இந்த ஒன்றுக்கு மட்டுமாவது மனமிரங்க வேண்டும்—என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டான்.

நாட்டாண்மைக்காரனும் பின்னும் சிலரும் பசுபதிக்காகப் பரிந்து பேசி போலீஸ்காரனிடம் கேட்டுக்கொண்டதால், அவன்

ஒருவாறு இசைந்தான். உடனே கூடவே வரவேண்டுமென்று அழைத்ததால், மறுபேச்சின்றி அவன் அவர்களுடன்கூடக் கிளம்பி விட்டான்.

பார்வதியம்மாளுக்குத் தன்மகனைத் திருட்டுக் குற்றத்திற்காகவே கைது செய்துகொண்டு போய்விட்டார்கள் என்ற துக்கமும் சந்தேகமும உண்டாகிவிட்டன. உடனே அவள் வாய்விட்டுப் பெரிதாகப் புலம்பவும் தொடங்கிவிட்டாள். பசுபதி அவளுக்குச் சமாதானங்கூறி அமர்த்திவிட்டுப் போலீஸ்காரனுடன் கிளம்பினன்.

நாட்டாண்மைக்காரன் முதலியவர்கள் பார்வதிக்குத் தேறுதல் கூறி, சமாதானம் செய்தும் அவள் மனம் இடங்கொடுக்காமல் தான் அன்பு மிகுதியால் செய்துவிட்ட வேலையின் முடிவு தன் மகனை நியாயஸ்தலத்தில் கொண்டு நிறுத்தும்படியான விதியமைந்து விட்டதே! அவனுக்கு இதனால் என்ன நேருமோ! நாளையதினம் பிறந்தநாளைக் கொண்டாட முடியுமோ முடியாதோ தெரியவில்லையே என்ற ஏக்கமும் கவலையுங்கொண்டு துடிக்க ஆரம்பித்தாள்.

## 4

"ஸ்ரீமதி நளினி அம்மாளுக்குக் கடிதம்" என்று தபால்காரன் ஒரு கடிதத்தை நளினியிடம் கொடுத்தான். நளினி அதை ஆவலுடன் படிக்கத் தொடங்கினாள்.

ஸௌபாக்கியவதி நளினிக்கு அனேக ஆசீர்வாதம், க்ஷேமம், க்ஷேமத்திற்கு எழுதவும். உன் கடிதம் கிடைத்தது. படித்து மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்கு மிகவும் பிரியமான இயற்கையான காக்ஷிகளைக் கண்டு நீ தினம் மகிழ்வதைப் பார்த்து நான் பரம திருப்தியடைகிறேன். ஆற்றங்கரையில் நீ அடிக்கடி சென்று உலாவுவதையும் நிம்மதியான ஆனந்தத்துடன் மனங்களிப்பதையும், அங்குள்ள இயற்கைக் காக்ஷிகளையும் நீ வர்ணித்து எழுதி இருப்பதைப் பார்க்க எனக்கும் உன்னுடன்கூட விருந்து களிக்க வேண்டுமென்கிற ஆவல் பொங்கி எழுகிறது ஆனால், நான் என்ன செய்ய முடியும்? நான் நொண்டியாக இருக்கும் பயங்கரம் இப்போதுதான் எனக்கு அதிகமான விசனத்தையும் ஆறாத துக்கத்தையுங் கொடுக்கிறது. நீயாவது சந்தோஷம்

18308

அடைந்து சுகமே வாழ்ந்தால் அதுதான் எனது மனத்திற்குச் சாந்தி அளிக்கும் இன்பமாகும். உன் தாயாரின் ஆத்மாவுக்கும் திருப்தி ஏற்படும்.

நீ அங்கு எத்தனை சந்தோஷமாய் இருப்பினும் நீ இல்லாது என்னால் ஒரு நிமிடம் கழிப்பது ஒரு யுகமாக இருக்கிறது. வர வர எனது தேக ஸ்திதியும் நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வருகிறது. ஆகையால் நீ உடனே வந்துவிட்டால் எனக்குச் சந்தோஷமாயிருக்கும். இங்கும் இப்போது நிறைய மழை பெய்து செழிப்பாய் இருக்கிறது. ஏரி நிறைய ஜலம் போகிறது. ஆற்றிலும் ஜலம் வழிந்தோடுகிறது. பச்சைபசேலென்று செடிகள் வளர்ந்து தழைத்திருக்கும் மாதிரியானது உன் வரவை எதிர்பார்க்கும் சினேகிதைகளைப்போலிருக்கிறது. ஆகையால், உடனே புறப்பட்டு வந்துவிடு. மாமா முதலிய எல்லோரையும் நான் கேட்டதாகச் சொல்லு.

உன் சித்தப்பாவின் நிலைமை முன்னிலும் மோசமாயிருக்கிறதேயன்றி, ஒருவிதமான மாறுதலும் இல்லை. அவைகளெல்லாம் என் கர்மாவின் நிழல். உன்னைப் பார்த்தால் என் மனம் ஆறுதலை யடையும். உடனே வரவும்.

இங்ஙனம்,

அன்புள்ள உன் சித்தி-(சிறிய தாயார்.)

சீதாலக்ஷ்மி. "

இதைப் படித்தவுடனே நளினியின் மனத்தில் இருவகையான போராட்டங்கள் உண்டாகிவிட்டன. ஊருக்குப் போகவேண்டும் தன் சிறிய தாயாரைப் பார்க்கவேண்டும் என்கிற ஆவல் ஒரு புறம்; போய்விட்டால் தன்னுருயிர்க் காதலனைச் சந்திக்க முடியாதே என்கிற ஏக்கம் ஒருபுறம்; இந்த ரகஸ்யத்தை அவளுடைய இதயம் அறியுமேயன்றிப் பிறர் அறியவே மாட்டார்கள். ஆகையினால், அதை வெளியிடவும் தைரியமின்றி அந்தரங்கத்திலேயே அடக்கிப் புதைத்து வந்தாள்.

நளினியின் தாயார் அவள் அறியு முன்பே தன்தங்கை சீதாலக்ஷ்மியிடம் நளினியை ஒப்படைத்துவிட்டு உயிர் நீத்தாள். சீதாலக்ஷ்மிக்கும் குழந்தையே இல்லாததால் நளினியை தன்னுயிரினும் இனிய பிரேமையுடன் வளர்த்து வருகிறாள்.

அவளுக்கு கால்கள் இரண்டும் விதியின் வலிமையினால் முடங்கிப்போய் நொண்டியாகி விட்டதால், அவளிடத்தில் நளினிக்குத்

# பொன் விழா

## மோகினியின் அன்பர்களுக்கு
## எனது தாழ்மையான வேண்டுகோள்

மாயாவதாரனின் மங்கள கடாக்ஷத்தினுலும், உங்களது பேராதரவினுலும் நமது மோகினிச் செல்விக்கு நாளது டிஸம்பர் மாதத்துடன் 16 வருடங்கள் பூர்த்தியாகி, 1940-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-வது ஆண்டு இனிது பிறக்கப்போகிற சந்தோஷச் செய்தியை, ஏற்கெனவே அறிந்துள்ள அன்பர்களாகிய உங்களுக்கு எனது கடமையின் பணியால் நினைப்பூட்டுகிறேன்.

வருடா வருடம் உங்களை மோகினியின் மூலம் சந்தித்து, உங்கள் உதவியைக் கோருவதுபோல், இம்முறையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுடைய பேராதரவாகிய அன்பு மாரியினுல் "மோகினி" செழித்து வளர்ந்துகொண்டு வருகிருள். என்றும்—அவளுடைய 17-வது ஆண்டிலும் (1940-வது வருடத்திலும்)—உங்கள் மாசிலாத ஆசியுடன் கூடிய சந்தாத் தொகையை அனுப்பி, அவளை ஆதரிக்கும்படிப் பிரார்த்திக்கிறேன்.

நிற்க, இன்னெரு முக்கியமான சந்தோஷச் செய்தியையும் களிப்புடன் கூறுகிறேன். ஒவ்வொரு வருஷமும் நடுவிலோ, கடைசியிலோ தனி நாவல் ஒன்று நாம் வெளியிடும் வழக்கம் போல் இவ்வருடமும் ஒன்று வெளியிடுகிறேம். தயாபரனுகிய என்னப்பன் ஸ்ரீ. பார்த்தசாரதி, தம் திருவருளால் இதுவரையில் என் பேனுவின்மூலம் நாற்பத்தொன்பது (49) நாவல்களை முடித்திருக்கிருர். அடுத்தது 50-வது நாவலாகையால், அதை "பொன்விழா" நாவல் என்ற மகுடத்துடன் கவர்ச்சியான முறையில் வெளியிட்டு, நமது சந்தாநேயர்கள் அனைவருக்கும் அவர்களது அன்புக்கு அறிகுறியாய்ப் பரிசாக அளித்து, எமது நன்றியறிதலைக் காட்டி, மகிழ்விக்க வேண்டுமென்று எண்ணினேம். ஆனுல், எண்ணியது எண்ணியபடியே நடந்துவிடுமாயின், இயற்கை மாறுபட்டதாகவன்றே போய்விடும்?

தற்போது ஏற்பட்டுள்ள யுத்தத்தின் விபரீதத்தினுல் காகிதம், அச்சடிக்கும் மை முதலியன எல்லாம் ஒன்றுக்கு 3, 4 வீதம் விலை ஏறிவிட்டபடியால், செலவு மிகவும் அதிகமாகிறது. ஆகையால், நாம் நினைத்தபடி நேயர்களுக்குப் பரிசாகக் கொடுக்க இயலாதது பற்றி வருந்துகிறேம். 'பொன்விழா' நாவல் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு, பிரபல சித்திரக்காரரான ஸ்ரீமான் கே. ஆர். சர்மா எழுதிய சித்திரங்களுடன் (குறைந்தது 10) பிரகாசித்து உங்களை

மகிழ்விக்கும். அதன் விலை ரூ. 1-4 ஆகுமாயினும், நமது சந்தா நேயர்களுக்குத் தபால் செலவு உள்பட அரை ரூபாய்க்குக் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம். ஆகையால், அன்பர்கள் யாவரும் தம்தம் புது வருடச் சந்தாத்தொகையுடன் அரை ரூபாய் (எட்டு அணு) சேர்த்து மணியார்டர் செய்து நமக்கு உத்ஸாக மூட்டும்படி வேண்டுகிறேன்.

பொன்விழா நாவலின் முழு விவரங்களும், 17-வது வருடப் புது நாவலின் பெயரும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். என்னுடைய காரியத்தின் வெற்றிக்கு நீங்களேதான் ஆதாரம் என்பதை நான் மனப்பூர்வமாக நம்பியிருக்கிறேன்.

உங்கள் உதவியே மோகினியின் ஜெயம்.

உங்கள் ஆதரவே மோகினியின் வளர்ச்சி.

உங்கள் ஆசியே மோகினிக்கு அழியாப் புகழ் ஆகும்.

உங்கள் பேராதரவை அளித்து மோகினியை ஆசீர்வதிக்கும்படி மீண்டும் ஒரு முறை கோருகிறேன்.

நன்றியுள்ள,

**வை. மு. கோதைநாயகி**

---

**உங்கள் சந்தா நம்பரை**

மறக்காமல், பணம் அனுப்பும்போது தெளிவாக எழுதவும்.

---


# நமது விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | ரூ. 12 0 0 | கால் பக்கத்துக்கு ,, | ரூ. 4 0 0 |
| அரை பக்கத்துக்கு ,, ,, | 6 8 0 | உள்அட்டைக்கு ,, ,, | 15 0 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச்சலுகை காட்டப்படும்.


---

## இனுமாக நாவல்கள் வேண்டுமா ?

எத்தனை புதிய சந்தாநேயர்களைச்சேர்த்து முன்பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணு விலையுள்ள நாவல் இனும்.

உதாரணமாக 4 சந்தாநேயர்களைச் சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கொடி இனும்.

---

## லெடர் பேபர் பாட்

ஒரு புதிய சந்தா சேர்த்தனுப்பிய அன்பர்களுக்குச் சென்ற மாதமே மேற்படி பாட் அனுப்பிவிட்டோம்.

2000 வருஷங்களுக்கு முன்புகூட இந்தியா,

கௌரவம், தேசீய உணர்ச்சி, ஜன்மபூமியின்மேல்

பிரேமை முதலியன கொண்டுள்ளது என்பது

உங்களுக்குத் தெரியுமா?

ஏஎல். ஆர்எம். கம்பெனியாரின்

# மாத்ருபூமி

என்ற உன்னத தமிழ் பேசும் படத்தில் கண்டு

களியுங்கள்

தென்னிந்தியாவில் திக்விஜயம்

| | | | | |
|---|---|---|---|---|
| மதுரை | — | சென்டிரல் சினிமா | — | 29-10-39 |
| சேலம் | — | ஓரியண்டல் டாக்கீஸ் | — | 1-11-39 |
| சிதம்பரம் | — | புஷ்கலா டாக்கீஸ் | — | 3-11-39 |
| தஞ்சாவூர் | — | ராஜாராம் டாக்கீஸ் | — | 3-11-39 |


சென்னை பிராட்வே டாக்கீஸில் வெகு விரைவினில்

வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்.

—:புக்கிங்குகளுக்கு:—

ஏஎல். ஆர்எம். கம்பெனி,

32 ஆதியப்பமுதலி தெரு, வேப்பேரி, சென்னை.




ஜய விட்டல்!

ஜய பாண்டுரங்கா!!

ஜெனரல் பிலிம் டிஸ்டிரிபியூடிங் கம்பெனியின் வெளியீடு

# பாண்டுரங்க விட்டல்

ஒப்புயர்வற்ற தெலுங்கு படம்

புண்டரீகனின் பக்தி, பண்டரீபுர மகிமை, பக்த ஜனுபாயின்

கர்ணுமிருத கீதம், காந்தாமணியின் நடனம்

இன்னும் 1001 கண்கோள்ளாக் காட்சிகள்

---

For Booking Apply to :—

GENERAL FILM DIST. CO.,

48, Armenian St, Madras.



# அனதைப் பெண்

## டாக்கி நாவலின் அழகிய உயரிய பதிப்பு

“ அனதைப் பெண் ” டாக்கியிலிருந்து இப்பதிப்பில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட்காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனல், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்க வில்லை யென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக !

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்குப் பூஷணம் !

மனதுக்கு ஆனந்தம் ! யாவர்க்கும் இனியதோர் விருந்து !

**விலை ரூ. 1—4—0 தான்.**

நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்.

தனித்த வாஞ்சையும், பச்சாத்தாபமும் உண்டாகி அவளுக்கான சகல காரியங்களேயும் நளினியே அன்புடன் செய்து வருவாள். ஓய்வு நேரங்களில் நல்ல அருமையான கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியவைகளைப் படித்துக் காட்டுவாள். சீதாலக்ஷ்மி தேக ஊனமின்றி நன்ருக விருந்த காலத்தில் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக்கொண்டிருந்த நாத்திகளும் மற்ற நெருங்கிய பந்துக்களும் அவள் கால் முடங்கி பிறர் கையை எதிர்பார்க்கும் நிலைமைக்கு வந்த பிறகு, அவளைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. தன்னை எல்லோரும் அலக்ஷ்யம்செய்து எளப்பமாக நடத்துவதைச் சகிக்காமல் சீதாவின் தேகம் மெலிந்து குச்சி போலாகிவிட்டது.

எல்லோரும் தன்னை அலக்ஷ்யம் செய்யும் கொடுமை மட்டுமின்றித் தன் கணவனுக்கு வேறு விவாகத்தைச் செய்யவும் தன் நாத்திகள் முற்பட்டுவிட்டதுதான் அவள் உயிர் துடிக்க வாரம்பித்தது. மனைவி அழகாயும் தெம்பாயும் இருந்த காலத்தில் அவளிடங் காட்டிய அன்பும் ஆதரவும் அவளுக்கு ஒரு சிறு ஊனம் வந்து விட்டதென்ருல், பிரேமைக்கும் ஊனம் உண்டாகி விடுவது தான் மக்களின் தர்மம் போலும்!

சீதாலக்ஷ்மியின் கணவன் ரகுநாதனுக்கு, அவளுக்கு இந்த நோய் வந்தபிறகு நாளடைவில் அவளிடம் சாதாரணமாக நின்று பேசவும் ஒருவிதமான வெறுப்பும் அசங்கியமும் உண்டாகிவிட்டதால், நாட்கணக்கில் சீதாவைப் பார்க்கவும் மனமற்றுத் திரிய ஆரம்பித்தான். சீதா அவனிடம் கொண்டிருந்த அளவுகடந்த காதலுக்குச் சத்ருவாய் தனக்கு வியாதி ஏற்பட்டதை எண்ணி எண்ணி அவள் மனம் புண்ணுகிவிட்டது.

தன் கணவனை ஒரு முறை கண்ணுல் பார்க்கவும் ஏங்கித் துடிக்கும் விதி அமைந்துவிட்டதை அவளால் சகிக்கமுடியவில்லை. 'மனிதரை மனிதர் வெறுக்கும் காலமும் உண்டா? அன்பும் இவ்வளவு விரைவில் வற்றிப் பாலைவனமாக மாறிப்போய்விடுமா!' என்று நினைக்கும்போதெல்லாம் அவள் இதயம் வெடித்துவிடும்போலாகிவிடும். தன் விதியை நொந்து அழுது அழுது அவளது இரு கண்களும் மங்கிவிட்டன. இந்தச் சமயங்களிலெல்லாம் அவளுக்குப் பேராறுதலை அளித்து ஆதரிப்பவள் நளினியேயாவாள்.

சீதாலக்ஷ்மியின் கணவன் நல்ல செல்வம் படைத்தவன். நிறைய மனிதர்களும் பெற்றவன். வீட்டிற்கு வருவார் போவார் அதிகம். அதனுல் அவன் பின்னும் கொஞ்சநாட்களில், சீதா நொண்டியாகி வீட்டிலிருப்பதையும் அவமானகரமாய் எண்ணத் தொடங்கினன்.

அதை அவன் சகோதரிகளும் ஆமோதித்தார்கள். வீட்டை இடித்துக் கட்டும் சாக்கை வைத்துக்கொண்டு தோட்டத்திலுள்ள தனித்த சிறிய ஆச்ரமம் போன்ற வீட்டில் சீதாவை மாற்றினார்கள். சீதாவும் சூதுவாது அறியாது அதையே உண்மை என்று முதலில் நம்பினாள். பிறகு அவள் உண்மையை யறிந்ததும் நெஞ்சம் பதறினாள். எத்தனை துன்பங்கள் நேரிடினும் தன் தலைவிதி என்று தன்னையே நொந்துகொண்டு தேறுவதுதான் அவளுக்கு வழக்கம்.

தான் வீட்டிலிருப்பதையும் அவர்கள் மனப்பூர்வமாய் வெறுக்கிறார்கள் என்று தெரிந்தபிறகு சீதா புத்திசாலித்தனமாய்த் தனக்கு இந்தத் தோட்டத்து வாசமே நிம்மதியாயும் சந்தோஷமாயும் இருக்கிறது; இங்கேயே இருக்கிறேன் என்று அவளே முன்கூட்டி கூறி விட்டதால், அன்று முதல் சந்நியாசினியாய்த் தனி வாழ்க்கை நடத்தலானாள்.

இத்தனைக்கும் மத்தியில் அவளுக்கு ஒரு சந்தோஷம் என்னவென்றால், தன்மீதுள்ள வெறுப்பும் அவமானமும் நளினியின்மீதும் இல்லாது அவளை யெல்லோரும் என்றும் போல் நடத்துகிறார்களே அதுவேயாகும். தாயற்றக் குழந்தையைத் தான் வளர்ப்பதையும் தள்ளி நிராகரித்திருந்தால் திக்கற்ற அக்குழந்தையின் கதி என்னவாகி இருக்கும்? இந்த ஒரு நன்மைக்காக அவள் தனக்கு ஏற்பட்ட சகலவிதமான கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு வந்தாள்.

இதே தோட்டத்தில், அடைத்து வைத்திருக்கும் பக்ஷியைப் போல் நளினியும் தன் சித்தியுடன் தனி வாஸத்திலிருந்தபடியே அந்த ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தில் 5 வகுப்புவரையில்தா னிருந்ததைப் படித்துவிட்டாள். ஆனால், அவள் மனம் அதிகப்படிப்பை நாடியதாயினும் மனித திக்கும், செல்வமும் இல்லாத ஏழை என்ன செய்வாள் பாவம்?

தன் சிறிய தாயாரிடம், தனக்குத் தெரிந்த கல்வியை விருத்தி செய்துகொண்டாள். குழந்தைப் பருவம் நீங்கி புத்தி தெரிந்த பிறகுதான் தன் சித்தியை அவர்கள் வைத்திருக்கும் பரிதாபமும், அவள் மனம் தவிக்கும் தவிப்பும், தனக்காக அவள் சகலத்தையும் சகித்துக்கொண்டிருப்பதையும் நன்கு அறிந்துகொண்டாள். அவள் மனமும் கலங்கித் தவிக்க ஆரம்பித்தது.

தன் சிறிய தாயாரை இத்தகைய சிறுமைபடுத்தி வைத்து விட்டுத் தன்மீது மட்டும் பக்ஷமாக விருப்பதை அவள் மனம் வெறுத்தது. ஆனால் சிறுமி என்ன செய்யமுடியும்? தன் சிறிய தாயாரின் பொழுதுபோக்கிற்காகவும், உதவிக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருந்தாள்.

நளினிக்கு வயதாகிக்கொண்டு வருவதைப்பற்றிச் சீதாவுக்கு மிகவும் கவலையே உண்டாகியது. வெளிநாட்டமே இல்லாததால் தான் அச்சிறுமிக்குத் தக்கவரன் எப்படித்தேடுவது? தனக்கு இது விஷயத்தில் யார் சகாயம் செய்வார்கள்? என்ற யோசனை பலமாக எழ ஆரம்பித்தது.

நளினியின் தகப்பன், தன்மனைவி இறந்த பிறகு இருப்பிடமே தெரியாது போய்விட்டான். அவன் உயிருடன் இருக்கிறானு, இறந்தானு என்பதுகூட யாருக்கும் தெரியாது. அவனுடைய சகோதரிமட்டும் ஒருத்தி கிராமத்திலிருப்பதால், அவள் எப்போ தேனும் ஒரு சமயம் நளினியைத் தன்னிடம் அழைத்து வைத்துக் கொள்வாள். அம்மாதிரி வந்துள்ள சமயங்களில் அவள் சுபாவிக மாக ஏற்பட்டுவிட்ட தனி வாஸத்தின் ப்ரேமையால் ஆற்றங் கரைக்குக் காலையும் மாலையுமாக வந்து உட்கார்ந்து இயற்கை அன்னையின் எழிலில் லயித்துப்போய் மெய்மறந்து பாடிக்கொண் டிருப்பாள்.

அந்த ஆறு மிகவும் பெரிய ஆறு. அவ்வாற்றின் கரைகளில் பல கிராமங்கள் இருக்கின்றன. ஆற்றைத் தாண்டி படகில்தான் யாவரும் போய் வரவேண்டும். சகல சாமான்களும் படகின்மூல மாகத்தான் சந்தைக்குப்போய் வரவேண்டும்.

நளினி ஆற்றங்கரையில் உட்கார்ந்து படகுகள் செல்வதையும் பிரயாணிகளின் குசாலான களிப்பையும் படகோட்டிகள் ஆனந்த மாய்ப் பாடிக்கொண்டே செல்வதையும் தினம் கண்டு களிப்பாள். அவளுடைய அத்தையுடன் அடுத்த ஊர்களிலுள்ள கோவில் களுக்கும், சொந்தக்காரர்களின் வீட்டு விசேஷங்களுக்கும் பலதரம் படகில்போய் வந்திருக்கிறுள்.

ஆனல், மற்ற படகோட்டிகளைப்போல் அநாகரிகமாயும் அழுக்கு உடையுடனும் இல்லாது பசுபதி மட்டும் பெருந்தன்மை யான குணத்துடனும் நன்ருக சுத்தமாயும், அறிவுடன் பிரகாசிப் பதையும் காணக்காண இவளுக்குப் பெருத்த சந்தேகமும், அதைப் பற்றிய யோசனைகளும் முதலில் உண்டாகியது.

அடுத்த கிராமத்தில் பிரம்மாண்டமான உத்ஸவம் நடந்த காலத்தில் பிரதிதினமும் இதே படகில் நளினியும் அவள் அத்தையும் போகும்போது பசுபதி வெகு இனிமையான தனது இயற்கை சாரீரத்தினுல் கவிச்சக்ரவர்த்தியாகிய பாரதியாரின் பாடல்களில் சிலவற்றை ஓடப்பாட்டுபோல் அமைத்துப் பாடுவதைக் கேட்டதும் நளினிக்கு இவன் சாதாரணமான படகோட்டியல்ல. வேண்டு மென்று தொழில் முறையில் படகோட்டுகிறவன்தான் என்ற எண்ணமும் நம்பிக்கையும் உண்டாகியது.

பின்னும் அவனைப் பார்க்கும்போதெல்லாம் தான் ராமாயணத்தில் படித்த மஹா பக்தனான படகோட்டி குகப்பெருமானின் குணத்தையே அவளுக்கு ஞாபக மூட்டியது. ஆனால், அவனிடம் நளினி ஒரு பேச்சும் பேசியது கிடையாது. பசுபதியும் பேசிய தில்லை. இம்மாதிரி வருடம் ஒரு முறையோ, இரு முறையோ வரும்போதெல்லாம் நளினி படகோட்டியைச் சந்தித்துப் படகில் சென்று வந்தாள். இம்மாதிரியே சில வருடங்கள் சென்றன.

படகோட்டி படகை ஓட்டிக்கொண்டே பிரயாணிகளுக்கு நல்ல கதைகளையும் தேச விஷயங்களையும் அன்றுடம் பத்திரிகையில் வரும் வர்த்தமானங்களையும் தெளிவாயும் ஸ்வாரஸ்யமாயும் சொல்லிக்கொண்டு வருவதைப் பார்க்கப் பார்க்க பசுபதியின் கல்வி அறிவின் பிரகாசம் நன்கு தெரிந்தது. அந்தப் படகோட்டியை மெச்சாதவர்களும் அவன் படகில் ஏறவேண்டும் என்கிற ஆசை இல்லாதவர்களும் அந்தப் பக்கங்களிலுள்ள கிராமங்களில் இல்லையெனலாம்.

போகவும் வரவும் சேர்த்துப் பேசிக்கொண்டுவரும் பிரயாணிகளை இறக்கிவிட்டு அவர்களை மீண்டும் அழைத்துச் செல்வதற்காக ஆற்றங்கரையில் காத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் கையில் பத்திரிகையோ புத்தகமோ வைத்துப் படித்துக்கொண்டிருப்பான். சில சமயம் ஆற்றங்கரையிலுள்ள எளிய ஜனங்களுக்குச் சுத்தமாக இருக்கும்படி உபதேசிப்பான்.

அனுவச்யமாக வாய்ச்சண்டை முற்றிக் கைச்சண்டையாகி அது வலுத்துப்போய் வெறியுடன் இருக்கும் ஜனங்களைத் தானே வலுவில் வந்து அவர்கள் சண்டையைச் சமாதானம் செய்துவைத்து நல்லவார்த்தைகளைக்கூறி இருத்தரத்தாரையும் விலக்கி யனுப்புவான்.

இதுபோன்ற அரிய செய்கைகளைப் பார்க்கும் போதெல்லாம் நளினியின் மனம் தன்னையறியாது தானாகவே ஒருவிதமான இன்பத்தை யடைந்து பரவசமடையும். நாளடைவில் அடிக்கடி படகோட்டியைப் பார்க்கவேண்டும்; அப்படகில் செல்லவேண்டும் என்கிற ஆவல் சிறுவிதை ஊன்றுவதுபோல் ஊன்றிவிட்டது. அது, தினே தினே தானாகவே வளரவும் ஆரம்பித்தது. ஆனால், அவள் இதயத்தை விட்டு வெளியிட முடியுமா?

அத்தைவீட்டுக்கு வருவதற்கு முன்பெல்லாம் சற்றுச் சம்மதக் குறைவாயிருந்தது மாறி அத்தை அழைக்கும்போதெல்லாம் அவள் வீட்டிற்கு வரத்தொடங்கியதுடன், அவளுடன் அடிக்கடி படகில் செல்லவும் முந்திக்கொள்ள வாரம்பித்தாள். ஒவ்வொரு தினம் பசுபதியின் படகு அகப்படாமல், வேறு படகுகள் வந்துவிட்டால், நளினியின் மனம் வேதனையடைந்து தவிக்கவும் தொடங்கியது.

ஒரு தினம் அம்மன் திருவிழாவுக்காக நளினியும் அவள் அத்தை முதலானவர்களும் படகில் சென்றார்கள். அன்று செல்ல மறுதினந்தான் திரும்பப் போவதாகச் சென்றதால், அவர்கள் போவதற்கு மட்டுந்தான் படகு வைத்துக்கொண்டார்கள். பிரயாணிகள் இறங்கிச் சென்ற பிறகு வழக்கம்போல் பசுபதி படகைத் தன் ஊருக்கு ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான்.

அகஸ்மாத்தாக படகுக்குள் பார்க்கும்போது ஏதோ ஒன்று பளபளப்பாகத் தெரிந்ததும் வியப்புடன் பார்த்தான். அது கழுத்திலணியும் தங்கச் சங்கிலியாய் இருக்கக் கண்டதும் திடுக்கிட்டான். கையில் எடுத்துப் பார்க்கையில், சுமார் 15 சவரன்கள் எடையுள்ள இரண்டு வடம் சங்கிலி கொக்கி அறுந்துபோய் விழுந்திருந்தது. இப்போது இறங்கிச் சென்ற பிரயாணிகளுடையதுதான் அச் சங்கிலி என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

"உடனே அதைச் சொத்துக்காரர்களிடம் சேர்த்துவிட வேண்டும். அவர்கள் அதைக் காணாது என்ன தவிப்பார்களோ! வீணாக அவர்களை அலைய வைக்கக்கூடாது" என்றெல்லாம் அவன் மனம் போராடியது.

ஏற்கெனவே அன்று அதிக நேரமாகிவிட்டதால், அவன் தாயார் அவன் வரவுக்காக ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டு கரைமீது நின்றிருந்தாள். படகைப் பார்த்தவுடனே பரம சந்தோஷமடைந்தாள். பசுபதி கரைக்கு வந்து இறங்கிய பிறகே சங்கிலியைப் பார்த்தானாகையால் அவன் தாயாரிடம் பேசக்கூட அவகாசமில்லாது உடனே படகைத் திருப்பி ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

இரவு சுமார் 10 மணிக்கு மேல் ஆகிவிட்டது. இருள் எங்கு பார்த்தாலும் சூழ்ந்துகொண்டு பயங்கரமாய் இருந்தது. பசுபதி அவர்களை இறக்கிய கிராமத்து ஆற்றங்கரையில் படகைக் கட்டிவிட்டுச் சங்கிலியுடன் ஊரை நோக்கிச் சென்றான்.

கோபுரவாசலில் புகும்போதே நாலைந்து ஆடவர்கள் பரபரப்பாக ஏதோ பேசிக்கொண்டும் திட்டிக்கொண்டும் வருகையில் படகோட்டியின் கையில் சங்கிலி இருப்பதைக் கண்டு அவனை வளைத்துக்கொண்டு "திருட்டுப் பயலே! உன் படகில் பிரயாணம் செய்பவர்களை வழிபறிக் கொள்ளை அடிப்பதா உன் தொழில்? இதற்குத்தானா நீ வேறு தொழில் செய்யாது இந்தப் படகோட்டித் தொழில் வைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று தாறுமாறாய்க் கூறி, பொறித்தட்டும் நேரத்திற்குள் கண்மூடித்தனமாக நாலைந்து பேர்களும் சேர்ந்து அவனை அடித்து வீழ்த்திவிட்டார்கள்.

பசுபதியோ தன்மீது விழும் பேரிடி போன்ற அடியையும் லக்ஷ்யம் செய்யாது பொறுத்துக்கொண்டு, "ஐயா! நான் திருடனல்ல; கொள்ளைக்காரனல்ல. சொத்துக்காரர்களிடம் சொத்தைச் சேர்ப்பதற்கே அவர்களைத் தேடிக்கொண்டு வந்தேன். வீணாக என்னை அடித்துக் கொல்லாதீர்கள்" என்று எத்தனை வணக்கமாகக் கூறியும் 'கள்ளனின் சொல்லுக்குக் காது கொடுப்பாருண்டா?' என்கிற நிலைமையில் அவன் கதியாயிற்று.

கூட்டமோ ஏராளமாகச் சேர்ந்துவிட்டது. "என்ன! என்ன!" என்ற சப்தம் அண்டத்தை அளாவியது. பசுபதியின் சொக்காய் வேஷ்டி முதலியவற்றில் ரத்தம் சிந்தி கண்றாவியாக இருந்தது. அக் கூட்டத்தில் வந்த ஒருவர் பசுபதியின் கண்றாவியைப் பார்த்துவிட்டு, "ஐயோ பாவமே! நல்ல மனிதனை இப்படி அடித்துக்கொல்வது நியாயமா? ஏன் ஐயா அக்கிரமமாக கொலை செய்கிறீர்கள்? தொழில் முறையில் எவன் வேண்டுமாயினும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்கிற நோக்கங்கொண்டு இவன் படகோட்டிப் பிழைக்கும் குணவானாயிற்றே.

சென்ற வருடம் என் பணப்பை படகில் தவறிவிட்டது. நான் எங்கு விழுந்துவிட்டதோ என்று அலையும்போது மறுநாள் வீடு தேடிக்கொண்டு வந்து கொடுத்த உத்தமனாயிற்றே இவன். இவன் சொல்வது உண்மை. இவனை அடித்துக் கொல்லாதீர்கள்" என்று கூறினார். அதே சமயம் நகையின் சொந்தக்காரர்களும் வந்துவிட்டார்கள். பசுபதியை முரட்டுத்தனமாக அடித்திருக்கும் பரிதாபத்தைக் கண்டதும் நளினியின் உள்ளம் துடித்தது. அதே சமயம் அவனைப்பற்றி அங்கு சிலர் புகழ்ச்சியாகக் கூறும் வார்த்தைகளைக் கேட்டு மனம் உருகியது. ஆத்திரம் ஒருபுறம் பீறிக்கொண்டு வந்தது. அத்தையை நோக்கி "அத்தே! இதென்ன அநியாயம்? இவர்கள் அந்தப் படகோட்டியைக் குத்துயிர் குலை உயிராக அடித்துவிட்டார்களே! அவர் சொத்தை உன்னிடம் திரும்பக் கொடுப்பதற்காக வருகிறேன் என்று சொல்லும் வார்த்தையை யாரும் காதில் வாங்காது அடி அடி என்று அடித்துவிட்டார்களாமே பாவம்!" என்று தன்னையும் மீறிக் கூறிவிட்டாள்.

அதே சமயம் படகோட்டி, தட்டித் தடுமாறிக்கொண்டு நளினியின் அத்தை முன்பு வந்து, "அம்மணீ! இதோ உங்கள் பொருள். நான் படகைவிட்டு இறங்கும்போதுதான் இதைப் பார்த்தேன். இது தங்களுடையதாகத்தான் இருக்கவேண்டுமென்று உடனே படகைத் திருப்பிக்கொண்டு வந்தேன். நான் ஆண்டவன்மீது ஆணையாகத் திருடவில்லை. கொள்ளையடிக்கவில்லை. வீணாக என்மீது அபவாதத்தைப் புகுத்தி, இம்மாதிரி அவர்கள்

உதைத்துவிட்டதும் என் பாவந்தான். நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே போய்விட்டான். அடுத்த நிமிடமே கும்பலில் மறைந்தான்.

பிறகு வெகு நாட்கள் ஆற்றங்கரையில் பசுபதியின் படகையே காணுததால், நளினியின் மனம் ஆவல் கொண்டு அவனைப்பற்றி அறிய ஆசைப்பட்டது. ஒருதினம் கரையோரம் நின்ற மற்ருெரு படகோட்டியை நெருங்கி விசாரித்ததில், "பசுபதியை யாரோ வேண்டுமென்று அடித்து உபத்திரவித்துப் படுகாயப்படுத்திவிட்டார்கள். அதனுல் அவன் ஆஸ்பத்திரியில் கிடக்கிருன் பாவம்" என்று கூறினுன்.

இதைக்கேட்ட நளினிக்கு உள்ளம் பதைத்தது. ஏதோ ஆபத்து நேர்ந்து அவன் உயிருக்கே ஹானி வந்துவிட்டதாக எண்ணிவிட்டாள். பின்னும் சில தினங்களில் அவள் மீண்டும் சித்தி வீட்டிற்குப் போய்விட்டதால், அவனைப் பற்றிய தகவலே தெரியாது உள்ளுக்குள் உருகினுள்.

சில மாதங்கள் சென்று மீண்டும் அத்தை வீட்டிற்கு அழைப்பு வந்தபோது வெகு ஆவலுடன் வந்த அன்றே ஆற்றங்கரைக்குச் சென்று பார்த்தாள். ஒரு தகவலும் இல்லை. படகோட்டிக்குக் குணமாகியதா, இறந்துவிட்டானு? என்பதுபோன்ற எண்ணங்களே அவள் மனத்தில் போராடிக்கொண்டிருந்தன.

மறுதினமும் வழக்கம்போல் ஆற்றங்கரை மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில், படகோட்டியின் இனிமையான ஓடப்பாட்டு வெகு தூரத்தில் காற்றும் ஜலமும் சல சலவென்று சப்திக்கும் ஓசையுடன் கலந்துவரும் இனிமை காதில் விழுந்தவுடனே பட்டமரமும் பால் வடிவதுபோல் உலர்ந்துபோயிருந்த நளினியின் இதயத்தில் திடீரென ஆனந்த ஊற்றுச் சுரந்தது.

"அதோ! அதோ படகோட்டி வருகிருன்" என்று ஆவலுடன் தனக்குள் சொல்லிக்கொண்டு, கரையை நோக்கி நின்று அவனை எதிர் பார்த்தாள். படகோட்டி துரும்பாய் இளைத்துப்போய் அடையாளமே தெரியாமல் படகை ஓட்டிக்கொண்டு வரும்போது நளினி நிற்பதை அவனும் பார்த்ததுதான் தாமதம், தடை கட்டிய நாகம்போல் அசையாது அப்படியே நின்றுவிட்டான். தானுகவே பாட்டும் நின்றுவிட்டது. கண்கள் இமைகொட்டாது இந்த மரத்தடியை நோக்கி ஆணியறைந்ததுபோல் நின்றுவிட்டன.

படகு கரைக்கு வந்ததும் பிரயாணிகள் இறங்கிப்போய் விட்டார்கள். படகில் உட்கார்ந்திருந்த பசுபதி ப்ரமைகொண்டவன் போல் அப்படியே உட்கார்ந்திருந்தான். ஆனுல் வாய்திறக்கவில்லை.

பிரயாணிகள் சென்ற பிறகு நளினியே இரண்டடி முன்பு சென்று 'என்ன! அடையாளமே தெரியவில்லையே! ஆஸ்பத்திரியில் படுத் திருந்தீர்களாமே! இப்பொழுது ஒன்று மில்லையே?' என்று தன் மனத்தில் பொங்கும் அன்பு வேகத்தில் தானே முந்திக்கொண்டு கேட்டாள்.

படகோட்டி, இந்த மாதிரி நடக்குமென்று கனவுகூடக் காணவில்லையாதலால், கூறத்திறமற்ற ஆச்சரியமும் ஒருவிதமான அச்சமும் உண்டாகியதோடு, அவனால் தாங்கமுடியாத ஆனந்தமும் உண்டாகிவிட்டது. "இப்போது ஒன்றுமில்லை. உடம்பு இளைப்ப தும் பெருப்பதும் சகஜந்தானே! ஏதோ நான் செய்த பாபத்தின் நிழல் அம்மாதிரி எல்லாம் ஆட்டியது. உங்களைக்கூட கொஞ்ச நாளாய் காணவில்லையே! சௌக்யந்தானே?" என்றான்.

இம்மாதிரியான குசலப்ரசனத்தில் ஆரம்பித்த சிநேகம் நாள டைவில் பரஸ்பர அன்பாக மாறிக் கரையற்ற கடும் ப்ரேமையில் லயித்துக் கனிந்த காதலாக உருவாகிவிட்டதென்று கூறவேண்டுமா! அதுமுதல் அடிக்கடி ஆற்றங்கரையில் சந்திப்பதும் சிறிது நேரம் பேசுவதும் ஏதேனும் ஒரு சாக்குவைத்துக்கொண்டு படகில் சுற்று வதுமாக வாரம்பித்தாள்.

இம்மாதிரியாக சந்திக்கும்பொழுதுதான் நமது கதை ஆரம்ப மாயிற்று. கடிதத்தைக் கண்ட நளினிக்குச் சித்தியிடம் உடனே செல்லவேண்டுமென்ற ஆவலும் தடுக்க முடியாது உண்டாகியது. படகோட்டியைப் பிரியும் விசனமும் ஒன்று கூடியது.

நளினியை அனுப்பும்படி அவளுடைய அத்தைக்கும் கடிதம் வந்துவிட்டதால், மறுதினமே பிரயாணத்திற்குத் தயாராகும்படி அத்தையம்மாள் நளினிக்கு ஆர்டர் போட்டுவிட்டாள். மறு தினம் ஊருக்குப்போகும் விஷயத்தைச் சொல்லிக்கொள்வதற்கு நளினி படகோட்டியை எதிர்பார்த்தும் ஏமாற்றமே உண்டாகிவிட் டது. பழய கதைகளெல்லாம் அவளுக்குக் கண்முன்பு தோன்று வது போலாகிவிட்டது.

படகோட்டியைச் சந்திக்காமலேயே நளினி பிரயாணமாகி விட்டாள். வேறொரு படகில் அவள் பிரயாணத்தைத் தொடங்கும் போது அவள் கண்களில் ஜலம் தளும்பி வழிந்து விட்டது. மீண்டும் தான் எப்போது வந்து அவனைப் பார்க்கும் பாக்யம் கிடைக்குமோ என்று துக்கம் பொங்கிவிட்டது. ஆற்றில் படகில் போய்க்கொண் டிருக்கிறாள். மனமென்னமோ படகோட்டியைத் தாவிச் சென்று அலைகிறது. சரீரமென்னவோ படகில் போய்க்கொண்டிருக்கிறது.

# 5

பார்வதி, தன் மகன் எப்போது திரும்பி வருவான்? எப்போது அவனுடைய பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழலாம் என்று காத்துக்கொண்டு தூக்கம் பிடிக்காது இரவு முற்றும் புரண்டுகொண்டே கிடந்தாள். தன் மகனுக்கு அதனால் ஒருவிதமான தீங்கோ, அவமானமோ நேராதிருக்க வேண்டுமே என்கிற கவலையால் தவித்துப் பகவானைப் பிரார்த்தனை செய்த வாறே இரவை யோட்டினாள்.

பொழுது விடிந்தது. நேரம் சென்றுகொண்டே இருக்கிறது. வெய்யிலும் அதிக தீக்ஷிண்யத்துடன் கிளம்பி வந்துவிட்டது. இன்னும் பசுபதி வராததால், பார்வதிக்கு வீட்டுக்குள் போவதற்கே கால் எழவில்லை. இன்று எத்தனையோ உயர்வாக பிறந்த தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று முன் தினமெல்லாம் எண்ணிப் பூரித்ததற்கு நேர்மாறாக இன்று மகனே வீட்டிலில்லாது போய் விட்டதானது பார்வதிக்குத் தாங்கவியலாத துக்கம் உண்டாக்கி விட்டது.

'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்ற சோதனை வாக்கைப்போல் பார்வதி சற்றும் எதிர்பார்க்காதவிதமாய், பழனி யம்மாள் தனக்கு மிகவும் நெருக்கடியான அவசரமாயிருப்பதால் முன்பு கொடுத்திருந்த பணத்தை உடனே வாங்கி வரும்படியாகச் சொல்லி அனுப்பிவிட்டதைப் பார்த்ததும் அவளுக்குத் திடுக்கிட்டு மனம் பதறிவிட்டது. "நம் மகன் சொல்லியதுபோலவே எல்லாம் நடந்துவிட்டதே. நம்மை நம்பிக் கொடுத்த பணத்தை அதிகப் பிரஸங்கித்தனமாய் மூளையின்றிச் செலவிட்டுவிட்டோமே என்ன செய்வது, இப்போது அவனும் இல்லையே! யாரைக் கேட்டு வாங்கித் தருவேன்?" என்று தவிக்கிறாள்.

பணத்தைச் செலவிட்டு விட்டேன் என்று சொல்லவும் அச்சமாயிருந்ததால், தன் மகன் எங்கேயோ வெளியே போயிருக்கிறான், அவன் வந்ததும் தருகிறேன் என்று சால்ஜாப் சொல்லிவிட்டு மகன் வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நேரம் ஆக ஆக பார்வதியின் வயிற்றில் செய்யும் சங்கடத்தைக் கூறத் திறமேயில்லை.

வந்த ஆசாமி போகவேண்டுமென்று அவசரப்படுத்துகிறான். என்ன செய்வாள் பாவம்! இந்த நெருக்கடியான சமயத்தில்தான் பெண்புத்தி பின்புத்தி என்பதுபோல் அசட்டுத்தனமாய்ச் செய்து விட்ட வேலையின் விபரீதம் நன்றாக மனத்தில் பொத்தியது. சிறு

பிள்ளையாயினும் தன் மகனுக்கு இருக்கும் புத்தியும், யோசனையும், தனக்கில்லை என்பதை உணர்ந்தாள்.

அஸ்தமிக்கும் சமயம் பசுபதி வாடி வதங்கிச் சோர்ந்துபோய் வீட்டிற்கு வந்தான். திருட்டுப்பொருளை வாங்கியதற்கு 15 ரூபாய் அபராதம் போட்டுவிட்டார்கள். உடனே அதைக் கட்டாவிட்டால் வீட்டிற்கு அனுப்பமுடியாதென்றும் அதற்காக ஒருமாதம் சிறையி லிருக்கவேண்டுமென்றும் நியாயம் வழங்கப்பட்டுவிட்டது. தான் சேவகர்களுடன் கூடவே வந்து பணத்தை வாங்கிக் கட்டுவதாய் மன்றாடிக் கேட்டுக்கொண்டு தெரிந்தவர்களின் சிபார்சினால் மெல்ல விடுவிக்கப்பட்டான்.

வீட்டில் பழனியம்மாளின் ஆள் உட்கார்ந்திருப்பதைப் பார்த் ததும் அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவன், தன் தாயாரை எதிர்த்து ஒருநாளும் பதிலே பேசி அறியமாட்டான்; அதோடு அவள் மனம் நோகும்படியாக அவன் நடந்துகொண்டதும் கிடை யாது. அன்று காலை முதல் பட்டினி கிடந்ததனாலும் மன வேதனை யினாலும் பழனியம்மாளின் பணத்தையும் சோதனைபோல் இப் போதே கேட்க வந்திருப்பதை அறிந்ததாலும் அவனுக்குத் தன்னை மீறிய ஆத்திரமும் கோபமும் பொங்கி வந்துவிட்டன.

"அம்மா! என்பிறந்த நாள் கொண்டாட்டம் போதுமா? ஒரு வாய் பச்சைத்தண்ணீர்கூடப் பல்லில் வார்க்காது பல்லே கழுவாது தவிக்கும்படியாக உன் செய்கை செய்துவிட்டது. நீ அளவற்றப் பிரேமையுடன் செய்யப் புகுந்த காரியம் அளவற்றத் துன்பத்தில் என்னைப் புகுத்தியதுதான் மிச்சம்" என்று சலிப்புடன் கூறினான்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் தன்மீதுள்ள குற்றத்தை யறிந்த பார்வதிக்கு, ஒன்றுமே பதில் கூறமாட்டாது தொண் டையை அடைத்துக்கொண்டு துக்கம் வந்துவிட்டது. தழதழத்த குரலில், "தம்பீ! நான் உனக்குப் பெரியவளாகவிருந்தும் புத்தியில் கேவலம் முட்டாளாகிவிட்டேன். என் செயலுக்காக நானே வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு" என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

பசுபதியின் பரிதாபத்தைக்கண்டு அவனிடம் அபாரமான அன்பு கொண்டுள்ள நாட்டாண்மைக்காரன் தன் கையிலிருந்த பணத்துடன் இன்னும் சிலரிடம் கடனை வாங்கிப் பணத்தைக் கட்டி விட்டான். தன் மானம் போய் விடக்கூடிய நெருக்கடியான சமயத் தில் தன்னைக் காப்பாற்றி உதவிய நாட்டாண்மைக்காரனுக்கு, பார் வதியும் படகோட்டியும் நன்றியறிதலைக்காட்டி வந்தனம் செய் தார்கள்.

அன்று அவனுடைய பிறந்த நாளை வெகு விமர்சையாகச் செய்யவேண்டு மென்று அபாரமான ஆசையுடன் இருந்த பார்வதியின் மனம் முறிந்துவிட்டது. துன்பத்தைக்கொடுத்த கடவுள் அதை ஒருவழியாக நிவர்த்தித்துக் காத்ததற்காக தாயும் மகனும் மனமாறப் பகவானைத் துதித்தார்கள். பின்னர் சமையல் செய்து கடவுளுக்கு நைவேத்யம் செய்து தாங்களும் சாப்பிட்டார்கள்.

கவலையற்றுச் சிங்கக்குட்டிபோல் திரிந்த பசுபதிக்கு அவனுடைய நிலைமைக்குமேல் 27 ரூபாய் கடன் ஏற்பட்டுவிட்டதானது பெரிய மலையைப்போல் தோன்றி அதே கவலையும் உண்டாகிவிட்டது. தான் எப்படி அந்தத் தொகையை விரைவில் சம்பாதித்துக் கடனைத் திருப்பிக்கொடுக்கமுடியும் என்ற எண்ணமே அவன் மனத்தில் போராடத் தொடங்கியதால், இரவெல்லாம் தூக்கமின்றித் தவித்தான்.

தினம் தனக்குக் கிடைக்கும் கூலியில் தனக்கும் தன் தாயாருக்கும் ஒரு வேளைக்கஞ்சிக்கு வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு, மிச்சத்தை அப்படியே சேர்த்து நாட்டாண்மைக்காரனுக்குக் கொடுத்து விடவேண்டும். அப்படி நாம் தினம் கொடுத்தாலும் இத்தனை ரூபாய்கள் சேருவதற்கு எத்தனை நாளாகும் என்ன விதமாக நாம் பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்க முடியும் என்றெல்லாம் யோசித்து யோசித்து அவன் மூளையும் குழம்பிவிட்டது.

விடியற்காலை வழக்கம்போல் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, கடவுளை வணங்கி விட்டு ஆத்தங்கரைக்குச் சென்றான். மற்ற படகோட்டிகள் சவாரி அகப்படா விட்டால் வலை போட்டு மீன் பிடிக்கப் போய்விடுவார்கள். அம்மாதிரி பசுபதி போகும் வழக்கமே இல்லையாதலால் படகை நன்றாகத் துடைத்துச் சுத்தம் செய்து விட்டு, பிரயாணிகள் வருவார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

வெயில் ஏறுகிறதே யன்றி ஒருவரையும் காணவில்லை. பக்கத்துத் துறைகளுக்குப்போய்ப் பார்க்கலாமென்று படகுடன் அங்கு சென்றான். எங்கும் ஒரு சுமை ஏற்றக்கூட ஆள்வரவில்லை. என்ன செய்வான் பாவம்! மனம் முறிந்துவிட்டது. வெறுங் கையுடன் எப்படி வீட்டிற்குச் செல்வது? என்று வருந்தியவாறு படகைத் திருப்பினான். பசியின் கொடுமை ஒருபுறம் அவனைப் புரட்டி வதைக்கின்றது. வீட்டில் ஒரு சாமானும்இல்லையென்பது அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால், “தாயார் பட்டினியுடன் என்ன செய்கிறாளோ! பட்டினி கிடப்பது அவளால் தாங்கமுடியாதே. என்ன செய்வது? ஸ்ரீ தேவி! மகாலக்ஷ்மீ! கிருபாநிதி! நீ உன் கடைக்கண் பார்வையைக் கொஞ்சம் செலுத்தி, இன்று ஒரு பிரயாணியை

யாவது காட்ட மாட்டாயா!" என்று எண்ணியபடியே தன் வழக்கம்போல் பாரதியின் பாட்டைப் பாடிக்கொண்டு படகை ஓட்ட வாரம்பித்தான்.

நளினியும் அவளுடைய அத்தையும் இன்னும் வேறு சில பிரயாணிகளுடன் மற்றொரு படகில் ரயில்வே ஸ்டேஷனை நோக்கிச் செல்கிறார்கள். நளினியின் மன வேதனையைக் கூறத் திறமில்லை. படகோட்டியைப் பார்க்காது போகிறோமே என்கிற கவலை தான் அவளைக்கொன்று தின்றுகொண்டிருந்ததால், ஒருவரிடமும் பேசாமல் தன்போக்காக ஆற்றை நோக்கியபடியே போய்க் கொண்டிருந்தாள். பெருமூச்சும் திணறலும் அவளைத் துரத்தி யடித்தது. அச்சமயம் தூரத்திலிருந்து தேவகானம் போன்று படகோட்டி பாடும்,

மலரின் மேவு திருவே;—உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்;
நிலவு செய்யு முகமும்—காண்பார்
நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்—தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன்.

என்ற லக்ஷ்மி தோத்திரப்பாட்டு, சிறுகச் சிறுக ஒலிப்பதைக் கேட்டதும் நளினிக்குப் புத்துயிர் வந்தது போன்ற ஒரு புதிய ஜீவ சக்தியும் உள்ளக் கிளர்ச்சியும் உண்டாகி, அவளை ஒரு குலுக்கு குலுக்கிற்று. "படகோட்டி! படகோட்டி!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு நாதம் வரும் திக்கை நோக்கினாள்.

பொன்னு நல்லமணியும்—சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்!
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவி நிற்கும் அழகை
என்னுரைப்ப னேடீ!—திருவே!
என்னுயிர்க் கொ ரமுதே!
நின்னை மார்பு சேர்த்—தழுவி
நிக ரிலாது வாழ்வேன்.

—பாரதி.

என்ற அடிகளைப்பாடிக்கொண்டே படகு அருகில் வரும் போது நளினியின் தேகம் பூரித்தது. அவளை யறியாது மின்சாரம் தாக்குவதுபோல் தாக்கி இன்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்தது. தன்னுடன் அன்னியர் இருப்பதையும் மறந்து எட்டித் தலையை நீட்டிப் பார்த்தாள்.

பசுபதி மெய்மறந்த பக்தியுடனும் மனத்துயருடனும் லக்ஷ்மி தேவியின் மீது ப்ரார்த்தனையாகப்பாடும் இனிய கானத்தின் பொருள் நளினியின் மனப்பான்மைக்குத் தன்னையே அவன் குறித்துப் பாடுவதுபோல் தோன்றியது. படகு எதிர்முகமாய் வருவதால், அவள் எதிர் திக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

பசுபதி தன்போக்காகப் படகைத் தள்ளிக்கொண்டு வரும் போது எதிரில் வரும் படகை வெகு தூரத்திலேயே பார்த்தானே யன்றி அதில் நளினி வருவாள் என்று அவன் எவ்விதம் கனவுகாண முடியும்? மிகவும் சமீபத்தில் வரும்போதுதான் வெளியில் தலையை நீட்டிப் பார்ப்பது அவனுக்குத் தெரிந்தது. உற்றுக் கவனித்ததும் அம்மாதிரி பார்ப்பது நளினிதான் என்று தெரிந்து வியப்புக் கடலில் மூழ்கினான். "நளினி! நளினி!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே திகைப்பூண்டை மிதித்தவன்போல் அவளையே நோக்கினான்.

இருவருக்கும் உள்ளத்தில் பொங்கி எழும் அன்பு வேகத்தை அளவிட முடியாது. ஆனால், வாய் திறக்கவும் முடியவில்லை. இருவரது கண்கள்மட்டும் ஒன்றையொன்று விழுங்கி ஏப்பம் விடும்போல் போராடுகின்றன. பாட்டும் தானே நின்று விட்டது. நளினியின் படகில் அதிக ப்ரயாணிகளிருப்பதால், தான் இம்மாதிரி நின்று பார்ப்பதும் சரியில்லை என்றதை உணர்ந்ததும் அதற்குமேல் தான் நிற்பது பிசகும் சந்தேகாஸ்பதமும் ஆகும் என்றதை எண்ணி பசுபதி நகர வாரம்பித்தான்.

நளினி செல்லும் படகோட்டி பசுபதியைப் பார்த்து, "இன்னா அண்ணே! சவாரி ஒன்னு மில்லாமலே சும்மா போரயே" என்று தொழில் முறையில் குசலப்ரச்னம் செய்தான்.

பசு:—ஒன்னும் கிடைக்கலேப்பா! கடவுள் செயல் இன்று இவ்வளவுதான். வீட்டுக்குத் திரும்பிப்போகிறேன்—என்றான். இந்த இரண்டு படகோட்டிகளும் பேசும்போதுதான் நளினியின் அத்தை படகோட்டியைக் கவனித்தாள். முன்பு சங்கிலி சம்பவம் நடந்த பிறகு படகோட்டியை அத்தையம்மா சந்திக்கவே இல்லை. அதற்குக் காரணம் அவள் நோய்வாய்ப்பட்டிருந்ததொன்று; ஊருக்குப்போய் இருந்ததொன்று. ஆகையால், அன்று பசுபதியைப் பார்த்ததும் அவளுக்கு அவன்மீது ஐயோ பாவமென்கிற ஒரு பச்சாத்தாபமும் நன்றியும் உண்டாகியது.

உடனே தலையை வெளியில் நீட்டி, "எண்டாப்பா படகோட்டி! அடையாளமே தெரியவில்லையே! நீ எங்கத் துறைப் பக்கமே வரவில்லையோ! உன்னைப் பார்த்து நெடுநாளாகிவிட்டதே. நானும் சாகப்பிழைக்கப் படுத்துவிட்டதால், ஸ்வாமி தரிசனமே

செய்யவில்லை. அன்று நீ சங்கிலியைக்கொண்டு கொடுக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் வந்தும் மத்தியில் அசம்பாவிதமாய் நடந்துவிட்டதுபற்றி மிகவும் வருத்தப்படுகிறேன்" என்றாள்.

பசுபதி, தனது இயற்கையாயுள்ள சாந்தத்தை விடாது பேசத் தொடங்கி, "அம்மா! எல்லாம் ஈசனின் செயல். நம்மாலென்ன இருக்கிறது. நான் ஏதோ பகவானுக்கு அபராதம் செய்திருப்பேன்; அதன் பலன் கிடைத்தது" என்றான். அதற்குள் மணியாகிவிட்டதென்று அப் படகோட்டி எச்சரிக்கை செய்ததும் அத்தையம்மா ஒரு 5 ரூபாய் நோட்டை பசுபதியிடம் நீட்டி, "அப்பா! படகோட்டி! நீ செய்த உபகாரத்திற்கு இது ஒரு சன்மானமில்லை. ஆயினும் இதை எனது நன்றிக்கறிகுறியாய் வாங்கிக் கொள்ள வேண்டும்" என்றாள்.

பசு :—அம்மணீ! தங்களுடைய அபிமானம் இந்த ஏழையின்மீது என்றும் இருக்கவேண்டுமே யன்றி, இந்தப் பருமானம் தேவை இல்லை. என்னுடைய கடமையை நான் செய்ததற்குக் கூலி வாங்குவது தர்மமல்ல. ஆகையால், மன்னிக்கவேண்டும்—என்றான். முதல்நாள் முற்றிலும் அலைந்த அலைச்சலின் ஓய்ச்சலுடன் காலை முதல் பட்டினி கிடப்பதால், அவனுக்குப் பேசவும் முடியாத ஆயாசம் ஏற்பட்டது.

இதைக்கண்ட நளினிக்கு மனம் பதறுகிறது. அவன் பசியால் வாடும் பரிதாபம் முகத்திலேயே நன்றாகத் தெரிவதால், அவனுக்கு ஏதாவது ஆகாரங் கொடுக்க வேண்டுமென்ற ஆவல் அவள் உள்ளத்தைத் தூண்டியது. அத்தை என்ன சொல்வாளோ என்ற பயமும் கூடவே போராடியது. எனினும், தைரியமாய் பசுபதியை நோக்கி, "உங்களைப் பார்த்தால் ஆகாரமே இல்லாது பட்டினி கிடப்பது போல் தெரிகிறதே" என்று மெல்ல தானே ஆரம்பித்தாள்.

பசு :—அம்மணீ! பட்டினியும் பசியும் மனித தர்மத்தின் இயற்கையல்லவா! கடவுள் கொடுத்த அன்று வயிறுறச் சாப்பிட்டுச் சந்தோஷிப்பதுபோல் கொடுக்காதபோது அதையும் அபரிமிதமான சந்தோஷமாக நினைக்கவேண்டாமா?

என்று வெகு பொறுமையுடன் சொல்லும்போது நளினியின் கண்களில் ஜலம் தேங்கிவிட்டது. அத்தையின் முகத்தையும் அருகிலிருந்த பழக்கூடையையும் மாறி மாறிப் பார்த்தாள். அத்தைக்கும் பரிதாபகரமாயிருந்ததால், பழக்கூடையிலிருந்து ஒரு வாழைப்பழச் சீப்பையும், இரண்டு சாத்துக்கொடி பழத்தையும் எடுத்து படகோட்டியின் முன்பு நீட்டி "இந்தா! படகோட்டி! இந்தப் பழங்கள் எங்கள் தோட்டத்தில் உண்டானவை; சாப்பிடு" என்று பரிவுடன் கொடுத்தாள்.

பசியின் கொடுமை யொருபுறம் பாதிப்பதாலும், மரியாதைக் காகவும், பழங்களை வாங்கிக்கொண்டு வந்தனம் செய்தான். "ரயிலுக்கு நேரமாகிறது ; குழந்தை ஊருக்குப் போகிறுள். நான் வருகிறேன்...உம்...விடப்பா"...என்று உத்தரவிட்டாள் அத்தை யம்மாள். அடுத்த நிமிடம் படகு நகர்ந்துவிட்டது. பழத்தை வைத்துக்கொண்டே பசுபதி, 'பழம் கிடைத்தது. பலன் கிடைக்க வழி ஏது? படகுக்கும் ஆகாய விமானத்திற்கும் உள்ள வித்தியாச மல்லவா இருக்கிறது? சுத்த முட்டாள்தனமான யோசனை செய்து லாபமென்ன?' என்று தனக்குள் தான் எண்ணியபடியே நளினியை இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருக்கையில், படகு போய் விட்டது. நான்கு விழிகளுக்கும் ஏற்பட்டுள்ள யுத்தப் போராட்டத்தைப்பற்றி எழுதிச் சாத்தியமா?

படகு கண்ணுக்கு மறையும்வரையில் பார்த்துக்கொண்டிருந்தான். நளினி ஊருக்குப் போகிறுள் என்பதுமட்டும் தெரிந்ததே யன்றி, எந்த ஊருக்குப் போகிறுள் என்பது தெரியாது திகைத்தான். ஒருவர் உயிரை ஒருவர் கௌவிக்கொண்டு போவது போல் வேதனை உண்டாகியது. பிறகு சற்று தெளிவு பெற்றவனுய் இரண்டு பழங்களைத் தின்று தண்ணீர் குடித்துவிட்டுப் படகை ஓட்ட ஆரம்பித்தான்.

வீட்டில் ஒரு சாமானும் இல்லாமையினுல் தன் மகனுக்காக அரிசி பருப்பு முதலியவைகள் கொஞ்சம் கடன் வாங்கி பார்வதி சமையல் செய்து வைத்துக்கொண்டு காத்திருந்தாள். வெகு நேர மாகியும் தன் மகன் வராததால் திகில் பிடித்துக்கொண்டது. ஒரு கவலையும் அறியாதிருந்த சிறுவனுக்கு நம்மால் கவலையும், கடனும் உண்டாகிவிட்டதால் மனம் நொந்துபோய் என்ன செய்துவிட்டானே! எங்கு ஓடிவிட்டானே! என்கிற திகில் அவளைக் கொன்று வதைப்பதால், வீட்டில் இருப்புக் கொள்ளாது ஆற்றங்கரையி லுள்ள மரத்தடியிலேயே வந்து உட்கார்ந்துவிட்டாள்.

எத்தனையோ படகுகள் போகின்றன. எத்தனையோ வருகின்றன. தன் மகனை மட்டும் காணுது ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துப் பகவானை வேண்டிக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். பசுபதியின் இனிமையானப் பாட்டைக் கேட்டபிறகுதான் பார்வதியம்மாளுக்கு உயிர் வந்தது.

படகைக் கட்டிவிட்டு இறங்கி, தான் கொண்டுவந்த பழத்தைத் தாயாரிடம் கொடுத்து, "அம்மா! கடவுள் இன்று இதையாவது மனமுவந்து கொடுத்தாரே! அதுதான் நாம் செய்த பாக்கியம். இதைத் தின்று இன்றைய பொழுதைக் கழிப்போம். நாளை அவன்

விட்ட வழியாகட்டும்" என்று கூறிக்கொண்டே களைப்பின் மிகுதி யால் "அப்பாடா!" என்று மரத்தடியில் உட்கார்ந்தான்.

மகனுடைய களைப்பைக்கண்டு கலங்கிப் போய்விட்ட பார்வதி, "அப்பா! பசுபதி! வீட்டுக்கு வா! முதலில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு இங்கு வந்து உட்காரலாம்" என்ருள்.

பசு:—சாப்பாடா! வீட்டில்தான் மணி அரிசி இல்லையே! சாப்பாடு எப்படியம்மா செய்தாய்?

பார்:—தம்பி! கோபிக்காதே. நீ பட்டினி கிடக்க நான் பார்த்துச் சகிக்கமுடியுமா! அடுத்த வீட்டில் கொஞ்சம் கடன் வாங்கிச் சமைத்திருக்கிறேன். வாப்பா! சாப்பிட்டுவிட்டுப் பேச லாம்—என்ருள்.

பசுபதிக்கு அவனை மீறிக் கோபம் பொங்கிவிட்டது. "என்ன! கடனும்மா வாங்கி சாப்பாடு தயார் செய்திருக்கிருய்? ஐயோ! நான் சொன்னுல், உனக்குக் கோபம் வருகிறது. நேற்று பட்ட பாட்டில் இன்று கடன் வாங்க உனக்குத் தோன்றியதா? ஒரு மனிதனுக்கு எத்தனை வியாதிகள் பீடித்தாலும் அதைச் சகித்துக் கொள்ளலாம். கடன்காரன் என்கிற பெரிய வியாதி இருக்கிறதே அது அணுகாதிருந்தால் அவனைவிடப் பாக்யசாலி உலகத்திலேயே இல்லை.

அம்மா! காலணு பணமோ, காலணு சாமானே கடன் இருக் கிறதென்ருல் மனிதனைக் கால்பாகம் பீடை பீடித்துக்கொண்டு விட்டது என்று தான் அர்த்தம். நேற்று ஏற்பட்ட சங்கடத்தைத் தாங்காது நான் தவிக்கும் தவிப்பு உனக்குத் தெரியுமா? இத்தனை பணத்தையும் நான் எந்தக் காலத்தில் திருப்பிக்கொடுத்து விட்டு நிம்மதியாக விருக்கப்போகிறேன் என்றதை நினைக்கும்போது பகீ ரென்கிறது. இன்னும் சில்லரைச் சாமான்களும் கடன் வாங்கிப் பிழைக்கிற தென்ருல், ஒரு நாளா, 2 நாளா! எத்தனை நாளைக்குக் கடன் வாங்கி உயிர் வாழ முடியும்? என் மீதுள்ள அன்பு வேகத்தில் நீ செய்வதெல்லாம் எனக்கு விபரீதமாக விருக்கிறதே! எனக்குச் சாப்பாடு வேண்டாம். நீயும் இந்தப் பழத்தைச் சாப்பிடு. என்னைத் தொந்தரவு செய்யாதேம்மா! நீ வீட்டிற்குப் போ; நான் வருகி றேன்" என்று கூறினன்.

பார்வதி அதற்குமேல் எதுவும் பேசமாட்டாது வருத்தப்பட்டுக் கொண்டே வீட்டிற்குப்போய் விட்டாள். பசுபதி உடைந்த மனத் துடன் ஆகாயத்தை நோக்கியவாறு ஆற்றங்கரையில் படுத்து விட் டான். அவன் மனம் எண்ணுததும் எண்ணித் தவித்துக்கொண் டிருந்தது. துரதிருஷ்டம் சேரும்போது அன்ருடம் பிழைப்பைக்

கூட அந்த அபாக்கிய தேவதை, குலைத்துத் தன்னாட்சிபுரிவாள் அல்லவா! தொடர்ச்சியாக விடாமழை பிடித்துக்கொண்டு விட்டதால், படகு போவதற்கே பிரமேய மில்லாது போய்விட்டது. அதனால், பசுபதியின் பிழைப்பிலும் பெரும் மழை பெய்துவிட்டது போலாகிவிட்டது.

ஒருவாரம் சென்ற பிறகு சற்று அமைதி ஏற்பட்டு எப்போதேனும் ஒரு சவாரி கிடைக்க வாரம்பித்தது. நளினி இருக்கும் கிராமத்துத் துறைக்குப்போகும்போதெல்லாம் அவன் மனத்தில் நளினியைப்பற்றிய நினைவும் பழைய கதைகளும் ஞாபகத்திற்கு வந்து வருத்தும்.

அவனுடைய வாழ்க்கையில் பலவித கஷ்டங்கள், வறுமையின் சின்னங்கள் அந்தகாரம்போல் சூழ்ந்து கொண்டிருப்பினும் நளினியின் அபூர்வமான எழில்மிக்க ரூபத்தின் பிம்பம் அவன் மனத்தில் மின்வெட்டு போல் 'பளிச் பளிச்' சென்று பிரகாசித்து அவனை ஒரு க்ஷணநேரம் ஆனந்தக் கடலில் மூழ்கச் செய்திடும். அந்தக் கிராமத்துத் துறைப்பக்கம் வந்தால், 'நளினி எங்கேனும் நிற்பாளா? கண்ணால் கண்டு களிக்கும் பாக்யமேனும் கிடைக்குமா?' என்று ஏங்கித் தவித்துப் பித்தன்போல் நிற்பான். அதனால் அவன் அடைந்த முடிவு ஏமாற்றமும் வேதனையு முண்டாக்கிவிடும்.

தன்னுடைய நிலைமையில் அவளைப்பற்றி நினைப்பதைப் பிறர் அறிந்தால் பரிகஸிக்கமாட்டார்களா என்றும் அடிக்கடி தோன்றும். அவன் மகா புத்திசாலியாகையால் எதையும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், தன் காரியங்களைச் சரிவரக் கவனிப்பதும் பஜனை நடத்துவதும் பாமர ஜனங்களுக்கு நல்ல கதைகளையும் உலக விஷயங்களையும் போதிப்பதும் தவறாது செய்து வந்தான்.

ஒரு தினம் வெகு தூரத்தில் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகும்போது, இரண்டு மூன்று பேர்கள் அவசரமாகப் படகில் ஏற வந்தார்கள். அவர்களில் ஒருவர் பூர்வ கர்மத்தின் வினையினால் கொடிய வியாதி நிறைந்து தத்தளித்து நடக்கவும் மாட்டாது காணப்பட்டார். அவரைப் பார்த்ததும் படகில் இருந்த பிரயாணிகள் அசங்கியப்பட்டு, வெறுப்புற்று ஏளனமாகப் பேசினார்கள்.

பசுபதிக்கும் அவரை ஏற்றிக்கொள்வதற்கு யோசனையும் பயமும் உண்டாகியது. படகில் என்னவோ இடம் நிறைய இருந்தது. படகிலிருந்தவர்கள் படகோட்டியை நோக்கி, "ஏய்! படகோட்டி! அவரவர் விதியை அவரவர்கள் தொலைக்கிறார்கள். கொடிய வியாதிக்காரனாகிய இவன் மிதித்த மண்ணை மிதித்தாலும் வியாதி ஒட்டிக்கொள்ளும். நாங்கள் குழந்தை குட்டிகளுடன் வந்திருக்கிறோம். நீ பணத்திற்காக ஆசைப்பட்டுக்கொண்டு இந்த

வியாதிக்காரனை ஏற்றி விடாதே! நாங்கள் அத்தனை பேரும் இறங்கி விடுவோம். பணமும் கொடுக்கவே மாட்டோம்" என்று உடனே எச்சரித்து விட்டார்கள்.

வியாதிக்காரன் பாவம் கண்ணீர் பெருக படகோட்டியைப் பரிதாபமாக நோக்கி, "அப்பா! படகோட்டி! நான் அவசரமாக முருகன்பட்டி கிராமத்திற்குப் போகவேண்டும். என் சகோதரிக்கு உடம்பு ரொம்ப அதிகமாயிருக்கிறதாம். உடனே சென்றால்தான் மூச்சுடன் அவளைப் பார்க்க முடியும். இல்லாவிட்டால், பிரேதத்தைத்தான் பார்க்க நேரிடும். இந்த ஆபத்தான சமயத்தில் நீ யோசிப்பது தர்மமா? அவரவர்களின் கர்ம விதிப்படி வியாதி வருவதும் அனுபவிப்பதும் அமைகிறது. இதற்குப் பயந்து பேசுவது உண்டா? பிரயாணிகளை ஏற்றிச்செல்வது உன் தொழிலும் கடமையும் அல்லவா?" என்று கூறிக்கொண்டே படகில் ஏற வந்தான்.

உடனே படகிலிருந்தவர்கள் கூடாதெனப் பெரிதாகக் கூக்குரல் போட்டார்கள்.

படகோட்டிக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. அவன் வியாதிக்காரனை வழிமறித்து, "ஐயா! நீர் தயவு செய்து விலகி நில்லும். 'கொள்ளைக்காரனுக்குப் பயப்படாவிட்டாலும் கொடிய வியாதிக்குப் பயந்தே தீரவேண்டும்' என்பது பழமொழி. உமது ஆபத்தான நிலைமையைப்பற்றி நீர் கவலைப்படுவது நியாயந்தான். ஆனால், நான் என்ன செய்யமுடியும்? உம்மை ஏற்ற முடியாது" என்று சற்றுக் கண்டிப்பாகவே கூறினான்.

வியாதிக்காரனின் கண்ணீர்த் தாரைகள் பூமியில் உருண்டு உடைந்தன. அவன் மிகவும் வணக்கத்துடன் பேசத் தொடங்கி, "அப்பா! படகோட்டி! நானும் முன்பு இந்தப் பிரதேசங்களில் எத்தனையோ படகுகளில் பிரயாணம் செய்திருக்கிறேன். அவர்களும் உன்னைப்போல மனிதர்கள்தான். உன்னைப் போன்று நிர்த்தாக்ஷிண்யமாய் ஒரு வார்த்தைகூடப் பேசியதே கிடையாது. இங்கு வேறு படகுகள் இல்லாமையாலும் என் அவசரத்திற்காகவும் நான் இதில் ஏறத்தான் போகிறேன். உனக்கு மனத்தில் தயை என்பது கிடையாதா? என்னைப் பார்த்து நீ பயப்படுவதால், உன் கர்மாவும் இதுபோலிருந்தால், உன்னை விடுமா?" என்று அவன் மனவருத்தத்தின் வேகத்தினால் சற்றுச் சாபமிடுவதுபோலவே பேசிவிட்டான்.

அவன் அம்மாதிரி பேசியதுமட்டும் பசுபதியின் மனத்தில் சுருக்கென்று தைத்தது. சிறிது கோபமும் வந்தது. "ஐயா! எத்தனை ஜென்மாந்திரத்தின் கர்மாக்கள் சேர்ந்து இம்மாதிரி அனுபவிக்கிறீரோ! அத்துடன் என்னையும் சாபமிடுகிறீர்களா! போம் ஐயா! போம். இத்தனை பிரயாணிகள் பயந்து நடுங்கும்போது

நான் ஏற்றமாட்டேன்'' என்று கண்டிப்பாய்க் கூறியவாறே படகை ஓட்டிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

வியாதிக்காரனின் உள்ளம் எப்படித்தான் துடிக்கும்? தன் விதியை எண்ணிக் கண்ணீர் ஆருய்ப் பெருகியபடியே கல்லு போன்று நின்றுவிட்டான். "ஏ கடவுளே! இப்படியுமா ஒரு ஜென்மாவைப் படைத்து ஆட்டுவாய்? இதுதான் உன் லீலையா! என் தங்கையின் உயிரைக் காப்பாற்றி, அதற்குப் பதில் என் உயிரைக் கொண்டுபோய் விடக்கூடாதா?'' என்று பெரிதாகக் கத்திக் கதறிவிட்டான்.

படகையோட்டிக்கொண்டு செல்லும் பசுபதி, சற்று தூரம் சென்று திரும்பிப் பார்த்தான். வியாதிக்காரனின் கண்ருவியான புலம்பல் அவன் காதில் விழுந்ததும் அவனை யறியாது மனம் உருகியது. எனினும், படகு நிற்காது போய்க்கொண்டிருந்தது. வியாதிக்காரனின் கண்ணீரும் அந்த ஆற்று ஜலத்துடன் கலந்து போய்க் கொண்டிருந்தது.

## 6

நளினி படகில் பசுபதியைக் கண்டு பிரிந்து போகும்போது அவள் மனம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. பசுபதியை இனிமேல் எப்பொழுது பார்க்கப்போகிருேம் என்கிற ஏக்கமும் மலைபோல் நெஞ்சை அழுத்தியது. ஒருவாறு பிரயாணங்களை முடித்துக்கொண்டு தன் சித்தி இருக்கும் ஊருக்கு வந்தாள்.

ரயில்வே ஸ்டேஷனை அடைந்ததும் வழக்கம்போல் மருதன் இரட்டைமாட்டு வண்டியைக் கொண்டுவந்திருந்தான். நளினியின் சிறிய தகப்பனும் அன்று நளினியை வரவேற்க வந்திருந்ததானது அவளுக்கு வியப்பிலும் வியப்பாக விருந்தது. "நளினீ! வாம்மா! சௌக்கியமா? நீ இல்லாது உன் சித்திக்கு உலகமே இருண்டு போய்விட்டதுபோல் இருந்தது. உடம்பு ஒன்றும் இல்லாதிருக்கிருயா?'' என்று குசலப்பிரச்னம் செய்தான்.

நளினி :—சௌக்கியந்தான் சித்தப்பா! சித்தி எப்படி இருக்கிருள். மங்களம் சித்தியுடன்கூடவே இருந்து கவனித்துக்கொள்கிருளா! ஏது நீங்க ரயிலடிக்கு வந்தது?

சித்தப்பா :—அடுத்த ரயிலில் என் சிநேகிதர் ஒருவர் வருகிருர். அவரைப் பார்க்க வந்தேன். அதற்குச் சற்று முன்பே வந்தால் உன்னையும் பார்க்கலாமே என்று சீக்கிரம் வந்தேன். மருதன்

வண்டி கொண்டுவந்திருக்கிறுன். நீங்கள் இருவரும் முதலில் போங்கள். நான் பிறகு வருகிறேன்—என்று கூறினுன்.

உடனே மருதன் மூட்டைகளை வண்டியில் ஏற்றினுன். நளினியும் அவள் அத்தையும் வண்டியில் பிரயாணமானுர்கள். சீதாலக்ஷ்மி நளினியின் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தபடியே தோட்டத்தில் உட்கார்ந்திருந்தாள். நளினியைக்கண்டதும் அவள் பெரிய வரநிதியைக்கண்டதுபோல் வாரியணைத்துக் கட்டிக்கொண்டு முகத்தோடு முகம் பதித்தாள். ஆனந்தக்கண்ணீர் நளினியினுடைய தலைமயிரை நனைத்துவிட்டது. "கண்மணீ! நளினி! உன்னைப் பார்க்காமல் என்னுல் இருக்கவே முடியவில்லை. சதா உன் நினைவாகவே பித்து பிடித்து இருக்கிறேன்...நளினியின் அத்தையை நோக்கி, "என்னம்மா! சௌக்யமா! வீட்டில் எல்லோரும் சுகந்தானே...நீங்கள் ஸ்நானம் செய்யப்போங்கள். நேரமாகிறது...நீயும் குளிக்கப் போம்மா" என்று வாஞ்சையுடன் கூறினுள். நளினியின் அத்தை ஸ்நானத்திற்குச் சென்றுள்.

நளினி:—சித்தி! இன்று ஒரு புதிய அதிசய சம்பவம் நடந்ததே உனக்குத் தெரியுமா?

சீதா:—அதென்னம்மா! எனக்குத் தெரியாதே. இப்போதுதான் வருகிருய். இதற்குள் என்ன அதிசயத்தைக் கண்டாய் கண்ணூ!

நளினி:—அதை என் கேட்கிருய்? இன்று சித்தப்பா ரயிலடிக்கு வந்து என்னை வரவேற்றுர்.

சீதா:—(வியப்புடன்) என்ன! என்ன! சித்தப்பாவா! உன் சித்தப்பாவா! நிஜமாகவா!

நளினி:—ஆமாம்; சித்தி! நான் வந்ததும் வராததும் பொய் கூடச் சொல்வேனு? நம்ப சித்தப்பாதான் வந்திருந்தார். அவர் நான் இல்லாது நீ மிகவும் துன்பப்பட்டு உருகுவதாயும் கூறினுர். எனக்கே ஆச்சரியம் தாங்கமுடியவில்லை சித்தி!

சீதா:—அடாடா! இதென்ன ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! என்னைப்பற்றிய ஞாபகங்கூட அவருக்கிருந்து பேசினுரா! இந்தச் செய்தி என்னுல் நம்பவே முடியவில்லையே! கண்ணூ! நீ இம்முறை ஊருக்குப்போன பிறகு இன்னும் நான் உன் சித்தப்பாவின் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை. அத்தனை தௌர்ப்பாக்யசாலியாக விருக்கிறேன். உம். என் விதிக்கு யாரை நோவது? உன் மீதிலாவது பிரியமாக விருக்கிருரே அதுவே என் பாக்யம்—என்று கூறும்போது அவள் கண்களில் மளமளவென நீர் வழிந்துவிட்டது.

நளினி:—என் சித்தி! சித்தப்பா இங்கு வரவே இல்லையா! உன்னைப்பற்றி விசாரிக்கவும் இல்லையா?

சீதா :—என்னைப்பற்றி என்ன விசாரம் கண்ணா ! அவருக்குத் தற்சமயம் கல்யாண விசாரந்தான் பெரிதாக இருக்கிறதே !

நளினி :—என்ன ! என்ன ! சித்தப்பாவுக்கா கல்யாணம் ? நீ இருக்கும்போதா மறுகல்யாணம்? என்ன சித்தி ! விளையாடுகிறாயா?

சீதா :—கண்மணி ! உன்னுடன் நான் விளையாடுவதற்கு இது தானா விஷயம் கிடைத்தது! விளையாட்டேயல்ல; முற்றிலும் உண்மை. நளினி ! நான் இருந்து என்ன பிரயோஜனம் ? என்னைத் தன் மனைவி என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட அவர் வெட்கப்பட்டுக் கொண்டு என்னைத் தனியே வைத்திருக்கும்போது என்னைப்பற்றி அவருக்கு என்ன கவலை கண்ணா ! இதை நீ அறிந்தால் விசனப்படு வாயே என்று உன்னிடம் தெரிவிக்காது நீ எப்படியாவது சந்தோஷ மாயிருந்தால் போதுமென்றிருக்கிறேன். நான் என்ன உலகத்தவர் களைப்போல் அவருக்குத் தகுந்தமாதிரி இருக்கிறேனா? நான் ஒரு முடமல்லவா ?—என்று கூறும்போது சீதாவின் கண்கள் மடை திறந்துவிட்டது போலாகிவிட்டன.

நளினி, சித்தியை அணைத்துக்கொண்டு, அவள் கண்ணைத் துடைத்தவாறு, "சித்தி ! நீ என்ன பிறக்கும்போதே முடமாகப் பிறந்தாயா ? மத்தியில் தலைவிதியால் ஏற்படும் கர்மத்திற்கு யாரால் தான் என்ன செய்யமுடியும் ? இதெல்லாம் தெய்வச் செயலல்லவா ? அவர் இன்னொரு விவாகம் செய்துகொண்டால் மட்டும் அவளுக்கு உன்போல் ஆபத்து வந்துவிட வெகு நேரமாகுமா ? மகாமாயி விளை யாடி எத்தனை பேருடைய அழகைக் குறைக்கவில்லை. எத்தனை பேருக்கு அங்கஹீனம் உண்டாகவில்லை. வாயே பேசமாட்டாது எத்தனை பேருக்குப் போய்விடவில்லை. என் சித்தப்பாவுக்கே பக்க வாதம் வந்து விழுந்துவிட்டால் அவரைத் தள்ளிவிடுவதா !" என்று தாங்கமாட்டாத ஆத்திரமும் விசனமும் கலந்த தொனியில் பட படத்துக் கூறினாள்.

சீதா அவளை அமர்த்தி, "குழந்தாய் ! பதறாதே. ஆத்திரப்பட்டு வாயை விடாதே! என் தலைவிதியை வெல்ல யாராலாகும் ? நான் என் கண்முன்பே என் கணவன் இன்னொருத்தியுடன் குடித்தனம் செய்வதைப் பார்க்க வேண்டுமென்றும், அவளால் இன்னும் என் னென்னவோ சிறுமைப்படவேண்டுமென்று மிருந்தால் அவை களைப் பட்டுத்தானே ஆகவேண்டும். கண்ணீர்விடாதே ! நீ முதலில் ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வா ! உங்க அத்தை வந்து விடு வார் " என்றாள்.

நளினி ஆத்திரத்துடன், "சித்தி ! நான் ஒருநாளும் இதைச் சகிக்கமாட்டேன். நானே சித்தியாவிடம் சென்று இது விஷயமாக சண்டை போட்டுத்தான் தீரப்போகிறேன். பெண்களுக்குமட்டும்

புருஷன் எப்படிப்பட்ட நோயாளியாய் இருப்பினும், இறந்து போய்விடினும் அடியோடு பாழாகிச் சாகவேண்டும். ஆண்கள் மட்டும் மனைவி உயிருடன் இருக்கும்போதே மணந்துகொண்டு வாழவேண்டும். இதென்ன அக்கிரமம். நீ உன் தலைவிதி என்பது போல் அவரும் தன் விதி என்று எண்ணி, இந்தச் சிறிய தியாகத் தைக்கூடச் செய்ய புருஷர்களுக்கு உரிமை இல்லையா? அவர் களுக்குமட்டும் கற்பும், சத்தியமும், நீதியும் கிடையாதா? நான் இதைச் சும்மா விட்டுவிடப்போவதில்லை" என்று கூறிக்கொண்டே ஸ்நானத்திற்குச் சென்றாள்.

சாப்பாடானபிறகு நளினியின் அத்தை ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள். நளினியும் தன் சித்தப்பாவைக் கண்டு சண்டை செய்யத் தயாராயிருந்தாள். சீதா அம்மாதிரி செய்யக்கூடாதென்று அடக்கிக்கொண்டே இருந்தாள். ஆனால், இருவரையும் ஏமாற்று வதுபோல் அன்று இரவு 10 மணியாகியும் ரகுநாதன் வீட்டிற்கு வாராததால் நளினி ஏக்கமுற்று எதிர்பார்த்தபடியே, பிரயாணத்தின் அலுப்பால் நன்றாய் தூங்கிவிட்டாள்.

சீதாவுக்குக் கவலையால் தூக்கமே பிடிக்காது புரண்டுகொண் டிருந்தாள். இரவு 1 மணி இருக்கும். எங்கும் நிசப்தம் குடிகொண் டிருந்தது. ஆனால், சீதாவின் நாத்திகள் மட்டும் வடக்குப் பக்கத்து பெண்ணை நிச்சயம் செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்த பேரிரைச்சல் சீதாவின் காதில் ஒன்றிரண்டு சிதறி வந்து பட்டது.

"அந்தோ! அவர் கல்யாணம் செய்துகொண்டு சுகமாய் வாழ்வதற்குத் தடங்கலாய் சனிபோல நானல்லவா குறுக்கே நிற் கிறேன். என் உயிர் நீங்கிவிடுமாயின் அவர் சந்தோஷமாய் மணந்து கவலையின்றி வாழலாமே! ஈசா! என்னைப் படைத்தாய்; பரிதவிக்கச் செய்தாய்; இனியாவது என்னை உன் திருவடி சேர்த்துக்கொண்டு எனக்கு நிம்மதியை அளிக்கமாட்டாயா?" என்று எண்ணி கண் ணீர்விட்டுப் புலம்பிக்கொண்டிருக்கையில், அவ் அறைக் கதவை யாரோ மெல்ல தட்டும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டாள்.

நல்ல நடு நிசியாகையினால், வேலைக்கார மங்களம் வெளித் தாழ் வாரத்திலும், நளினி தனது தனி அறையிலும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். சீதாவுக்கு உள்ளுக்குள் பயம் உதைக் கின்றது. எழுந்து கதவைத் திறக்கவும் திகில் கையைப் பின்னுக்கு இழுக்கிறது. கதவை விடாது மெல்ல தட்டிக்கொண்டே, "சீதா! சீதா!" என்று மெல்லிய குரலால் அழைப்பது கேட்டதும் சீதா ஒன்றுமே தோன்றாமல் திகைப்புற்று, இந்த நடு ராத்திரியில் யார் என் பெயரைக் கூறி கதவிடிப்பது என்று யோசித்தபடி, நடுநடுங் கிப்போய், மங்களம் என்று மெல்ல ஒரு குரல் கூப்பிட்டாள்.

கதவிடிக்கும் பேர்வழி, "சீதா! பயப்படாதே! நான்தான் ரகுநாதன். மங்களத்தைக் கூப்பிடாதே! கதவைத் திற" என்று கூறியதைக் கேட்டதும் சீதாவுக்குத் தன் காதையே நம்பமுடியாமல், வியப்புக் கடலில் மூழ்கினுள். ஒரு வேளை யாராவது திருடன் இம்மாதிரி கூறுகிருனே என்ற சம்சயமும் உண்டாகியது. இருப்பினும் தன்னை மெல்லத் தேற்றிக்கொண்டு, படுக்கையில் நகர்ந்து உட்கார்ந்தபடியே கதவைத் திறந்தாள்.

சீதா, தன் கண்களேயே நம்ப முடியவில்லை. "என்ன! தாங்களா! என் ப்ராணபதியா! உண்மையிலா!" என்று வாய்க்குளறியவாறு கேட்டாள். வெயர்வை வெள்ளம்போல் பொங்கிவிட்டது. ரகுநாதனைக் கண்ணுல் கண்டே எத்தனையோ மாதங்களாகிவிட்டன. அதோடு பக்கத்தில் வந்து அவன் உட்கார்ந்து வருடக்கணக்கில் ஆகியிருக்கையில், இன்று தானுக வந்து பக்கத்தில் உட்கார்ந்த சந்தோஷத்தை அவள் எப்படித்தான் பொறுக்கமுடியும்?

ரகு :—உஸ்ஸ்ஸ். இரையாதே சீதா! நான்தான் வந்திருக்கிறேன். சந்தேகப்படாதே!

சீதா :—இது நினைவில் நடக்கும் காட்சியாயின் என் ஜன்மம் சாபல்யமாகியது. நான் புனர்ஜென்மம் எடுத்தவளாகிவிட்டேன். இந்தப் பரதேசியின்மீது இப்போதாவது கிருபை பிறந்ததா? இனி, என்னைக் கைவிடமாட்டீர்களே!

ரகு :—சீதா! ஏதேதோ பேசுகிருயே! உன்னை நான் மறந்திருந்தால், இப்போது வருவேனு! சீதா! நான் சந்தோஷமாயும் சுகமாயும் இருக்க வேண்டுமென்பதுதானே உனது பிரார்த்தனை.

சீதா :—அதைவிட எனக்கு இந்த ஜென்மத்தில் வேறு என்ன இருக்கிறது? உங்களுடைய க்ஷேமத்தைக் கோருவதும் சதா உங்களுக்கு நன்மையைச் செய்வதுந்தானே என் பிறவியின் கடமை. இதைக் கேட்கவும் வேண்டுமா!

ரகு :—அப்படியானுல் எனக்கு ஏமாற்றம் இருக்காதல்லவா! கணவனின் விருப்பப்படி நடப்பவள்தான் உத்தம கற்பரசி என்பது வேதவாக்கன்ருே?

சீதா :—நீங்கள் போடும் பீடிகை எனக்கொன்றுமே விளங்கவில்லையே! இத்தனையும் உங்கள் சகோதரிகள் நிச்சயித்திருக்கும் விவாகத்தைப்பற்றிய.......

ரகு :—சேச்சே! என் சகோதரிகளாவது, விவாகமாவது? அதெல்லாம் ஒன்றுமில்லை. உன்னுல் ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இப்போது இங்கு வந்தேன். சத்தம் செய்யாமல் பேசு. எனக்காக நீ கட்டாயம் செய்வாய் என்ற நம்பிக்கையுடன் இங்கு வந்திருக்கிறேன்.

சீதா:—அன்பரே! தாங்கள் என்னுயிரைக் கேட்டாலும் தங்கள் காலடியில் விடத் தயாராயிருப்பதை நீங்கள் அறியமாட்டீர்களா? சொல்லுங்கள். இத்தனை பீடிகை எதற்கு?—என்று தன் கணவனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு கூறினாள்.

இவர்கள் பேசும் சந்தடியைக்கேட்டு மிகவும் மெலிக்கையான நித்திரையையுடைய நளினி சடக்கென்று விழித்துக்கொண்டாள். முதலில், கள்ளனோ என்று நடுங்கிப்போய் மெல்ல கதவு வழியால் பார்த்தாள். அவளும் சீதாவுக்குமேல் வியப்பும் திகைப்புங் கொண்டு பூரித்தாள். தன் சிறிய தாயாரின் கஷ்டம் விடிந்து விட்டதாக அப்போதே எண்ணி விட்டாள். அவர்கள் பேசும் போது தான் குறுக்கே பேசக்கூடாதென்று கதவின் பின்னலேயே நின்றாள். அப்போதுதான் ரகுநாதன் கேட்டதும் சீதா பதில் சொல்லியதும் நடந்தது. "என்ன கேட்கப்போகிறார்? கல்யாணத்திற்கு உத்தரவு கேட்பாரோ?" என்று நளினிக்குத் தோன்றியதால், அவள் அசையாது நின்றாள்.

ரகு:—சீதா! பிறகு என்மீது கோபிக்காதே! என்னைத் திட்டாதே! நான் என் சுய உணர்வற்ற பித்தன்போல் இருக்கிறேன். இரவு பகலாக நான் படும் வேதனையோ கூறத் திறமன்று. நான் உனக்கு உயிருடன் பிழைத்திருக்கவேண்டுமாயின், நம் கண்மணி நளினியை எனக்கு விவாகம் செய்து...என்று கூறிமுடிப்பதற்குள், சீதா தீயை மிதித்தவள்போல், "என்ன சொன்னீர்கள்! என்ன!... என்ன! ஹா!...நளினியை...விவாகமா...நீங்களா...ஐயோ!" என்று இடி இடித்தவள்போல் துடிதுடித்துக் கூறியவாறு, கல்லாய்ச் சமைந்து விட்டாள். கதவின் பின்னல் நிற்கும் நளினிக்கும் தூக்கி வாரிப்போட்டது. ஆகாயமும் பூமியும் ஒன்ருகச் சுற்றுவதுபோல் தோன்றியது. அப்படியே துவண்டுபோய் அவளும் கீழே விழுந்து விட்டாள். அவள் இதயம் துடியாய்த் துடித்தது. என்ன கதியாக முடியுமோ? யார் விதியை யார் கண்டது?

183038


2-வது பதிப்பு

வெளிவந்து விட்டது

**மகிழ்ச்சி உதயம்**

"உளுந்த இதய"த்திற்குத் தொடர்ச்சியான இது, ஒவ்வொரு வரியிலும் உங்களைப் பரவசமுறச் செய்யும் சக்தி வாய்ந்தது. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஆனல் முன்விலைதான்.

அணு 10 | சந்தா நேயர்களுக்கு | அணு 8

| |
|---|
| 13-வது ஆண்டி லிருந்து இதுவரை சந்தா நேயரா ? |

"இன்பஜோதி" ஆரம்பம் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து,
தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷச் சந்தாவை
டிசம்பர் 20-ந் தேதிக்குள் அனுப்புகிறவர்களுக்கு

## தனிப் பரிசு

17-வது ஆண்டுச் சந்தாவை அனுப்புகையில் உங்களது சந்தா நம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழுவிலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலையல்ல.) பெறுமான நாவல்களின் பெயரை எழுதி இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனாம் நாவல்களின் தபாற் செலவுக்காக(ரிஜிஸ்டிரேஷன் செலவு உள்பட)உள்நாட்டினர் அணா ஆறும், வெளிநாட்டினர் அணா எட்டும் சேர்த்து அனுப்பவும்.

குறிப்பு :—14, 15, 16-வது ஆண்டுகளில் இனாம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 17 வதாண்டுக்கும் பெற முடியாதென்பதைக் கவனிக்கவும்.

## 17-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

**முதல் பரிசு** ரூ. 20

**2-வது பரிசு** ரூ. 15

புது வருஷச் சந்தாவை டிசம்பர் மாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு 6 பிரைஸ் சீட்டுகளை எடுத்து அவற்றிற்கு இதிற் கண்ட பரிசுகள் கொடுக்கப்படும்.

**3-வது பரிசு** ரூ. 10

**3 பரிசுகள்** ரூ. 5 விகிதம்

**3** சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு, 17-வது ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

" ஜகன்மோகினி " ஆபீஸ், 26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

"JAGANMOHINI" Vol. XVI No. 11 Regd. No. M. 2210




தலைவலிக்கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.